# NIE

# சுவடு

# සුවඩු

# SUVADU

பட்டப் பின் படிப்பு கல்வி டிப்ளோமா
தமிழ்ப் பிரிவு (கொழும்பு)
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

*Post Graduate Diploma in Education*
*Tamil Section (Colombo)*
*National Institute of Education*
*Maharagama.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



I am much pleased to write this message for the first magazine published by the Colombo Regional Centre of the Post Graduate Diploma in Education (Tamil Medium) Course.

On reflecting back on my first few years as a teacher I can remember how I had to complete five years of teaching before sitting for the competitive examination to follow the Post Graduate Diploma in Education Course.

Now the graduate teachers could follow this course at Regional Centres just after joining the teaching profession without having to sit for an entrance examination. Hence the teachers should make use of this opportunity and follow the course diligently.

After completing this course one should remember that it is not a training for one's entire career. Rapid changes are taking place in the sphere of education and teachers should follow in - service courses and also read the latest publications on education to keep abreast of these developments. Publication of magazines like this is another means to disseminate new knowledge.

Knowledge and skills are not the only attributes of a good teacher. In addition he should be a very compassionate person. Then only will the students interact with him and be responsive to him. I wish the teachers completing this course will be competent and compassionate.

I am much thankful to the Senior Lecturer, Mr.V.Kuhatharan, the other Lecturers and the teachers for the efforts and commitment shown by publishing this magazine.

A.D. Gunasekers
Director
Department of Post Graduate
Teacher Education.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from*

# Jayasundera Importers

Importers, Trade Promoters
&
Manufacturers Representatives

U.G. 43, Peoples Park Complex,
Gas Works Street, Colombo 11, Sri Lanka.

Tel: 432414, 331007 Telex: 22762 MULTRA CE.
Fax: 941 - 422649 / 331007

*With best compliments from:*

# Supreme Stationers

**Dealers in Stationery & Office Supplies**

No.61, 2nd Cross Street, Colombo 11.
Tel: 432469

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரியர் கல்வித்துறை செயற்றிட்ட அதிகாரி அவர்களின் ஆசிச் செய்தி

தேசிய கல்வி நிறுவகத்தினால் நடாத்தப்படும் பட்டப்பின்கல்வி டிப்புளோமா பயிற்சி நெறியை வழங்கும் மத்திய நிலையங்களுள் கொழும்பும் ஒன்றாகும். இந்நிலையத்தில் 1992/1993 ஆம்வருட மாணவர்களின் பெரு முயற்சியினால் வெளிவரும் இம் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் நான் இரட்டிப்பு மகிழ்ச்சியடைகின்றேன். இந்நிலையம் ஆரம்பித்த காலம் தொடக்கம் ஏறக்குறைய ஒரு வருட காலமாக இங்கு சிரேட்ட விரிவுரையாளராகக் கடமையாற்றியுள்ளேன். இக்கால கட்டத்தில் நான் பெற்ற அனுபவம் என்னைத் தேசிய கல்வி நிறுவகத்தின் ஆசிரியர் கல்வித்துறையில் செயற்றிட்டதிகாரியாகப் பொறுப்பேற்பதற்குரிய சந்தர்ப்பத்தை வழங்கியது. ஆகவே, இந்நிலையத்தின் வளர்ச்சியில் எனக்கும் பங்குண்டு என்பதைக் கூறிக்கொள்வதில் பெருமிதமும் பெரு மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

இந்நிலையம் 05.03.1992 இல் ஏறக்குறைய 236 ஆசிரிய மாணவர்களுடன் கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரியில் வெகு சிறப்பாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இன்று ஏறக்குறைய 500 ஆசிரிய மாணவர்களுக்குப் பட்டப்பின் டிப்புளோமா பயிற்சி நெறியினை வழங்கி வருகின்றது.

ஒருவர் நிரம்பிய அறிவைப் பெறுவதும் தன்னிடமுள்ள அறிவை இன்னொருவருடன் பகிர்ந்து கொள்வதும் இருவேறுபட்ட செயற்பாடுகள் ஆகும். மேலும், ஒருவர் குறிப்பிட்ட பாடத்துறையில் பாண்டித்தியம் பெற்றவராக இருந்தாலும், தன்அறிவை ஏனையோருக்குப் பகிர்ந்து கொடுப்பதற்குத் தனித்துவமான திறமை தேவை. சிலரிடம் இவையிரண்டும் இயல்பாகவே காணப்படலாம். இப்பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்து வெளியேறவிருக்கும் ஆசிரிய மாணவர்கள் தம்முடமுள்ள அறிவை எப்படி மாணவர்களுக்கு வழங்குவது என்பது பற்றிய பூரண அறிவு, திறன், மனப்பாங்கைப் பெற்றிருப்பார்கள் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

இச்சந்தர்ப்பத்தில்,

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"

எனும் வள்ளுவன்குறள் என் நினைவிற்கு வருகின்றது. ஆசிரிய மாணவர்களாகிய நீங்கள் பெற்ற தொழில்சார் பயிற்சியின் விளைவாக ஆசிரியத்துவத்தில் சான்றோர்களாக விளங்கி உங்களிடம் கல்வி பயில வருகின்ற மாணவர்களைச் சான்றோர்களாக்கி அவையத்து முந்தியிருக்க வழி நடத்துவீர்கள் என்ற திட நம்பிக்கையுடன் எனது இதயங் கனிந்த நல்லாசிகளை வழங்குகின்றேன்.
தொடர்ந்து வரும் ஆண்டுகளிலும் இதழ்கள் மலர இம்மலர் முன்னோடியாக அமையுமென எதிர்பார்த்துவாழ்த்துகின்றேன்.

திருமதி. திவ்வியராணி சிதம்பரநாதன்
செயற்றிட்ட அதிகாரி
ஆசிரியர் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது வெளியீடுகள்

1. பொருளியல் வினா விடைத் தொகுப்பு ரூபா 95/-

(6 பரீட்சைகள்)

(பாட அலகு அடிப்படையில் தொகுக்கப்பட்டவை
விஷேட பரீட்சை (2) உட்பட படங்கள், வரைபடங்கள்,
அட்டவணைகள், பயிற்சி வினாக்கள், கற்றல் பரீட்சை நுட்பங்கள்,
முழுமையான விடைகள் அடங்கியவை)


| | | | |
|---|---|---|---|
| 2. | பொருளியல் 1992 | (1991 விஷேட) | ரூபா 25/- |
| 3. | பொருளியல் 1992 | (1 பரீட்சை) | ரூபா 20/- |
| 4. | பொருளியல் 1993 | (1 பரீட்சை) | ரூபா 20/- |
| 5. | பொருளியல் 1992, 1993 | (2 பரீட்சைகள்) | ரூபா 35/- |

## எல்லாப் புத்தக சாலைகளிலும் கிடைக்கும்

*தபால் மூலம் பெற விரும்புவோர்*
*காசுக்கட்டளை அனுப்பவேண்டிய*
*முகவரி :*

**A. SHANMUGALINGAM, B.Com.**
**No. 50 A. St. Rita's Road,**
**Mount-Lavinia.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகரகம.

## சிரேஷ்ட விரிவுரையாளரின் ஆசிச்செய்தி

"கல்வி" என்பது மாணவரின் அறிவைப் பெறுதலை குறிக்கின்றது என்றால் அவ்வறிவை மாணவர்களுக்கு வழங்குவதுடன் அவர்களின் திறன் மனப்பாங்கு போன்ற உள்ளார்ந்த திறன்களை கட்டியெழுப்புபவன் ஆசிரியன் ஆவான். இவ்வாறான வினைத்திறனுடைய நல் ஆசிரியர்களை உருவாக்குகின்ற பணியிலே தேசியக்கல்வி நிறுவகத்தின் ஆசிரியத்துறையும், அதன் பணிப்பாளரும் செயற்றிட்ட அதிகாரிகளும் எமது கல்விப்பாதையின் பச்சைவிளக்குகள். இவ் ஆசிரியர்துறை ஒரு விருட்சம். அதில் ஆணிவேராக திகழ்பவர்கள் இவர்கள். இம்மரத்தின் கிளைகளில் காணப்படும் இலைகள் இந் நிலையத்தின் விரிவுரையாளர்கள். இவர்களின் தொகுப்பினால் உருவாக்கப்பட்டு வெளியேறும் எமது 2ம் வருட ஆசிரிய மாணவர்கள், கனிகளுக்கு ஒப்பிடக்கூடியவர்கள். இவர்களின்இனிமையின் ஒரு பிரதிபலிப்பு இச் சுவடு' என்னும் வெளியீடு. இதை மலர்ந்து மணம் வீச செய்த இக்கனிகளின் கன்னிமுயற்சி பாராட்டப்பட வேண்டியது. இதன் மலர்வுக்கு மேலும் வளமூட்டிய கனியவிருக்கின்ற முதலாம் ஆண்டு ஆசிரிய மாணவர்களுக்கும் நிலையத்தின் சார்பில் எனது பாராட்டுக்களும், ஆசிகளும் உரித்தாகுக. இச் 'சுவடு" என்னும் மலர் எமது பிராந்தியத்தின்அடிச்சுவடாக, உயிர்ச்சுவடாக மிளிர்ந்து காலத்தால் அழியாத ஓவியமாக மேலும் பல சுவடுகளை வரும் காலத்தில் உண்டாக்க உதவும் என நம்பிக்கை மிளிர, மீண்டும் இம் மலரை 'வளர்க', வாழ்கவென வாழ்த்துவதில் உவப்பிலா உவகை கொள்கின்றேன்.

"கற்பகை கற்றபின் நிற்க அதற்குத்தக"

வி. குகாதரன்
சிரேஷ்ட விரிவுரையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உயிரியல்

by. M.P.Sellavel

# உயர்தர விலங்கியல்

## பரீட்சை வழிகாட்டி

by. M.P.Sellavel

(600 MCQ புதியமாதிரி வினாக்களும் விடைகளும்)

புதிய, பழைய பாடத்திட்டத்திற்கமைய தயாரிக்கப்பட்டது.
G.C.E. A/L பரீட்சையில் விலங்கியல் வினாக்களுக்கு விடையளிக்க
போதிய தரவுகளையும், பயிற்சிகளையும் அளிக்க வல்லது.
சகல முன்னணிப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்.

தொடர்பு :

**Sai Educational Publications**

**155, Canal Road, Wellawatte, Colombo - 06.**
**Tel: 581696.**

With Compliments

PALMS SPECIALITY
VEGETARIAN RESTAURANT

40, Galle Road, Colombo 06.

For your future Catering Orders
Contact
078-66730
OR
592775


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேல்மாகாண
பிரதி கல்விப் பணிப்பாளர் அவர்களின்

## ஆசிச் செய்தி

தேசிய கல்வி நிறுவனத்தின் ஆசிரியர் கல்விப் பிரிவு பட்டதாரி ஆசிரியர்களுக்கான பட்ட மேல் கல்வி டிப்புளோமா கல்வி நெறியை 1992 இலிருந்து ஆரம்பித்தமை இலங்கையின் ஆசிரிய விருத்தி தொடர்பான நிகழ்வுகளுள் முக்கியமான ஒன்றாகும். இப்பயிற்சி நெறி இலங்கையில் பல்வேறு நிலையங்களுடாக நடைபெறுகின்றது. இதனால் பல பட்டதாரி ஆசிரியர்கள் தமது தொழிற் தகைமையை பெற உதவுகின்றது.

ஆசிரியர் தொழில் ஒரு வாண்மைத் தொழிலாக கருதப்பட வேண்டியது. ஆசிரியர் வாண்மையினராக அமைவதற்கு அவர்களின் கல்வித் தகைமையும் தொழிற் தகைமையும் மேம்பட்டதாக இருத்தல் வேண்டும். பட்டதாரிகள் கல்வி டிப்புளோமா பெறுவதன் மூலமே வாண்மை பெற்ற ஆசிரியராக தம்மை ஆக்க முடியும்.

இப்பயிற்சி இடம்பெறும் கொழும்பு நிலையத்தில் தற்போது ஏறத்தாள 400 பட்டதாரி ஆசிரியர்கள் பயிற்சி பெறுகின்றனர். இவர்களுள் ஒரு பகுதியினர் முதலாம் ஆண்டு பரீட்சையை முடித்து இறுதி ஆண்டில் உள்ளனர். இவர்கள் தமது பயிற்சியை வலுவாக்கும் நோக்குடன் கலைவிழா ஒன்றை ஏற்பாடு செய்து அத்துடன். மலர் ஒன்றையும் வெளியிடுவது பற்றி அறிந்து இப்பயிற்சி நிலையத்தின் இணைப்பாளன் என்ற வகையில் மகிழ்ச்சி அடைகின்றேன். ஆசிரியர் பயிற்சியானது ஏட்டுக் கல்வியுடன் மட்டும் நின்றுவிடாது அதற்கு அப்பால் பல்வேறு இணைந்த செயற்பாடுகளையும் உள்ளடக்க வேண்டியது கல்வியில் ஒழுக்க மரபாகும். இம்மரபை ஒட்டியே இந்நிகழ்ச்சியும் இடம் பெறுகின்றது.

இப்பயிற்சி நிலையத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.வி.குகாதரனும் ஏனைய விரிவுரையாளர்களும் பயிற்சி தரமாக இடம் பெறும் நோக்கில் செயற்படுவதனை நான் நன்கு அறிவேன். இவர்கள் பாராட்டுக்குரியவர்கள். விழா ஏற்பாட்டுக் குழுவின் முயற்சியும் பாராட்டுக்குரியது.

கல்வியியல் நோக்கில் இந்நிகழ்ச்சி சிறப்புற அமைய எனது ஆசிகள்.

எஸ். நல்லையா, எம்.ஏ. (கல்வியியல்)
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
மேல் மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best compliments from :

# GEETHA TRADING COMPANY

DEALERS IN TEXTILES

No. 103, Second Cross Street,
Pettah,
Colombo 11.
Tel: 434694

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரிவுரையாளர்களின் ஆசிச் செய்தி

தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டப்பின் படிப்பு நெறியின் தமிழ் மொழி மூலமான முதல் மாணவர் தொகுதியில் ஒரு பகுதியினரான கொழும்பு மத்திய நிலையத்தின் பட்டப் பின்படிப்பாளர்களால் கொண்டாடப்படும் கலைவிழாவையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் அதிகளவு மகிழ்ச்சியடைகின்றோம்.

சஞ்சிகைகள் என்பவை விடயதானங்களை தாங்கி வருகின்ற ஒரு காகிதக்கட்டாக மட்டுமன்றி, குறிப்பிட்டவர்களின் ஆளுமையையும், முயற்சிகளையும், வரலாற்றுக் கால கட்டத்தின் பரிமாணங்களையும் இனங் காட்டுகின்ற ஒரு குறிகாட்டியாகவும் அமைகின்றது. அந்த வகையில் இம் மலர் இவர்களது வெளிப்பாடுகளிற்கு சாட்சி பகரும் என்பது திண்ணம்.

இம் மலர் பட்டப் பின் படிப்பாளர்களது கல்வியயற் கட்டுரைகளையே அதிகளவிற்தாங்கி வருவது இதன் இன்னொரு சிறப்பம்சம் எனத்துணிந்து கூறலாம்.

பட்டப் பின் படிப்பாளர்களது, குறுகிய காலச் செயற்பாட்டினூடாக, இம் மலர் சிறப்புற வெளி வருவது பாராட்டுக்குரியதாகும். எமது மாணவர்களாகிய இவர்களது வெற்றிகரமான இம் முயற்சியினை, எமக்குரிய அறுவடையாக எண்ணிப் பெருமிதம் அடைந்து அவர்களைப் பாராட்டுகின்றோம்.

இம்மலர் கொழும்பு மத்திய நிலையத்தின் சிறப்பினை எடுத்தியம்பி நிற்குமெனவும் நாம் நம்புகின்றோம். இதனூடாக எமது பட்டப் பின் படிப்பாளர்கள் எதிர் காலத்திலும் கல்விச் செயற்பாடுகளில் பிரகாசித்து, தேசிய கல்வி நிறுவகத்தின் கொழும்பு மத்திய நிலையத்தின் சிறப்புப் பிரதி நிதித்துவம் செய்ய வேண்டுமென மனதார வாழ்த்துகின்றோம்.

விரிவுரையாளர்கள் சார்பாக :

திரு. V.குகாதரன்
திரு. T. கனகறட்ணம்
ஜனாப். M. றாசீக்
திரு. N. சிதம்பரநாதன்
ஜனாப். A உமர்லெப்பை
ஜனாப். A இனானு
திரு. S. சுப்பிரமணியம்
திரு. K பேர்ணாட்
திரு. M. மனோகரன்
திருமதி. L. D. சில்வா
திருமதி. G நாணயக்கார
திருமதி. P தியோகராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best Compliments from :

# GNANAM TRADER

Importer, Exporter, General Merchants

&

Government Suppliers

U.G. 74, Peoples Park,
Colombo - 11

Tel: 078 - 64254

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலைவரின் சிந்தனையிலிருந்து ............**

இந்து ஆலயங்களில் பைபிள் படிக்க முடியுமா ? மாதா கோயிலில் குர்-ஆன் படிக்க முடியுமா? மசூதியின் முகப்பில் சிவபுராணம் படிக்க முடியுமா ? இல்லை என்பதே பொதுவான விடையாகும். இதோ பாருங்கள் ஒரு ஆலயத்தை இங்கு சிவபுராணமும் பாடலாம்; குர்-ஆனும் ஓதலாம்; பைபிளும் படிக்கலாம் எங்கே அந்த ஆலயம் எனக் கேட்கின்றீர்களா ஆம்! அவை தாம் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், நூல் நிலையங்கள். இத்தகைய அறிவாலயங்கள் தான் மக்கள்மத்தியில் அடிப்படை ஒருமைப்பாட்டை ஏற்படுத்த முடியும்.

அறிவாலயங்களுடன் தொடர்புடைய கல்வி என்ற எண்ணக் கரு கடந்த காலங்களைவிட மிகப் பரந்தளவில்இன்று விரிவடைந்துள்ளது. ஆரம்பநிலை, இடைநிலை, உயர்நிலை, முறைசார்ந்த, முறைசாராத, முறையில், பொது நிலை, தொழில் முறைநிலை, தொழில் நுணுக்க நிலை, பயிற்சி நிலை, மீளுகின்ற, ஆயுள்வரை, முதியோர், சமுதாயம், சேவை முன், சேவைக்காலக் கல்வி போன்றவைகல்விப்புலத்தின் விரிவடைந்து வரும் பகுதிகளாகும்.

இவற்றையெல்லாம் அக்குவேறு, ஆணிவேறாகக் கற்று கற்றவற்றைப் பொருத்தமான வகையில் பிர்யோகித்து நாட்டிற்கு உகந்த வளமான உயிரோட்டமுள்ள மனித வளங்களை உருவாக்குவதே ஆசிரியர்களின் பணியென சமூகமும், நாடும் ஏன் உலகமும் எதிர்பார்க்கிறது. இதற்கு ஆசிரியத் தொழிலில் ஈடுபடும் அனைவருக்கும் ஆசிரிய பயிற்சி அவசியமானது. இப் பயிற்சியை நாம் பட்டப் பின் படிப்பு டிப்புளோமா பாடநெறி என்பதன் ஊடாகத் தேசிய கல்வி நிறுவனத்தில் பெறுகின்றோம். இந் நெறியின் இறுதி வருட மாணவர்களாகிய நாம் 22-7-94 வெள்ளிக்கிழமை கலை விழாவை நடத்துவதுடன் சுவடு என்ற சஞ்சிகை ஒன்றையும் வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம். எமது சுவடு வெறும் சுவடாகத் தோன்றாது உயிர்ச் சுவடாக என்றென்றும் உரு மலர்ச்சி பெற வேண்டும் என்பது எமது விருப்பமாகும்.

இன்றைய விஞ்ஞான தொழில் நுட்ப யுகத்தில் இயந்திரமாக மாறிவரும்மனிதனை உயிரோட்டமுள்ளவனாக, உணர்வுகளை வெளியிடுபவனாக, அவற்றை மதிப்பவனாக, ஒரு பண்பாட்டுக் காவியாக ஆக்குவது அவனிடம் ஒட்டிக்கொண்டிருக்கும் கலை யுணர்வுகளே யாகும். சமூக மறுமலர்ச்சிக்குரிய பாலமாகவும் கலைகள் விளங்குகின்றன. கலாச்சார உரு மலர்ச்சியை கோடிட்டுக் காட்டும் குறிகாட்டிகளும் கலைகளே ! எனவே இவற்றை இணைப்பாட விதானம் என்பதன் ஊடாக அறிவாலயங்களில் போதிக்கின்றோம். இன்று நாமும் எமது கலையுணர்வுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வதற்காகவே இக் கலை விழாவை ஒழுங்கு செய்துள்ளோம்.

இக்கலைவிழா இனிதே நடைபெற எனது நல்வாழ்த்துக்கள்.

தலைவர்
க.த.இராஜரட்ணம்
உபமுதல்வர்
கொழும்பு இந்துக்கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Best Wishes from:*

# C D I ENGINEERS (PVT) LTD

**Consulting, Design**

**&**

**Inspection Engineers**

**In Technical Association with Engineers**

**9000 PTD Ltd.**

**Singapore.**

**379-2/2. Galle Road,**

**Colombo 06.**

**Tel: 588292, 501206**

**Fax: 588292**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயலாளரின் இதயத்திலிருந்து . . . . . . .

கல்வியின் விளைவு, அறிவையும் அனுபவத்தினையும் பெற்றுக் கொள்ளுதலாகும். வையத்துள் வாழ்வாங்கு வாழ ஏற்ற பண்புகள் ஊட்டப்பட வேண்டிய இடம் பாடசாலைகள். அங்கு ஊட்டும் கைகள், தியாகசீலர்களான ஆசிரியர்களே எனின் யாரும் மறுப்பதற்கில்லை. மகிழ்ச்சியான தொழிலைத் தேர்ந்தெடுக்க தொழிற்திறன் விருத்தியாக்கப்பட வேண்டும்.

சமூக மேம்பாட்டிற்கு இன்றியமையாத தொழில்களை மதிக்கும் பண்பு அவசியம் வளர்க்கப்பட வேண்டும். செய்யும் தொழிலை தெய்வமாகக் கொண்டு அதற்கான திறன்களை செல்வமாகப் போற்ற ஆவன செய்யப்பட வேண்டும். இதற்கமைய பட்டதாரி ஆசிரியர்களின் கல்வித்தகைமை, தொழிற் தகைமைகள வளர்த்துக் கொள்ளும் பொருட்டு தேசிய கல்வி நிறுவகத்தால் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மொழிமூலம் பட்டப் பின் படிப்பு கல்வி நெறி 1992ம் ஆண்டு மார்ச் மாதம் 5ம் திகதி பிற்பகல் 4 மணி அளவில் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி. இராஜமனோகரி புலேந்திரனால் கொழும்பு முஸ்லிம்மகளிர் பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டது.

இப்பாட நெறி ஒரு வருடகாலம் முஸ்லிம் மகளிர் கல்லூரியிலும், பின்னர் பம்பலப்பிட்டி றோ.க.த.க. பாடசாலையிலுமாக இரு வருடங்கள் பூர்த்தி செய்யப்பட்டது. எமது கல்வி நெறியில் ஏனைய பட்டப் பின் படிப்பு கல்வி நிறுவனங்களால் வழங்கப்படுவதிலும் பார்க்க, மிகச் சிறந்த முறையில் ஒழுங்கமைக்கப்பட்ட மொடியூல்கள் வழங்கப்படுகின்றன.

இங்கு சிறந்த விரிவுரையாளர்களின் வழிகாட்டலின் கீழ் பாடநெறிகள் சிறப்பாக மேற்கொள்ளப்படுவதுடன், இவர்களின் நெறிப்படுத்தலுடன் 'சுவடு' என்னும் கருவூலத்தைக் கன்னி வெளியீடாகச் சமர்ப்பிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைவதுடன், எமது கலை விழா நிகழ்ச்சியில் இவ் இதழ் மலர்வதையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம். இச்சுவட்டின் வழி எதிர்வரும் ஆண்டுகளிலும் பல 'சுவடுகள்' பதிக்க இறைவன் அருள்புரிவாராக.

நன்றி!

செயலாளர்
செல்வி ஆனந்தி ஐயாத்துரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the best compliments of :*

# NEW SARASWATHIE LODGE

## Vegetarian Hotel

**No.49, Galle Road,**
**Dehiwala.**

**Phone: 730363**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழாசிரியர்களின் இதயத்திலிருந்து சில துளிகள்

தேசிய கல்வி நிறுவனத்தினால், தமிழ்மொழி மூலமான பட்டப்பின்படிப்புக் கல்வி டிப்ளோமா கற்கை நெறி முதன்முதலாக 1992ம் ஆண்டு, பங்குனித் திங்கள் 05ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் கௌரவ கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரன் அவர்களின் தலைமையின் கீழ் கொழும்பு முஸ்லீம் மகளிர் பாடசாலையில் அங்குரார்ப்பண வைபவத்துடன் ஆரம்பமானது. இதனைத தொடர்ந்து கண்டி, காலி, யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலும் பிராந்திய கற்கை நெறி நிலையங்கள் 13 ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை முழுவதிலும் இக்கல்வி நெறி பல்வேறு சிறப்பம்சங்களில் முக்கியத்துவம் பெற்றிருப்பதைக் காண்பதில் அகமகிழ்கின்றோம்.

இச்சிறப்பம்சங்களில் முதன்மையானது இக்கல்வி நெறிக்காக வழங்கப்படும் ஆசிரிய மாணவ கல்விக்கான கைநூல்கள் (மொடியூல்கள்) ஆகும். இக்கைநூல்கள் ஏனைய உள்வாரி, வெளிவாரி பல்கலைக்கழகங்களின் பட்டப்பின்படிப்பு கல்வி டிப்ளோமா நெறியைத் தொடரும் மாணவர்களுனாலும் மிக்க உவப்புடன் உசாத்துணை நூல்களாகப் பயன்படுத்தி வருகின்றமை இந்நிறுவனத்தின் கல்வி அபிவிருத்திக்கான இலக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் எய்தப்பட்டுள்ளது என்பதை நினைத்து நாம் பெருமையடைகின்றோம். எதிர்வரும் காலங்களில் நவீன மாற்றங்களுடன் மேலும் இவ்விலக்குகள் எய்தும் என்பதில் அசையாத நம்பிக்கை எமக்குண்டு.

இவ்வுயர்ந்த நம்பிக்கையுடன் எமது கொழும்பு மத்திய நிலையம் "சுவடு" என்னும் கன்னி இதழை விரித்து, நீண்ட கால கல்விப் பயணத்தில் முதல் சுவடாகப் பதிப்பதில் நமது கல்வி இலக்குகளின் ஒரு பகுதி எய்தப்படுவது கண்டு அளவிலா மகிழ்ச்சியடைகின்றோம்.

இவ்விதழ் பல்வேறு கல்விக் கருத்துக்களை பல்வேறு கோணங்களில் அணுகி அறிவுக் கண்களைத் திறந்து அதன் வழி திறனையும் மனவொழுக்கப் பாங்குகளையும் கட்டியெழுப்பும் என்பது வெள்ளிடை மலையாகும். கடமையுணர்வும் பொறுப்புணர்வுமுடைய எமது முன்னணி விரிவுரையாளர்களின் வழிகாட்டலுடன் சுவடு பதிக்கப்படுவதால் இது அரிச்சுவடியாகப் பரிணாமம் பெறும் என்பதில் ஐயமில்லை.

எமது கலைவிழாவில் இச் சுவடு இதழின் பிறப்பு எம்மைப் பொறுத்தவரை ஒரு பெண்மையின் தலைப் பிரசவத்திற்கு ஒப்பானதாகும் என்றால் யாரும் மறுப்பதற்கில்லை. இச்சுவட்டினைப் பதிப்பதில் ஏற்பட்ட இன்னல்களை மனவுறுதியுடன் ஏற்று முழுமனத்துடன் பங்களிப்புச் செய்த அனைவருக்கும் சிரம்தாழ்த்தி நன்றிகூறுகின்றோம். குறை நீக்கி, நிறைவு காணும் உங்கள் உயர்பண்பை நாமும் பின்பற்றி உங்கள் சுவட்டை தொடர்கின்றோம்.

நன்றி!

இங்ஙனம்
இணை இதழாசிரியர்கள்
திரு.அ.சண்முகலிங்கம்
(உதவி ஆசிரியர், றோயல் கல்லூரி, கொழும்பு 7)
திரு.அ.ஜேசுரட்ணம்
(உதவி ஆசிரியர், புனித அந்தோனியார் கல்லூரி, வத்தளை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best compliments of:

# M/s OUTDOOR PUBLICITY SERVICES (PVT) LTD

92/2. 5TH LANE,
COLOMBO 03.

T'PHONE : 573166 , 574967

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒப்பீட்டுக் கல்வி ஆராய்ச்சிகளின் பிரதான போக்குகள்

ஒப்பீட்டுக்கல்வி பல்வேறு வகைப்பட்ட ஆராய்ச்சி முறைகளையும் பகுப்பாய்வு அணுகுமுறைகளையும் கொண்டது. அத்துறைக்கென்று உரிய ஒரு குறிபபிட்ட ஆய்வு அணுகு முறையைச் சுட்டிக்காட்ட முடியாதுள்ளது. அவ்வாறான ஒரு சிறப்பான ஆய்வு முறையை உருவாக்குவது சாத்தியமற்றது; விரும்பத்தக்கதும் அல்ல என்பது ஆய்வாளர் கருத்து.

வரலாற்றுரீதியாக ஒப்பீட்டுக்கல்வியின் ஆராய்ச்சி மரபு வெளிநாட்டுப் பயணிகளின் கட்டுரைகளை உள்ளடக்கி இருந்தது; இவை பிறநாடுகளின் கல்விமுறைகளை விபரித்தன; இவற்றின் அடிப்படையில் தாய்நாட்டில் கல்வித்துறை மாற்றங்களை ஏற்படுத்த முயலப்பட்டது; உதாரணமாக 19ம் நூற்றாண்டில் ஜெர்மனியின் கல்விமுறை பற்றி அறிவதில் கூடிய ஆர்வம் காட்டப்பட்டது.

ஒப்பீட்டுக் கல்வி, ஆய்வுகளின்மற்றுமொரு மரபு 'கொடுத்து வாங்கல்' எனப்படும். இதன் நோக்கம் ஒரு நாட்டில் காணப்படும் கல்விச் செயற்பாடுகளை மற்றொரு நாட்டில் அறிமுகம் செய்வதாகும். 1930 இல் எழுதப்பட்ட பிளெக்ஸ்னர் என்பவரின் உயர்கல்வி பற்றிய ஆய்வுகளும் பிற்காலத்தில் ஜப்பானிய பாடசாலை முறைபற்றி எழுந்த பல நூல்களும் இவ்வகையைச் சார்ந்தவை (Flexner, 1930).

ஒரு நாட்டின்கல்வி முறையின்அம்சங்கள் இன்னொரு நாட்டில் புகுத்தப்படுவதும் இவ்வகையான மரபைச் சார்ந்ததாகும். ஒப்பீட்டுக் கல்வியியல் வளர்ச்சி பெற்ற காலத்தில் குடியேற்ற ஆட்சிமுறை பரவலாக இருந்தது. பிரிட்டன், பிரான்ஸ் முதலிய குடியேற்ற வல்லரசுகள் தாம் ஆட்சி செய்த நாடுகளில் வாழ்ந்த மக்களின் ஒப்புதலைப் பெறாமல் புதிய கல்வி ஏற்பாடுகளை அறிமுகம் செய்து உள்ளூர் பாரம்பரியக்கல்வி மரபுகளையும் நிறுவனங்களையும் இல்லாதொழித்தன (Philip G.Althach, 1982).

ஒப்பீட்டுக்கல்வியின் மற்றுமொரு ஆய்வு மரபு வரலாற்று, பண்பாட்டு ஆராய்ச்சிகளாகும். இம்முறையில் ஆராய்ச்சி செய்தவர்கள் கல்வி முறையின் வளர்ச்சியில் வரலாறும் பண்பாடும் அவை சார்ந்த காரணிகளும் வகித்த பங்கினை ஆராய்ந்தனர். நவீன கல்விச் செயற்பாடுகளை விளங்கிக் கொள்ள தேசியப் பண்புகள் அல்லது இயல்புகள் என்பவற்றை வழிகாட்டியாகக் கொள்ள வேண்டும் என்பது அவர்களுடைய கருத்தாகும் (Kandel, 1956, Mallinson, 1975). அதாவது உலகநாடுகளின் கல்விமுறைகள் எவ்வாறானவை ? அவை எவ்வாறு இயங்குகின்றன ? என்பதை மட்டுமன்றி அவற்றின் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளையும் அறிஞர்கள் ஆராய முற்பட்டனர். இவ்வாறான ஆய்வுகளுக்கான சில எடுத்துக்காட்டுகள் :

மாணவர்களின் பாடசாலைக் கல்வியில் பண்பாடு, மொழி என்பனவற்றின் செல்வாக்கு.

கல்வியில் சமூக வகுப்பு முறை, சாதி அமைப்பு முறை என்பவற்றின் செல்வாக்கு.

ஆயினும், 1977 ஆண்டின் பின்னர் தேசியப் பண்புகள் கல்வி முறைகளின் வளர்ச்சிப் போக்கினை நிர்ணயிப்பதை அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சி அணுகு குறை பற்றி அறிஞர்கள் ஐயம் எழுப்பினர். இவ்வாறான தேசியப் பண்பு பற்றிய ஆய்வுகள், சமூக அறிவியல் ஆய்வு முறைகளில் ஒன்றைப் பயன்படுத்தினர். நாடுகளின் சமூக அமைப்புகளைப் பேணவும் அவற்றை விருத்தி செய்யவும் கல்வி எவ்வாறு உதவும் என்பது பற்றியும் பல்வேறு நாடுகளின் கல்வி இத்துறையில் ஆற்றிய பங்கு ஒப்பிட்டு நோக்கப்பட்டது. ஒரு தனிப்பட்ட நாடு, அதன் கல்வி முறை என்பன ஒரு தனிப்பட்ட கூறு ; அது பிற நாடுகளுடன் சமமாக வைத்து நோக்கப்படலாம் என்றும் கருதப்பட்டது. தென்கிழக்காசியா, ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா, கிழக்கைரோப்பா ஆகிய பிராந்தியங்களை உள்ளடக்கிய பிராந்திய ஒப்பீட்டுக்கல்வி ஆய்வுகளும் அப்பிராந்தியங்களுக்குள் வரும் தனிப்பட்ட நாடுகளின் கல்வி முறைகளையே ஆராய்ந்தன.

இவ்வாறு ஒப்பீட்டுக்கல்வி தனியொரு நாடு, அதன் பண்பாடு, வரலாறு என்பவற்றைப் பற்றிய ஆய்வாக அமைவதைப் பல ஆய்வாளர்கள் எதிர்க்கத் தொடங்கினர் (Meyar, 1971, Arnore, 1980, Corney, 1974). அவர்களுடைய நோக்கில் ஒரு நாட்டின் கல்வி முறை அந்நாட்டிற்குரிய உள்காரணிகளால் அன்றி அதிக அளவில் வெளிக் காரணிகளின் பாதிப்புகளுக்குள்ளாகின்றன; எனவே ஒப்பீட்டுக்கல்வியியல் ஆராய்ச்சிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வெளிக்காரணிகளை இனங்காணவேண்டும் என்பது அவர்களுடைய கருத்தாக இருந்தது. மார்ட்டின் கோர்னியின் 'கல்வியும் பண்பாட்டு ஏகாதிபத்தியமும்' என்ற நூல் இத்துறையில் எழுந்த முதல் ஆய்வு நூலாகும் (Carnoy, 1974).

பின்வந்த ஆய்வாளர்கள்இரண்டாம் உலகயுத்தத்தின் பின்னர் ஏற்பட்ட கல்வியின் விரிவை தனிநாட்டு ஆய்வுகளாலும் ஒரு குறிப்பிட்ட நாட்டின் அரசியல், சமூக அமைப்பு பற்றிய ஆய்வுகளைக் கொண்டு விளக்கமுடியாது என்றனர்; யாவருக்கும் ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, மூன்றாம் நிலைக் கல்வி நிலைகளில் ஏற்பட்ட பாரிய விரிவு என்பன தேசியக் கல்விக் கொள்கைகளின் விளைவு அன்று; தொழில்நுட்ப, தொலைத் தொடர்புத்துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள, தொழிற் சந்தை சர்வதேச மயமாக்கப்பட்டமை போன்ற புதிய அம்சங்களின் காரணமாக கல்வித்துறை பன்னாட்டுச் சூழ்நிலைகளில் இயங்க நேரிட்டுள்ளது; எனவே ஒப்பீட்டுக்கல்வி ஆய்வுகள் தனிப்பட்ட நாடுகளையன்றி உலகளாவிய அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது அவர்களுடைய கருத்தாக இருந்தது (Meyor, Hannon, 1979).

இவ்வாறான அணுகுமுறையைப் பின் பற்றிய ஆய்வாளர்கள் நாடுகள், பிராந்தியங்கள், சமூக வகுப்புகள், குழுக்கள் என்பவற்றுக்கிடையிலான தொடர்புகள் எவ்வாறு பாடசாலைக் கல்வியையும், அதன் சமூக, பொருளாதார, அரசியல் விளைவுகளையும் பாதிக்கின்றன என்பதை ஆராய்ந்தனர்; இவர்களுடைய ஆய்வு முடிவுகளின்படி நாடுகளுக்கிடையே காணப்படும் சமத்துவமற்ற அதிகாரபூர்வத் தொடர்புகள் என்ற யதார்த்த நிலைமைக்குள்ளேயே தேசிய கல்வி முறைகள்இயங்குகின்றன ; மேலைநாட்டுக் கைத்தொழில் நாடுகள் வலிந்தும் வரலாற்று நிலைமைகளாலும் அல்லது அறிவுசார்மனித, பௌதீக வளங்களைப் பகிர்ந்து கொள்ளும் முறைகளினாலும் வளர்முக நாடுகளின் கல்வி முறைகள், பொருளாதார முறைகள் என்பவற்றினமீது மேலாதிக்கம் செலுத்துகின்றன என்பது அவர்களுடைய வாதமாகும்; மேலைநாட்டுச் சார்பான வர்த்தகக் கூட்டுகளுக்கு இணையானவையாக இக்கல்வித்துறை மீதான மேலாதிக்கத்தை அவர்கள் ஒப்பிடுகின்றனர்; மூன்றாவது உலக நாடுகளில் பாடசாலைக்கல்வி அறிவு உருவாக்கம், அது பரப்பப்படும்முறை என்பவை எவ்வாறு ஐக்கிய அமெரிக்காவின் செயற்பாடாக அமைந்துள்ளது என்ற விடயமும் ஆராயப்பட்டது; இவ்வாறான கட்டுப்பாடுகளை மேலைநாடுகள் விதித்து அவற்றினூடாக சர்வதேசிய சமத்துவமின்மை பேணப்படுகின்றது; மூன்றாம் உலகநாடுகள் மேலை நாடுகளில் தங்கி நிற்கும் நிலை வலுப்படுகின்றது என்பது அவர்களுடைய வாதமாகும் (Carnoy, 1980). உலகளாவிய அணுகுமுறையை விடுத்து நுண்முறைப்பகுப்பாய்வுகளைக் கொண்டு கல்வித்துறையில் பிராந்திய வேறுபாடுகளை ஆராய்ந்தவர்களும் இவ்வாறான முடிவுகளுக்கு வந்துள்ளனர்.

முன்னைய தனிநாட்டுக் கல்வி ஆய்வுகள் கூட ஒரு நாட்டிற்குள் காணப்படும் பிராந்திய வேறுபாடுகளை ஆராயவில்லை. இத்துறை சார்ந்த பிற்கால ஆய்வாளர்கள் வெவ்வேறு நாடுகளின் கல்விமுறைகளை ஒப்பிடுவது போன்று ஒரு தனிப்பட்ட நாட்டினுள் காணப்படும் பிராந்தியங்களின் கல்வி நிலையங்களை ஒப்பிட்டு ஆராய்வதும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று கருதினர். அவர்களுடைய ஆய்வுகளின் படி பல்வேறு நாடுகளின் கல்வி நிலைமைகளில் காணப்படும் வேறுபாடுகள் போன்றே ஒரு தனி நாட்டிற்குள்ளும் அதிக பிராந்திய வேறுபாடுகள் காணப்பட்டன(Bowman, 1984).

ஒப்பீட்டுக் கல்வி ஆய்வில் இடம்பெற்ற உலகளாவிய அணுகுமுறையைப் பல ஆய்வாளர்கள் நிராகரிக்க முற்பட்டனர். இவ்வணுகு முறை மார்க்சீய கண்ணோட்டத்தில் அமைந்தமையால் அது எளிமைப்படுத்தப்பட்டதொன்று ; மூன்றாம் உலக நாடுகளின் பின்தங்கிய நிலைமைக்குக் காரணம் கைத் தொழில் நாடுகளோ அல்லது குடியேற்ற நாடுகளோ அன்று ; ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் பாடசாலைக் கல்வி வளர்ச்சிக்கும் மேற்கு நாடுகள் வளர்முக நாடுகள் மீது செலுத்தும் மேலாதிக்கத்துக்கும் தொடர்புண்டு என்றுகூற எதுவித ஆதாரமுமில்லை; மூன்றாம் உலக நாடுகள் குடியேற்ற ஆட்சியின் கீழ் வருமுன்னரே பின்தங்கிய நாடுகளாக இருந்தன ; அவ்வாறான குறைவு விருத்தியே அந்நாடுகளின் இன்றைய பின்தங்கிய நிலைமைக்கும் காரணம். மேலைநாடுகள் உதவி வழங்கி இந்நிலைமையைச்சீர்செய்ய விரும்புகின்றன; உலகளாவிய அணுகுமுறையைக் கொண்டு வளர்முகநாடுகளில் இன்று ஏற்பட்டு வரும் முன்னேற்றங்களையும் சமூகப் புரட்சிகளையும் விளக்க முடியாது என்று அவர்கள் வாதாடினர் (Noah & Eckrtein, 1985). இவ்வாய்வாளர்களின் கருத்தின்படி வளர்முகநாடுகள் மேலைநாடுகளில் தங்கியிருக்கும் நிலைமைக்கும் அந்நாடுகளின் மேலைநாட்டுப் பாணியிலான கல்வி முறைக்கும் தொடர்பில்லை;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பீட்டுக்கல்வி ஆய்வுகளில் காணப்படும் மேலும் சில மரபுகள் சர்வதேசப் புரிந்துணர்வை மேம்படுத்தும் நோக்குடையவை. உலக சமாதானம், அபிவிருத்தி என்பவற்றுக்கு பங்களிப்புச் செய்யும் நிலையங்களாகப் பாடசாலைகளை நோக்கிய பல ஒப்பீட்டுக் கல்வியாளர்கள் உள்ளனர். மூன்றாம் உலக நாடுகளின் கல்வி மேம்பாடு, மனித உரிமைகளைக் கற்பித்தல் என்பனபற்றி இவர்கள் ஆராய முற்பட்டனர் (Kandel & Mallinsun).

1960 களில் ஒப்பீட்டுக் கல்வியை விஞ்ஞானரீதியாக ஆராய முற்படும் ஒரு புதிய மரபு தோன்றியது. அனுமானங்களை உருவாக்குதல், அவற்றைப் பரீட்சித்தல், புள்ளிவிவரங்கள், தொகைரீதியான அணுகுமுறைகளைப் பயன்படுத்தல் போன்ற சமூக அறிவியல் முறையியலைப் பயன்படுத்தி ஒப்பீட்டுக்கல்வியை ஒரு விஞ்ஞானமாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பாடசாலை/சமூகம்தொடர்பான கொள்கைத்தீர்மானங்களை மேற்கொள்ளப் பயன்படுத்தக்கூடிய விஞ்ஞான விதிகளைக் கண்டறிவது இதன் நோக்கமாயிற்று (Bereday G.Z.F. 1964, Holmn, B, 1965, Noah H & Eckstein M, 1969, King E, 1968).

1950 களிலும் 1960 களிலும் ஒப்பீட்டுக் கல்வி ஆய்வுகள் விரிவடைந்து சென்றபோது சமூகவியல், பொருளியல் ஆகிய துறைகளே அவ்விரிவுக்குக் கூடிய பங்களிப்பைச் செய்தன. கல்வியின் சமூக விளைவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அத்துடன் இவ்வாய்வுகளில் பெரும்பாலானவை மனித மூலதனக் கோட்பாடு (Human Capital Theory) சார்ந்தனவாய் அமைந்தன. கல்வியியல் ஆய்வு பொருளுற்பத்தி, தனியாள் வருமானம் பற்றியதாக அமைந்தது. கல்வி வளர்ச்சியால் ஏற்படக்கூடிய அரசியல், சமூக, அறிவுசார் மாற்றங்கள் கல்வியியல் ஆய்வுகளில் முக்கிய இடம் பெறவில்லை; சமூக வகுப்பு, இனம், பால்வகுப்பு என்பவற்றுக்கும் கல்வி வாய்ப்புகளுக்கும் இருந்த தொடர்பு பற்றிய ஆய்வுகளும் முக்கிய இடம் பெறவில்லை. 1980 ஆம் ஆண்டளவில் கூட மனித மூலதனக் கோட்பாட்டுக்குக் கல்வியியல் ஆய்வில் வழங்கப்பட்ட முக்கியத்துவம் காரணமாக, குறிப்பாக மூன்றாவது உலக நாடுகள் எதிர்நோக்கிய முக்கிய கல்விப் பிரச்சினைகள் பற்றிய ஆய்வுகளில் அக்கறை செலுத்தப்படவில்லை. கல்விவளர்ச்சியினால் ஏற்படும் பொருளாதார விளைவுகளுக்கு முரணான அரசியல் சமூக விளைவுகள் உண்டு. அத்துடன் பாடசாலைகள் கல்வி ரீதியான விளைவுகளையும் கொண்டவை; இவை யாவும் உயர்மட்ட கொள்கைகளை வகுப்போருக்கு முக்கியமானவையாயினும், ஒப்பீட்டுக் கல்வியியல் ஆய்வுகள் இத்துறைகளில் செய்யப்படவில்லை என வாதிடப்பட்டது.

இந்நிலையில் 1970 களில் செய்யப்பட்ட ஆய்வுகள் பெண்கள், சிறுபான்மையினர், பல்வேறு சமூக வகுப்பினர் என்போரின் கல்வி வாய்ப்புகள் பற்றியனவாக அமைந்தன. ஆயினும் இவை பல்வேறு நாடுகள் பற்றிய ஒப்பீட்டு ஆய்வாக அமையவில்லை. இக்காலப் பகுதியில் கல்வி வளர்ச்சியும் கல்விக்குப் பயன்படுத்தப்படும் வளங்களும் சமூக, பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்திவிடாது என உணரப்பட்டது; இதன் காரணமாக ஆய்வாளர்கள் பாடசாலைக் கல்வியின்தராதரம், பல்வேறு வகைப்பட்ட மாணவர்களுக்குப் பாடசாலைக் கல்வி எவ்வாறு பயன்பட்டது என்னும் விடயம் பற்றி ஆராயப்பட்டது. 1980 களில் கல்வியினால் தனியாட்களும் சமூகமும் அடையும் நன்மைகள், அறிவுசார் வளர்ச்சி என்னும்விடயங்களை ஆராய்வதில் கவனம் செலுத்தப்பட்டது.

1970 ஆம் ஆண்டளவில் மாணவர்களின்கல்வி அடைவு (Educational achiement) என்னும்துறையில் ஆய்வுகள் நடாத்தப்பட்டன. இவை உளவியல்துறை சார்ந்தவை. இதன் விளைவாக ஒப்பீட்டுக் கல்வி ஆய்வுகளும் பாடசாலைக் கல்வியின் விளைவுகளைக் கருத்திற் கொள்ளத் தொடங்கின; இதனைத்தொடர்ந்து, பாடசாலை மாணவர்களின் செயலாற்றங்களில் கலாசாரம், அரசியல், சமூக வகுப்பு என்பன ஏற்படுத்திய பாதிப்புக்கள் பற்றியும் ஆராயப்பட்டது.

1960 களில் உலகளாவிய ரீதியில் எழுந்த மாணவர்களின் அரசியல் இயக்கங்களும் புதிய ஆராய்ச்சிகள் எழுவதற்கு வழிவகுத்தன. இன்றைய உணவு, பொருளாதார, தேசிய ஒருமைப்பாடு என்பன தொடர்பான நெருக்கடிகளும் கல்விமுறையின் வினைத்திறன் தொடர்பான ஆய்வுகளுக்கு வழிவகுத்துள்ளன. கல்விக்கான நிதியை வழங்குவதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் காரணமாக செலவினக் கூட்டாமல் சிறந்த கல்வியை எவ்வாறு வழங்க முடியும் என்பது பற்றிய ஆய்வுகள் செய்யப்படுகின்றன. இப்புதிய ஆய்வுகள் பாடசாலைக் கல்வி விரிவு செய்யப்படல் வேண்டுமா? பொதுப் பாடசாலை முறை பயனளிக்குமா? என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விகளை எழுப்பியுள்ளன. கல்வி நிதி, கல்விச் சேவைகளை வழங்கல் தொடர்பான மாற்று வழிகள் பற்றியும் ஆய்வுகள் நடாத்தப்பட்டன.

பின்கால ஒப்பீட்டுக்கல்வியயில் ஆய்வுகள், படிப்படியாக ஆராய்ச்சிக்குப் பல்வேறு நிறுவனங்கள் வழங்கும் நிதி உதவி, அந்நிறுவனங்களின் கொள்கைகள், நோக்கங்கள், ஆய்வு முடிவுகள் பயன்படுத்தப்படும் முறை என்னும் விடயங்களிலும் கவனம் செலுத்தின; பெரும்பாலான ஆய்வுகள் இந்நிறுவனங்கள் பற்றிய கண்டனமாகவும் அமைந்தன.

உலக நாடுகளின் கல்வித்திட்டங்கள் பற்றியும் ஒப்பீட்டுக் கல்வியாளர்கள் ஆராய்ந்தனர். இவ்வாய்வுகள் பெருமளவுக்குக் கல்வித்திட்டங்களின் நுட்பமுறைகள், கல்வித்திட்டங்களின்விளைவுகள் பற்றியனவாய் அமைந்தன. இத்துறை சார்ந்த பிற்கால ஆய்வுகள்திட்டமிடற் செயற்பாட்டின்நிறுவன அம்சங்களை ஆராய்ந்தன ; யாருக்காக யாரால் கல்விமுறைகள் திட்டமிடப்படுகின்றன ? திட்டமிடலுக்கும் சமத்துவமின்மைக்கும்உள்ள தொடர்புகள் என்னும் விடயங்கள் பற்றி ஆராயப்பட்டன. நைஜீரியா, சில்லி, மெக்சிக்கோ ஆகிய நாடுகளில் இவ்வகையான ஆய்வுகள் செய்யப்பட்டன. சர்வதேச நிறுவனங்கள், அரசியற் கட்சிகள் என்பன எவ்வாறு கல்வி முறைகளைத்திட்டமிடலில் பங்களிப்புச் செய்தன என்பது ஆராயப்பட்டது (உதாரணமாக James Urwick, 1983).

முன்னர் கூறியது போல் அறிவுத் தொகுதி எவ்வாறு உருவாக்கப்படுகின்றது ; எவ்வாறு அதனைப் பாடசாலை அமைப்புகள் பயன்படுத்துகின்றன; எவ்வாறு அறிவுத் தொகுதி மக்கள், மாணவர் மத்தியில் பரப்பப்படுகின்றது என்னும் விடயங்களும் ஒப்பீட்டுக் கல்வியியலாளரால் கருத்திற் கொள்ளப்பட்டன. சர்வதேச ரீதியான நூல் வெளியீடும், அதன் விநியோகமும் நடைபெறும் முறை, குறிப்பிட்ட நாடுகளின் கல்வி முறைகள், அறிவுத்தொகுதி என்பவற்றில் அவை ஏற்படுத்தும் தாக்கம் என்பனவும் ஆராயப்பட்டன. (Altliach , P.G., 1982). அத்துடன், ஆராய்ச்சி முடிவுகள் கல்விக் கொள்கை உருவாக்கத்திற்கு எவ்வாறு பயன்படுகின்றன; அறிவு இடமாற்றம் எவ்வாறு நிகழ்கிறது. மூன்றாம் உலகநாடுகளில் இதனால் ஏற்படும்தாக்கம் என்பனவும் ஆய்வுப் பொருளாக விளங்கின. வகுப்பறையில் பயன்படுத்தப்படும் அறிவுத் தொகுதி எவ்வாறு இது மாணவருக்குக் கையளிக்கப்படுகின்றது ? மூன்றாம் உலக நாடுகளில் பாடநூல்களின் பங்கு; எந்த அளவுக்கு அவை கிடைக்கப் பெறுகின்றன ? அவற்றின் வினைத்திறன்; அவை எந்த அளவுக்கு சமூக யதார்த்த நிலைமைகளைப் பிரதிபலிக்கின்றன ; இந்நிலைமைகளுக்கும் அபிவிருத்தி, பண்பாடு என்பவற்றுக்குமிடையில் உள்ள தொடர்பு என்பனவும் ஆராயப்பட்டன (Heyneman S.P. 1978).

பிற்காலத்தில் வளர்ச்சியடைந்த மற்றொரு ஒப்பீட்டுக் கல்வி ஆய்வுத்துறை பால்வகை சார்ந்ததாகும். கல்விநிலை, சமூகநிலை என்பவற்றினைக்கருத்திற் கொண்டு பால்வகைப்பட்ட சமத்துவமின்மையால் பெண்கல்வி பாதிப்படைந்திருந்தமை 1980 களில் ஆராயப்பட்டது. இவ்வாய்வுகள் ஆண்கள் பற்றிய தரவுகளும் முடிவுகளும் பெண்களுக்குப் பொருந்தாது என்பதை சுட்டிக்காட்டின ; ஒப்பீட்டுக் கல்வி ஆய்வுகள் பெண்களின் நிலைமையை மையமாகக் கொண்டமைதல் வேண்டும் என்று 1980 களில் சுட்டிக்காட்டப்பட்டது. பெண்கல்வி எவ்வாறு ஆண்களின் கல்வியிலிருந்து வேறுபட்டிருந்தது என்பதும் கல்வி எவ்வாறு பெண்களின் குடும்ப தொழில் வாழ்க்கையை மாற்றியமைத்தது என்பதும் ஆராயப்பட்டன.

பிற்கால ஒப்பீட்டுக் கல்வி ஆய்வாளர்கள் கல்வி, சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதிலும் பொருளாதார விருத்தி நவீனமயமாக்கம் என்பவற்றுக்கு செய்யும் பங்களிப்புப்பற்றி பல ஐயங்களை தெரிவித்தனர். அதற்கேற்ப 1960 களிலும் 1970 களிலும் மேற்கொள்ளப்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள் தோல்வி அடைய நேர்ந்தன. கடந்தகால கல்வி வளர்ச்சி பல அறிஞர்களின் தீவிர கண்டனத்துக்கு உள்ளாயிற்று. 1980 களில் ஏற்பட்ட நிதி நெருக்கடியும்இவ்வாறான கண்டனங்கட்கு காரணமாயிற்று. பல அறிஞர்கள் மூன்றாவது உலக நாடுகளில் யாவருக்கும் இலவச ஆரம்ப கல்வி வழங்குவதையும் யாவருக்கும் எழுத்தறிவை வழங்குவதையும் கூட ஐயத்துடன் நோக்கினர் (Comparation Educaton Review 21, 1977). சில அறிஞர்கள் இவ்வாறான ஆரம்பக்கல்வி இந்நாடுகளின் பொருளாதார நிலைமைக்கு ஏற்றதல்ல; பொருளாதார அபிவிருத்திக்கும் சமூக நலனுக்கும் தீங்கை விளைவிக்கக்கூடியது; ஏனெனில் நாட்டின் வளங்கள் இதன் பயனாக சரியாக பயன்படுத்தப்படுவதில்லை என அவர்கள் வாதிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980களில் சில அறிஞர்கள் கல்வித் துறையைப் பொருளாதார ரீதியாக வினைத்திறனுடன் நிர்வகிக்க தனியார் மயமாக்கம் பயனுடையது என்றும் இதனால் கல்வித தராதரங்களை மேம்படுத்த முடியும் என வாதிட்டனர் (Comparation Education Review, 28, 1984).

அண்மைக் கால ஒப்பீட்டுக் கல்வி ஆய்வுகள் முறைசார்ந்த முறைசாரா கல்வி, தொழிற்கல்வி, பொதுக்கல்வி என்பன அபிவிருத்தியில் கொள்ளும் பங்கினையும் ஆராய்ந்தனர். 1960 களிலும் 1970 களிலும் சரியான முறையான கல்வி முறையினூடாக மூன்றாவது உலக நாடுகள் கைத்தொழில் மயமாகி அந்நாடுகளின் வறுமை ஒழித்துக்கட்டப்படும் என பல அறிஞர்கள் நம்பினர். அது கல்வி மனித சாதனத்தை பயிற்றுவித்து அபிவிருத்திக்கு உதவும் என நம்பப்படடது. பின்னர் இவ்வாறான அணுகு முறையிலிருந்து கல்வி அடிப்படை தேவைகளுடன் - குறிப்பாக பயிர் உற்பத்தி சிறுதொழில்நுட்பம் குடும்பநலன் போஷாக்கு என்பவற்றுடன் கொண்ட தொடர்பு பற்றி ஆராயப்பட்டது.

இவ்வாறான புதிய துறைகள் சார்ந்த ஒப்பீட்டுக் கல்வி ஆய்வுகள் அத்துறைக்கு புதிய பரிமாணத்தை வழங்கின. கல்வி சமூகத்தில் வகிக்கும் பங்குபற்றியும்கல்வி முறைகளை எவ்வாறு வெவ்வேறு நிலைப்பாடுகளிலிருந்து நோக்கலாம் என்பதும் இத்துறை மேலும் வலுப்பெற உதவின.

References:


1. Altbach P.G. st. al, International Bibliography of comparative Education, Newyork, Praeger, 1981.
2. AltbachP.G. and Kelly G.P. Education and the Colonial Experience, New Brunswick, Transaction,, 1982.
3. Bereday G.Z.F. Comparative Method in Education, New York, Renshart & Winston, 1964.
4. Comparative Education, 13, June 1977.
5. Comparative Education Review 28, November 1984, 24, February, 1980, 23, October, 1978, 21 Oct, 1977, Vol. 30 No. 1, Feb. 1986.
6. Edmund King, Comparative Studies and Educational Decision, London, Methnun, 1968.
7. Harold Noah and Max Eckstein, Dependency Theory in Comparative Education, Prospects 15 No. 2, 1985.
8. Harlod Noax & Max Eckstein, Toward a Science of Comparative Education, New York, Macmillan, 1969.
9. James Urwick, Politicis and Professionalisim in Nigerian Educational Planning, comparativ e Educational Review, 23, October, 1983.
10. Mallinson, V, An Introducton to the Study of comparative Education, ,London, Hrinemann, 1975.
11. Martin Carnoy, Education as Cultural Imperilism, New York, Mckay, 1974.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

# SHAHEERA'S

Importers & General Merchants,

Indian Tourist Items.

S-37, 1st Floor, Colombo Central Super Market Complex
Colombo 11 , Sri Lanka.

Tel : 423373, 431735 : Fax : 941-1-421432

**Branch:**

***CITIZEN ELECTRONICS,***
86, 2nd Cross Street,
Colombo - 11.
T.Phone: 431414

**Branch:**

***CHINA TRADERS***
33, China Street,
Colombo - 11.
T.Phone: 320642, 423368

Agent For :

**CITIZEN CALCULATORS**

**TRULY CALCULATORS**

**BOSHI FILM & PAPER**

**BOSHI BUBBLE GUM**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் கல்விமுறையின் பங்களிப்பு

பொருளாதார அபிவிருத்தியுடன் சமூக அபிவிருத்தியையும் சீர்தூக்கிப் பார்த்து இலங்கை ஒரு அபிவிருத்துயடையும் நாடாக உலகநாடுகளால் கணிக்கப்பட்டுள்ளது. இலங்கையும் எதிர்காலத்தில் அபிவிருத்தியடைந்த நாடாகமாற வேண்டுமாயின் அதற்கு கல்விமுறையின் பங்களிப்பு மிகமிக அவசியமாகும்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியானது மொத்தத் தேசிய உற்பத்தியில் தங்கியுள்ளது. இவ் உற்பத்திப் பெருக்கமானது பௌதீகவளத்தைப் பயன்படுத்துவதில் மட்டுமல்லாது மனித வளத்தை பல்வேறு திறன்களிலும் ஆற்றல்களிலும் பயிற்றுவதில் தங்கியுள்ளது. தொழிநுட்பத்திறனும் ஆற்றலும் படைத்த மனிதவளம் இல்லையாயின் பொருளாதார வளர்ச்சி பின்தங்கவேண்டிய நிலையே ஏற்படும். இவ்வாறு பொருளாதார பயனுடைய மனிதவளத்தை பயிற்றுவிப்பதில் கல்விமுறைக்கு முக்கிய பங்கிருப்பதால் கல்வி மீதான செலவை மனித சாதனங்களின் மீதான முதலீடுகளாக மாற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எமது பாடசாலைக்கல்வி பல்வேறு திறன்களை பயிற்றுவதோடமையாது இணைப்பாடவிதானத்துக்கும் முக்கியத்துவம் அளித்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு சாதகமான மனப்பாங்கையும் வளர்த்தல் வேண்டும்.

பொருளாதார விருத்தியும் கல்வி விருத்தியும் ஒன்றையொன்று போஷிப்பதாகவும் இடைத்தாக்கங்களுக்குட் படுவதாகவும் காணப்படுகின்றது. எனவே பொருளாதாரத் திட்டத்தின் இலக்குகளை அடைவதற்கு துணைக்கருவியாக கல்வி முறை செயற்பட வேண்டியுள்ளது. இலங்கையின் தேசிய வருமானத்தில் கணிசமான அளவு நிதி கல்விக்கு ஒதுக்கப்படுகின்றது. அருமையாகக் காணப்படும் நிதிவளங்கள் நேரடியாக பாதுகாப்பு, சமூகநலச் சேவைகளில் விரயம் செய்யப்படாது உற்பத்தி பெருக்கத்திற்காகப் பயன்படுத்த வேண்டியுள்ளதால் கல்விமுறை பொருளாதார வளர்ச்சியை மையமாகக் கொண்டு மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ளது.

குறுகிய காலத்திட்டங்களாற் பொருளாதார அமைப்பிற்கு நிரந்தர பயன் கிடைத்துவிட முடியாது. எனவே, நீண்ட காலத்திட்டங்கள் மூலம் நாட்டு மக்களிடையே புதியதிறன்களையும் புதிய அறிவையும் புதிய மனப்பாங்குகளையும் விருத்தி செய்யவேண்டியவாறு கல்விமுறை அமைய வேண்டும்.

இலங்கையின் கல்வி, பொருளாதார வளர்ச்சிக்கு வழிசமைக்க வேண்டுமாயின் கல்வியின் பல்வேறு நிலைகளையும் சமாந்தரமாக விருத்திசெய்யாமல் தேவையடிப்படையில் வரிசைப்படுத்தி ஒவ்வொன்றாக விருத்திசெய்தல் சாலச்சிறந்தது. பொருளாதார விருத்திக்கு எழுத்தறிவு மிகவும் தேவைப்படுமிடத்து ஆரம்பக்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அல்லது விரைவான கைத்தொழில்மயமாக்கம் தேவையாயின் தொழில்நுட்பக்கல்வியை முதலில் விருத்தி செய்தல் வேண்டும்.

இலங்கை முன்பு அந்நியர் ஆதிக்கத்தில் இருந்ததன் காரணமாக பொருளாதாரமும் கல்விமுறையும் அந்நாடுகளின் நலனையே அடிப்படையாகக்கொண்டு அமைந்திருந்ததால் இலங்கையின் கல்வி, அளவிலும் தரத்திலும் தற்போதது அதிகரிக்கப்படவேண்டிய அவசியம் காணப்படுகின்றது. எனவே நாட்டில் பயிற்சிபெற்ற தொழில்நுட்பறிவுடைய தொழிலாளர்களை உருவாக்கிக்கொடுத்தல் கல்வியின் தலையாய பணியாகத் தற்போது விளங்குகின்றது. எமது இயற்கைவளங்களுடன் பயிற்றப்பட்ட மனிதவளம் இணையும்போது தான் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளம் அமைக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் கல்வி விரிவடைந்த அளவிற்குப் பொருளாதாரம் விருத்தியடையாததனால் கல்விகற்றவர்கள் யாவருக்கும் அவர்களது அறிவு திறன் தகுதிகளுக்கேற்ப வேலை கிடைப்பதில்லை. இவ்வகையில் வேலையில்லாப் பிரச்சினை அரசிற்கு ஒரு முக்கியப் பிரச்சினையாகும். இவ்வேலையில்லாப் பிரச்சினையால் கற்றவர்களின் அறிவும் சக்தியும் கல்விக்காக செலவிடப்பட்ட நிதியும் பயன்படாமல் போகின்றது. எனவே, கல்வி திட்டமிடப்பட்டு பொருளாதார அமைப்புடன் தொடர்புபடுத்தப்படும் போதே எதிர்பார்த்த இலக்கான உச்ச அபிவிருத்துக்கு நாடு இட்டுச்செல்லப்படும்.

ஒவ்வொரு மாணவனும் தனது இயற்கைச்சூழல், உயிரியற்சூழல் என்பவற்றை நன்கு உணர்ந்தவனாகவும் எப்பிரச்சினையையும் அறிவியல் முறையில் சிந்தித்து விடை காணும் ஆற்றல் உடையனவாகவும் விளங்க வேண்டும். அத்துடன் மாணவனின் ஆக்கத்திறன்களை வளர்க்கும்வகையிலும் சமுகத்திற் சிறப்பாகவும் மகிழ்ச்சியுடனும் வாழும் திறனை அளிக்கும் வகையிலும் கலைத்திட்டங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ளது. எமது நாட்டின் நூற்கல்விக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் தொழிற்கல்விக்கு அளிக்கப்படும் வகையில் கலைத்திட்டத்தை மாற்றுவது அவசியமாகும். கலைத்திட்டமானது தொழிற்திறன்களை வழங்கும் அதே வேளையில் உடலுழைப்புத் தொழில்களை மனமுவந்து ஏற்கும் மனப்பான்மையையும் இளந்தலைமுறையினரிடம் ஏற்படுத்த வேண்டும். கலைத்திட்டம் வழங்குகின்ற தொழிற்திறன்களானது பொருளாதார அமைப்பில் நிலவுகின்ற தொழில் வாய்ப்புகளுடன் தொடர்புடையனவாக விளங்குதல் வேண்டும். இளைஞர்களுக்குத் தொழில் வாய்ப்பினை வழங்குவதாக மட்டும் அமையாது எமது நாட்டின் மூலவளங்களை உற்பத்திப் பெருக்கத்துக்காகப் பயன்படுத்தும் திறன்களை வழங்குவதாக கல்விமுறை அமையும்போதே இலங்கையின் பொருளாதாரமும் விருத்திபெறும் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை.

*திருமதி. எஸ்.ஜெயராஜா* (B.Com. Hons.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வித் தொழினுட்பத்தின் பங்கும் பணிகளும்

**முகவுரை:**

கல்வித்துறையில் நான்கு புரட்சிகள் நடைபெற்றன எனக் குறிப்பிடுவதுண்டு.

சமுதாயத்தில் வாழ்ந்த முதியோர் தம்முடைய இளைய தலைமுறையினர்க்கு வீடுகளிலோ, வேலைத்தலங்களிலோ கல்வி கற்பித்த நிலைமாறி, ஆசிரியர்கள் பாடசாலைகளில் வைத்துப் பிள்ளைகளுக்குக்கல்வி கற்பித்த காலக்கட்டத்தோடு முதலாவது கல்விப் புரட்சி ஆரம்பமாகியது.

வாய்மொழி மூலப் போதனைகள்மட்டும்இடம்பெற்ற நிலைமை மாறி, எழுத்து வடிவத்தினைக் கருவியாகக் கையாண்டு, மாணவரின் செவிப்புலனால் மட்டுமன்றிக் கட்புலனாலுங் கல்வி கற்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்ட காலகட்டத்துடன் இரண்டாவது கல்விப்புரட்சி ஏற்படலாயிற்று.

அச்சியந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மாணவர்களுக்குப் புத்தகங்கள் மற்றும் சாதனங்கள் தாராளமாய்க் கிடைக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டபோது மூன்றாவது புரட்சி இடம்பெற்றது.

'இலத்திரனியல்' துறையின் வளர்ச்சிக்குப் பின்னர் வானொலி, தொலைக்காட்சி, ஒலிப்பதிவு நாடா, கணனி போன்றவற்றின் தாக்கம் நிகழ்ந்த காலகட்டத்துடன் நான்காவது கல்விப்புரட்சி உருவாகியது.

போதனாமுறைகளில் ஏற்பட்ட மாற்றங்களை அடியொற்றி, கல்வித்துறையிலே புரட்சிகள் இவ்வாறாக இடம்பெற்றன எனக் கல்வியியலாளர்கள் குறிப்பிடுவதை ஆசிரியர்கள் அனைவரும் உளங் கொள்வது பொதுவாகத்தொழில்சார் விருத்திக்கும் - சிறப்பாகப் போதனை முறை வளர்ச்சி பற்றிய விளக்கத்திற்கும் - பெரிதும் உதவுவதாகும்.

**கல்வியின் மூன்று துருவங்கள்:**

கல்வித்துறையைப் பொறுத்தவரையிலே கற்போன், கற்பிப்போன், கற்பிக்கப்படும் பொருள் ஆகிய மூன்று அம்சங்களும் தொடர்புபடுத்தப்படுகின்றன. உண்மையில் இம்மூன்று அம்சங்களும் தொடர்புபடுத்தப்படும் செயன்முறையே கற்றல்-கற்பித்தற் செயன்முறை என அழைக்கப்படுகின்றது. கற்போன், கற்பிப்போன், கற்பிக்கப்படும் பொருள் என்பவற்றிற்கிடையே சிறந்த தொடர்பாடல் ஏற்படுத்தப்படவில்லையென்றால், இம்மூன்றும் ஒன்றற்கொன்று தூரத்திலுள்ள துருவங்களாகிவிடும். இம்மூன்று அம்சங்களையும் பயன்மிக்க வகையிலும், வினைத்திறன் மிக்க வகையிலும் தொடர்புபடுத்துவதற்கு விஞ்ஞான தொழினுட்பத்தின் வளர்ச்சி-சிறப்பாக இலத்திரனியலின் வளர்ச்சி இன்று பெரிதும் பயன்பட்டு வருவதைக்காண்கிறோம்.

விஞ்ஞான அடிப்படையிலான தொழினுட்பம் நாம் வாழும் இன்றைய சமூகத்தைப் பல்வேறு வழிகளிலும் பாதித்துவருகிறது. போக்குவரத்து, விவசாயம், மருத்துவம், விண்வெளி ஆண்வு போன்ற பல துறைகளையும் பாதித்துள்ள தொழினுட்பம் மனிதவாழ்க்கைப் பாங்கினை மாற்றிய வண்ணம் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதன் காரணமாக, மனித வாழ்க்கையில் தொடர்ச்சியான அனுபவ மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. காலம் மாற மாறக் கருத்துக்கள் மாற்றம் பெறுகின்றன; மனப்பாங்குகள் மாற்றம் பெறுகின்றன; திறன்கள் மாற்றத்திற்குட்படுகின்றன. இவ்வாறாக, வாழ்க்கைக் கோலம், காலத்துக்குக் காலம் மாறுவதை நிதர்சனமாகக் காண முடிகிறது. மாறிவரும் உலகிற்கு தக்கதாக இளஞ் சந்ததியினரைப் பொருத்தப்பாடு அடையச் செய்யும்வகையிலே கல்வி வழங்கப்படுவதற்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வித்தொழினுட்பம் மிகமிக இன்றியமையாததாகிவிட்டது.

## கல்வித் தொழினுட்பம் என்பதன் விளக்கம்:

கட்புல, செவிப்புல சாதனங்களைக் கையாண்டு, கற்போன்-கற்பிக்கப்படும் பொருள்-கற்பிப்போன் ஆகிய மூன்று அம்சங்களும் தொடர்பாடல் அடையவேண்டும் என்ற கருத்துத் தான் "கல்வித் தொழினுட்பம்" அல்லது "போதனதொழினுட்பம்" என்ற தொடர்கள்மூலம் புலப்படுத்தப்படுகிறது. கிடைக்கக்கூடிய வளங்களை உச்ச அளவுக்குப் பயன்படுத்தவும், கல்விக்கான செலவினங்களுக்குரிய உச்ச விளைவுகளைப் பெறுவதற்குமான முகாமைத்துவ நடைமுறைகளை உள்ளடக்கும் வகையிலே இன்று கல்வித்துறையிற் பிரபல்யமாகி வருகின்ற ஓர் அணுகுமுறையாகக் கல்வித்தொழினுட்பம் விளங்குகின்றது. சுருங்கக் கூறின், **கற்றல்-கற்பித்தற் செயன்முறையை அளவுரீதியாகவும் பண்பு ரீதியாகவும் முன்னேற்றுவதற்கு உதவும் வகையிலே கற்றற் குறிக்கோள்களை மாணவர் அடையும் பொருட்டு, கற்பித்தல் ஊடகங்கள் அவற்றின் இயல்புகள், ஊடகத்தையும் வளங்களையும் தெரிவுசெய்வதற்கான கொள்கைகள் வளங்களின்முகாமைத்துவம் என்பவற்றை விருத்திசெய்தலும் பிரயோகித்தலும் மதிப்பிடலும் ஆகிய கருமங்களை உள்ளடக்கிய தொழினுட்பம் கல்வித் தொழினுட்பம் எனப்படுகிறது.**

## கல்வித்தொழினுட்பத்தின்முக்கியமான பணிகள்:

சமகாலச் சமூகத்திலே கல்வித்தொழினுட்பத்தைப் பயன்மிக்கதாக வகுப்பறைக் கற்றல்-கற்பித்தலிலே பயன்படுத்துவதற்குப் பின்வருங் கருத்துக்களை ஆசிரியர் மனதிற் கொள்ளல் வேண்டும்.

(1) ஒவ்வொரு மாணவனும் தனித்துவமுடையவன் ஆகையால், எந்தவொரு அனுபவத்திலும் ஈடுபடுதல், துலங்குதல் என்பவற்றில்தனித்துவம் காணப்படும். எனவே, தனித்தனி மாணவனுக்கோ, ஒத்த ஆற்றல்கள்-ஆர்வங்கள் அறிவு மட்டம் - கொண்ட சிறு சிறு குழுவினருக்கோ பொருத்தமான வகையில் கற்றல் - கற்பித்தற் செயன்முறையைத்திட்டமிட்டு மேற்கொள்ளல் அவசியமாகிறது. வழமையான 40 அல்லது 50 பேர் கொண்ட வகுப்புக்களிற் கையாளும் போதனைமுறைகளை மேற்கொள்ளலாகாது.

(2) மாணவரின் புலக்காட்சியே கற்றலின்அடிப்படை என்பதை நினைவிற் கொண்டு, மாணவருடைய புலக்காட்சியை வளர்த்து, முன்னர் அவர்கள் பெற்றுக் கொண்ட புலக் காட்சிகளையும் பரிசோதனைப் பின்னணிகளையும் சேர்த்து, சரியான எண்ணக்கரு விருத்திக்கு வழி கோல வேண்டும்.

(3) கற்போன் முழு விருப்புடன் ஈடுபட்டாலோழிய கற்கும் விடயத்தைக் கிரகிக்கச் செய்வதிலே கற்பிப்போன் வெற்றிபெற முடியாது. எனவே, மாணவரைச் செயற்படச் செய்வதற்கும், தாமாகவே உற்சாகத்தோடு கற்றலில் ஈடுபடுவதற்குமான ஒரு சூழ்நிலையை உருவாக்குவது அவ்சியம்.

(4) மாணவரின் ஆர்வம், ஆற்றல், கற்றலுக்கான ஆயத்த மட்டம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு கற்பிக்கப்படும் பொருள், கற்பித்தல் ஊடகம், கற்பித்தற் சாதனங்கள், முறைகள் என்பன நிருணயிக்கப்படல்வேண்டும். இதற்கு உதவும் வகையிலே கட்புல-செவிப்புல சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும்.

(5) மாணவரின் தனித்துவம், படைப்பாற்றல் என்பன வளர்க்கப்படும் வகையிலே கற்றல்- கற்பித்தற் செயன்முறை திட்டமிடப்படல் அவசியமாகிறது. ஏதோ கற்பித்தலுக்காகக் கற்பித்தது என்றில்லாமல், ஆசிரியர் தம்மிடம் ஒப்படைக் கப்பட்ட மாணவர் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு மனித வளம் என்று கருதி, அவரவரின் ஆற்றல்களையும் மனப்பாங்கிகளையும் வளர்த்து தனிமனித சளர்ச்சிக்கும், சமுதாய வளர்ச்சிக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் வளமூட்டுதல் இன்றியமையாததாகிறது.

## முடிவுரை

ஆசிரியர் மையக் கல்வி என்ற நிலைமை மாற்றமுற்று மாணவர் மையக் கல்வி முக்கியத்துவம் பெற்றுவரும் இக்காலப் பகுதியில் கற்றல்-கற்பித்தற் செயன்முறை சிறப்புற அமைய வேண்டுமாயின், கல்வித் தொழினுட்பம் பொருத்தமாகக் கையாளப்படுதல் தவிர்க்கமுடியாததொன்றாகி விட்டது.

திரு .ந.சிதம்பரநாதன்
(விரிவுரையாளர்)
பிரதம செயற்றிட்ட அதிகாரி
தமிழ் மொழித்துறை
தேசியகல்வி நிறுவகம், மகரகம.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best Wishes

# Mala

Jewellery House

100, Sea Street, Colombo - 11.
Phone: 325287

NM

# International Marketing Centre

Dealers in RICE MILL Machineries,
Diesel Engines, Water Pumps, Electrical Goods,
Motors, Handtools & Spares.

312, Sri Sangaraja Mawatha,
Colombo 10.
T'Phone: 432956 432007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் எதிர்நோக்கும் சமூகப் பொருத்தப்பாடற்ற மாணவர்களும், அவர்களை நற்சமூகமயமாக்கலும்.

வை. மோகன் சுப்பிரமணியம் (B.Com. Hons.)
( ஆசிரிய ஆலோசகர் - வர்த்தகம்)

சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடத்தைக் கோலங்களுக்கு ஏற்ப தன்னை இயைபுபடுத்துக்கொள்ளாத மாணவர்களையே சமூகப்பொருத்தப்பாடற்ற மாணவர்கள் என அழைக்கின்றோம். இத்தகைய மாணவர்களை சமுதாயம் ஏற்பதில்லை. இதனால் அவர்கள் சமூகத்தில் இருந்து ஒதுக்கி வைக்கப்படுகிறார்கள். எனவே ஆசிரியர்களாகிய நாம் கற்பித்தல் செயல்பாடுடன்மட்டும் நின்றுவிடாது சமூகப் பொருத்தப்பாடற்ற மாணவர்களை சமூகத்திற்கு பொருத்தப்பாடு உடையர்களாக மாற்ற வேண்டும். இதற்காக நாம் பல வழிகளிலும் எம்மை தியாகம் செய்து செயல்பட வேண்டும்.

சமூகப்பொருத்தப்பாடற்ற மாணவர்களின் பண்புகளை அடிப்படையாக வைத்து மாணவர்கள் இரண்டு வகைகளாக தரம் பிரிக்கலாம்.

01. நற் பழக்க வழக்கங்களுக்கு உட்படாத மாணவர்கள்.

02. தனிமையை விரும்பும் மாணவன்.

நாம் பாடசாலைகளிலுள்ள ஒவ்வொரு வகுப்பறையிலும் பலவகையான நற்பழக்க வழக்கங்களுக்கு உட்படாத ஒருசில மாணவர்களாவது இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இங்கு நற்பழக்க வழக்கங்களுக்கு உட்படாத மாணவன் என்னும் போது அவன் பாடசாலையின் நடத்தைக் கோலங்கள்; விழுமியங்கள்; அறநெறிகளுக்குட்படாது இருப்பதே ஆகும். இத்தகைய மாணவர்களின் பண்புகளை நோக்குவோம்.

- புகை பிடித்தல், மதுபானம் அருந்துதல், போதைப்பொருள் பாவித்தல், பாலியல் நடத்தைக் குறைபாடு உடையவர்கள்.
- பாடசாலை அல்லது பிறமாணவர்களின் சொத்துக்கள் என்பவற்றினை சேதப்படுத்துதல் அல்லது களவெடுத்தல்.
- வகுப்பில் அல்லது பாடசாலையிலுள்ள சக மாணவருடன் சண்டை பிடித்தல்.
- வகுப்பில் ஆசிரியர் சிறப்பாக கற்பிக்க முடியாதவாறு தொல்லை கொடுத்தல்.
- வகுப்பில் தகாதவார்த்தை பேசுதல்.
- கற்பித்தல் நடக்கும்போது பாடத்தில் கவனம் செலுத்தாது வேறுவேலைகளில் ஈடுபடுதல்.
- சமூக வளர்ச்சி குறைந்த மாணவர்கள்.

மேற்கூறிய நற்பழக்க வழக்கமற்ற ஒரு நடத்தையில் ஒரு மாணவன் ஈடுபடும் போது சில ஆசிரியர்கள் கோபம் கொண்டு அவனை கடுமையாக அடிப்பதையும், அல்லது அவ்மாணவனைப்பற்றி அதிபரிடம் முறைப்பாடுசெய்து அவனைப் பாடசாலையிலிருந்து நீக்கி விடுவதையும் நாம் காணக்கூடியதாக இருக்கிறது. ஆனால் இவ்வாறு செய்வது பொருத்தமற்றதாகும். ஏனெனில் இவ்நடவடிக்கைகள் அம்மாணவனை நற்சமூகமயமாக்குவதற்கான எவ்வித தூண்டுலாகவும் அமையாது. மேலும் குழப்பம் செய்பவனை சமுதாயமேற்பதில்லை. எனவே அவ்மாணவன் தொடர்ந்தும் நற்சமூகமயமாக்கத்திற்கு உள்ளாகாதவனாகவே இருப்பான். மேற்கூறிய பண்புகளைக்கொண்ட பிறழ்வான நடத்தையில் ஒரு மாணவன் ஈடுபடுவதற்கு காரணம் பாடசாலையிலும், வீட்டிலும் அவனது அன்புத்தேவை, காப்புத்தேவை ஆகியன பூர்த்தியாகாத வேளைகளில் ஏற்படும் மனவெழுச்சித் தாக்கங்களினின்றும் தப்புவதற்காகவே என்பதை நாங்கள் நன்கு புரிந்திருத்தல் வேண்டும். எனவே நாம் மாணவரிடத்தில் நல்ல சமூக ஒழுக்க விழுமியங்களையும் சுய ஒழுக்க கட்டுப்பாடுகளையும் விருத்தசெய்ய முயற்சியெடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக - புகைபிடிக்கும் அல்லது பாலியல் நடத்தைக் குறைபாடுடைய மாணவருடன் நேராகவே கலந்துரையாடி அவற்றின்தீங்குகளைப்பற்றி எடுத்துக்கூற வேண்டும். அத்துடன் தாம் செய்தது பிழைதான் என்பதனை உணரச் செய்ய வேண்டும். தேவை ஏற்படின் பெற்றார்களினது உதவியையும் நாடலாம். இதேபோன்ற ஒரு அணுகு முறையை பாடசாலையின் சொத்துக்களை சேதப்படுத்தும் அல்லது களவெடுக்கும் மாணவர்களுக்கும் கையாளலாம். இங்கும் அவ்மாணவன் தான் செய்தது குற்றந்தான் என்பதை உணர்ந்து ஏற்றுக்கொள்ளச் செய்தல் வேண்டும். முடியுமானால் தண்டனையும் வழங்குதல் வேண்டும்.

வகுப்பில் குழப்படி விளைவிக்கும் அல்லது சண்டித்தனமான செயல்களில் ஈடுபடும் மாணவர்களைப் பொறுத்தவரை நாம் சில தந்திரமான வழிகளைக் கையாண்டு அவனை நம்பக்கம் கவர வேண்டும். அவனுடன் நல்ல முறையில் பழகி, அவனைப்பற்றி நன்றாக விளங்கிக்கொண்டு அதன்பின் அவனை நல்வழிக்கு கொண்டுவர நாம் பின்பற்ற வேண்டிய வழி முறைகளைச்சிந்தித்து அதன்படி செயற்பட வேண்டும். நமது பிரச்சனைகளை விடுவித்துக் கொள்வதற்கு பாடசாலையில் அனுபவமுள்ள சக ஆசிரியருடன் இது சம்பந்தமாகக் கலந்துரையாடுவது நமக்கு பேருதவியாக அமையும் பொதுவாக இப்பண்புகளைக் கொண்ட மாணவர்களுக்கு தலைமைத்துவம் வழங்குவதன் மூலமோ அல்லது சில பொறுப்புக்களை ஒப்படைத்தல் மூலமோ அவனை படிப்படியாகச் சமுதாயப் பொருத்தப்பாடுடையவனாக மாற்ற முடியும்.

சில மாணவர்கள் வகுப்பில் தகாத வார்த்தைகளை பாவிக்கக்கூடும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் அவன் பேசுவதை உடன் தடுத்து நிறுத்துதல் வேண்டும். பின் அன்பான வார்த்தைகளால் அவனை கவர்ந்துகொள்ள முயற்சித்தல் வேண்டும். இவ்வாறு செய்வதினால் படிப்படியாக சமுதாயம் ஏற்றுக்கொள்ளும் பண்பான மொழியில் அவனைப் பேசப்பழக்கலாம்.

ஒரு சில மாணவர்கள் கற்பிக்கும் போது பாடத்தில் கவனம் செலுத்தாது பிறவேலைகளில் ஈடுபட்டு இருக்க நாம் காண்கின்றோம். இவ்வாறான சூழ்நிலையில் அவனை எம்மிடம் ஈர்த்து நமது அவதானத்தையும் ஆதரவையும் அனுமதியையும் அன்பையும் தேவையான நேரத்தில் அவனுக்கு வழங்குதல் வேண்டும். இதனால் அவனது கௌரவத்திற்கும் பாத்திரமானவர்களாக நாம் மாறிவிடுவோம். இதன் காரணமாக இயல்பாகவே அவனுக்கு நாம் கற்பிக்கும் பாடத்தினை விரும்பிப் படிப்பதற்கான இயல்லூக்கம் ஏற்படும்.

பாடசாலைகளில் பாடசாலை சூழலுக்கு அல்லது நாம் வாழும் சமுகச் சூழலுக்கு ஏற்ற வளர்ச்சியடையாத சில மாணவர்களை நாம் இனம் காணக்கூடியதாக இருக்கின்றது. உதாரணமாக கல்விச்சுற்றுலா ஒன்றின்போது கிராமியச் சூழலிலிருந்து வந்த ஒரு மாணவன் அச்சூழ்நிலைக்கு ஏற்ப சாப்பிடாது இருக்கலாம். நாம் இவ்வாறான சந்தர்ப்பத்தில் சாப்பிடும் முறையை அவனுக்கு அன்புடன் அறவுறுத்துவதன் மூலம் அவனை ஏற்றுக்கொள்ள வைக்கலாம். இவ்வாறு மாணவன் புதிய சூழலில் பல இடர்களை எதிர்நோக்கும் போது அவனுக்கு வழிகாட்டலாம். இவ்வாறு செய்வதினால் அவன் படிப்படியாக சமூக வளர்ச்சி பெறுவான்.

மேலும் தனிமையை விரும்பும் மாணவன் சமுகத்தில் தனித்துவமானவனாக உள்ளான். இத்தகைய மாணவர்களின் பண்புகளை நோக்குவோம்.

- வெட்கப்படுவார்கள்; மற்றவர்கள் தங்களை உற்றுநோக்குவதை விரும்பமாட்டார்கள்.

- மிகச்சிறிய விடயத்துக்கும் கலக்கமடைவார்கள். தவறுகளுக்காகக் குறைகூறும்போது அல்லது குற்றம் சாட்டும்போது கண்ணீர் விடும் இயல்பு காணப்படும்.

- மாணவர்கள் தங்கள் விருப்பப்படி குழுக்களாக இணைந்து செயலாற்றும்போது பிரிந்து தனியாகக் காணப்படுவார்கள்.

- இடைவேளையின் போது தனிமையில் காணப்படுவார்கள்.

- பாடசாலைகளில் இடம்பெறும் எந்த ஒரு நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளாமல் ஒதுங்கியிருப்பார்கள். உதாரணமாக விளையாட்டுப்போட்டிகள்; சுற்றுலாக்கள்; விருந்துபசாரங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வகைப் பண்புகளைக் கொண்ட மாணவர்களை நாம் வழிகாட்டுவதன் மூலமும், சமுகமயமாக்கல் நுட்பமுறைகளைப் பயன் படுத்துவதன் மூலமும் அவர்களை சமுகத்துக்குள் இசைவாக்க வேண்டும். இல்லையெனில்இவர்கள் வாழ்க்கையில் பிரச்சனைகள் அல்லது தடைகள் ஏற்படும் போது தமக்குள்ளேயே தாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல்வியடைந்துவிட்டோம் எனக் கருதுவர். மேலும் பாடசாலையில் தனது சமுதாய வளர்ச்சித்திறன்களை வளர்த்துக்கொள்ள சந்தர்ப்பம் கிடைக்காததினால் இவர்கள் சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளாத நடத்தை மாதிரிகளில் ஈடுபடுவர். இவ்வாறு சமுதாய வளர்ச்சித்திறன்கள் வளராதபடியினால் இவர்கள் வயதுவந்தபின் சமூகத்திலும் தனிமையாக்கப்படுவார்கள்.

சமூகமானப் பரீட்சையை வைப்பதன் மூலம் நாம் தனிமையை விரும்பும் மாணவரை பொதுவாக இனம் காண முடியும். (ஏனெனில் தனிமையை விரும்பும் மாணவர்கள் சகமாணவர் மத்தியில் செல்வாக்கு இழந்து இருப்பார்கள்.) பின்னர் கற்பித்தல் நடவடிக்கையிலும் வேறு செயற்பாடுகளிலும் அம் மாணவர்களை அவதானித்து தனிமையை விரும்பும் மாணவர் யாவர் என்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்ளலாம் இவ்வாறு இனம் கண்ட மாணவர்களுக்கு பின்வரும் பொறுப்புக்களையும் செயற்பாடுகளையும் கொடுப்பதன்மூலம் அவர்களை சமூக இசைவாக்கம் செய்ய முடியும்.

- வகுப்பறையில் அவர்களுக்கு சில பொறுப்புக்களை வழங்குதல். உதாரணமாக தவணைப்பரீட்சைக் கட்டணத்துக்கு உரிய தொகையை சகமாணவர்களிடம் இருந்து சேகரித்துத் தரச்சொல்லுதல்.

- தலைமைத்துவம் பெறக்கூடிய சந்தர்ப்பங்களை வழங்குதல். உதாரணமாக விளரயாட்டு நிகழ்ச்சியின்போது அல்லது மாணவர் மன்றத்தில் இடம் பெறும் போட்டிகளில் ஒரு குழுவுற்கு தலைமை தாங்கவிடுதல்.

- பல்வேறு வகையான வகுப்பைச் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும் பொறுப்புக்களை வழங்கல்.

- படிப்படியாக ஓய்வு நேரத்தினை நல்ல முறையில் செலவிட வழிகாட்டுதல்.

- ஏனைய மாணவர்களின் உதவியைப் பெற்று மேற்கொள்ள வேண்டிய வேலைகளைப் பொறுப்பாகக் கொடுத்தல்.

மேற்கூறிய விடயங்களில் ஏதாவது ஒன்றினை மாணவன் செய்யும் போது அல்லது நிறைவேற்றும் போது பொருத்தமான சமூகமயமாக்கல் கருவியைப் பயன்படுத்துவதன் மூலம் (பரிசு அல்லது பராட்டுதல்கள் வழங்கி கௌரவிப்பதைக் குறிப்பிடலாம்) மேலும் அவனை சமூக இசைவாக்கம் செய்ய முடியும்.

எனவே சமூகப் பொருத்தப்பாடற்ற மாணவர்களை நற்சமூகமயமாக்கும் ஆசிரியர் ஒரு சமூகமயமாக்கற் காரணியாவர் என்பது தெளிவு. நவீனவுலகத்தில் ஆசிரியர்களின் செயல்கள் கற்பித்தலோடு மட்டும் நின்று விடுவதில்லை. மாணவர்களைப் பொறுத்தவரை அவர் நல்லாசிரியராகவும் ஒரு சிறந்த பெற்றோராகவும் நல்ல நண்பனாகவும் இருப்பதுடன் நல்ல வழிமுறைகளை உபதேசிப்பவராகவும் இருக்க வேண்டும். இவ்வாறு ஒரு ஆசிரியர் செயற்படுவதால் மாணவர்களை சிறந்த சமூகப்பொருத்தப்பாடுள்ள பிரஜையாக மாற்ற முடியும். இது கற்பித்தல் செயலுடன் சமமாக மதிக்கப்படக்கூடிய ஒரு கருமமாகும். மறுவார்த்தையில் கூறுவதானால் ஒவ்வொரு ஆசிரியரும் நிறைவேற்றிமுடிக்கவேண்டிய மிகப் பெறுமதியுள்ள சமுதாயச் சேவையாக அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS

FROM

# SATHYAMS TEXTILES

Wholesale & Retail Dealers in Textiles

124, B 1/9, Keyzer Street,
Colombo - 11.
Telephone : 338171

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments from ;

## *ARUL STUDY CIRCLE*

Classes conducted for
G.C.E. (Ordinary Level & Advanced Level)
Year 5, 6, 7, 8, 9, & 10
Computer Classes
Spoken English, Spoken Sinhala
AAT
Shorthand & Typing in English & Tamil
Dressmaking
T.V., Radio Repairs & Electronic Classes
Cake Making Classes etc.

111, Bondface Road,
Kotahena,
Colombo 13.
Tel: 331495

*Best Compliments from:*

# BUHARY MINI MARKET

Dealers in Electrical Accessories, Home Appliances, T.V. Antenna & Boosters
Telicom & Paypone Cards and Photo Copy Service.

**235, R.A.De Mel Mawatha,**
**Colombo - 03.**

Tel: 574001. Fax; 94-1-574001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## EXECUTIVE COMMITTEE

| | | |
|---|---|---|
| President | - | T.Rajaratnam |
| Vice President | - | T.Ganesharajah |
| Secretary | - | A.Ananthi |
| Asst. Secretary | - | P.Manjula |
| Treasurer | - | G.Ashraf |
| Vice Treasurer | - | St.S.Ignesia |
| Editors | - | A.Shanmugalingam<br>A.Jesuratnam. |

## COMMITTEE MEMBERS

1. S.Arumugam
2. K.Senturvell
3. V.Arunakaran
4. C.Rajakon
5. V.Mohan
6. S.Giritharan
7. K.Vallipuram
8. Mrs. Y.Munas
9. Mrs.A.Nadesan
10. Mrs.B.Deen
11. Mrs.S.Jeyarajah
12. Miss.S.Shyamala
13. Miss.M.Rosabell
14. Miss.C.Vasuki
15. Miss.P.Shamini
16. Mrs. Z.Jawfer
17. Miss.A.G.Agnes

## LECTURERS

1. Mr. V. Kugatharan
2. Mr. T. Kanagaratnam
3. Mr. M. Rasick
4. Mr. N. Sithamparanathan
5. Mr. A. Umaru Lebay
6. Mr. S. Subramaniam
7. Mr. A. Inanu
8. Mr. K. Bernard
9. Mr. M. Manokaran
10. Mrs. L. D. Silva
11. Mrs. G. Nanayakara
12. Mrs. P. Thiyogarajah

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய கல்வி நிறுவக

பட்டப்பின் படிப்பின் கல்வி டிப்ளோமா - 1994

தமிழ்ப் பிரிவு

கொழும்பு நிலையம் நடாத்தும்

# கலை விழா

காலம் : 1994.07.22 வெள்ளிக்கிழமை

நேரம் : பிற்பகல் 2.00 மணி

இடம் : முஸ்லீம் மகளிர் கல்லூரி, கொழும்பு 04.

## நிகழ்ச்சி நிரல்

1. பிரதம விருந்தினரை வரவேற்றல்.
2. மங்கள விளக்கேற்றல்.
3. வரவேற்புக் கீதம்.
4. வரவேற்புரை (முதலாம் வருட மாணவர்கள்).
5. தலைமையுரை.
6. வரவேற்பு நடனம் (திருக்குடும்ப கன்னியர்மடம், கொழும்பு).
7. நூல் வெளியீடும், அறிமுகவுரையும்.
8. கோலாட்டம் (கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி மாணவிகள்).
9. சிரேஷ்ட விரிவுரையாளர் உரை.
10. நாட்டுப் பாடல் (கொழும்பு முஸ்லீம் மகளிர் கல்லூரி).

**இ டை வே ளை**

11. நாடகம் (கொழும்பு பம்பலப்பிட்டி றோ.க.த.வித்தியாலயம்).
12. வில்லுப்பாட்டு (கொழும்பு இசிப்பத்தான கல்லூரி).
13. சிறப்பு விருந்தினர் உரை.
14. நாடகம் (கொழும்பு றோயல் கல்லூரி)
15. பிரதம விருந்தினர் உரை.
16. பரத நாட்டியம் (திருக்குடும்ப கன்னியர் மடம், கொழும்பு).
17. நன்றியுரை.
18. தேசிய கீதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Post Graduate Diploma in Education**
**(N.I.E) Tamil Division Presents**
**A Cultural Pagent**
**(Programme)**

**Venue : Muslim Ladies College, Bambalapitiya.**

**Date : 22nd July, 1994 - Friday.**

**Time : 2.00 p.m.**

1. Arrival of the Chief Guest.
2. Lighting Oil Lamp.
3. Welcome Song.
4. Welcome Speech.
5. Address by Mr. Rajaratnam.
6. Welcome Dance.
7. Publishing the Magazine and Introduction.
8. Folk Dance (Colombo Ramanathan Hindu Ladies College).
9. Delivery of Speech by the Senior Lecturer.
10. Country Song (Colombo Muslim Ladies College).

INTERVAL

11. Drama (Colombo/Bambalapitiya R.C.Tamil School).
12. Narrative Folk Song (Ispathana College ).
13. Speech by the Guest of Honour.
14. Drama (Colombo Royal College).
15. Speech by the Chief Guest.
16. Baratha Natyam (Holy Family Convent, Colombo ).
17. Vote of Thanks.
18. National Anthem.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best Compliments

From

# MASTER FEEDS LTD

*Sole Distributors*

*for*

*High qulaity Poultry Feeds*

*Manufactured by*

## VETHOUSE (PVT) LTD

14/2 , Tower Building, 25,Station Road, Colombo 04.
Tel: 580245, 501249

With the Best Compliments from :

# SEA AND SHORE (PVT) LTD

22, St. Kildas Lane, Colombo - 03, Sri Lanka. Tel: 584890

**VAN FOR HIRE**

| Place | Period | Rates | K.Meters | Extra KM. |
|---|---|---|---|---|
| Colombo | 1 day | Rs. 800/- | Min.100 | @ Rs. 8/- |
| Kandy | 1 day | Rs. 1,750/- | 250 | @ Rs. 8/- |
| N.Eliya | 1 night | Rs. 3,000/- | 400 | @ Rs. 8/- |
| Kataragama | 1 night | Rs. 4,000/- | 550 | @ Rs. 8/- |
| Chilaw (Muneeswaram) | 1 day | Rs. 1,300/- | 175 | @ Rs. 8/- |
| Sigiriya | 1 day | Rs. 2,500/- | 360 | @ Rs. 8/- |
| Dambulla | 1 day | Rs. 1,800/- | 260 | @ Rs. 8/- |
| Puttalam | 1 day | Rs. 2,500/- | 320 | @ Rs. 8/- |
| Galle | 1 day | Rs. 2,000/- | 250 | @ Rs. 8/- |
| Hikkaduwa | 1 day | Rs. 1,500/- | 220 | @ Rs. 8/- |
| Negombo | 1 day | Rs. 750/- | 90 | @ Rs. 8/- |

Railway Station (Fort) Rs. 250/-
City to Airport Rs. 600/-
Greater Colombo Min. 2 Hrs. (20 KM) Rs. 200/-
(Additional Rs. .10/- per KM. & Rs. 50/- per Additional Hr.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Compliments From :

# Ferro Trading Ltd.

509-1/1, Bullers Road,
Colombo 8, Sri Lanka.

*With Best Compliments From :*

*Mr. & Mrs. C. Lokanathan*
*Colombo 14.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from :*

# NEW ALEXANDRA STORES

*Wholesale & Retail Dealers in
Grams & Sweets*

*42, Galle Road, Colombo 06.
Tel: 5 8 5 9 2 7*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் நுட்பப் பாடங்களுள் வர்த்தக பாடங்கள்

வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் பலவும், விரைவான அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்ட நாடுகள் பலவும், வளர்ச்சியடைந்த நாடுகளின் வளர்ச்சிப் பாதையின் அனுபவங்களைப் பின்பற்ற முயன்று வருகின்றன. இவ்வகையில் இலங்கையும் அண்மைக் காலங்களில் அத்தகைய நாடுகளின் வரலாற்று அனுபவங்களைப் பின்பற்ற முயன்று வருகின்றது என்பது வெளிப்படையாகும்.

நாடுகளின்அபிவிருத்திக் குறி காட்டிகளில் கல்வியியற் குறி காட்டிகள் இன்றைய கால கட்டத்தில் பிரதானமாகக் கொள்ளப்படுகின்றன. அத்துடன் நாடுகளில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் அடிப்படைக் குற்றச்சாட்டு கல்வியின்மீதே கட்டி விடப்படுவது, இன்று சகல தரப்பினரதும் நாகரிகமாக ஒரு நடைமுறையாகிவிட்டது. இவ்வகையில் கல்வியினூடாக நாடுகளிற் காணப்படும் சகல பிரச்சினைகளிற்கும் தீர்வு காண முடியும் என்றும் கூறப்படுகின்றது. குறிப்பாக பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு கல்வியினூடாகத் தீர்வுகாண முடியும் என்றும்இதற்கு நாடுகளிற் காணப்படும் கல்விமுறைகளில் சில குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி, அதற்குக் கல்வி முறைகளில் வளர்ச்சியடைந்த நாடுகளின் அனுபவங்களினூடான மாற்றங்கள் தேவைஎன வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இத்தகையபோக்கு இலங்கையிலும் கடந்த இரு தசாப்தங்களுக்கும் மேலாக இருந்து வருகின்றது என்பது கண்கூடு.

இலங்கையில் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக, இலங்கைக்குப் பொருத்தமான கல்விமுறையாக மாற்றுவதற்கு காலத்துக்குக் காலம் பல்வேறு முயற்சிகளும், மாற்றங்களும் செய்யப்பட்டு வந்துள்ளன என்பதை அறிய முடிகின்றது. இம்மாற்றங்களுள் பிரதானமான மாற்றமாக, செயன்முறைக்கல்வி அல்லது தொழில் நுட்பக் கல்வி அல்லது தொழில் கல்வி என்ற எண்ணக் கருவே மேலோங்கிக் காணப்பட்டது இவ்வகையில், தொழில் நுட்பப் பாடங்கள், தொழில் முன்னிலைப்பாடங்கள் எனப் பல பாடங்கள் கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டன. இவற்றிற்கு அடிப்படை நோக்கம் மாணவர்களுக்கு தொழில் முன் அனுபவங்களைக் கொடுப்பதேயாகும். கடந்த கால மாற்றங்களினூடாக இந்த நோக்கம் எந்தளவிற்கு நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது இன்னும் விவாதத்திற்குரியதாகும்.

இலங்கைக் கல்வி முறையிற் கூறப்படுகின்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களில் பரீட்சையை மையமாகக் கொண்ட கல்வி முறை என்ற குற்றச் சாட்டு வலுவானதாக இருக்கின்றது. இதனை நீக்குவதற்காக மாணவர்களுக்கு வாழ்க்கைக்கு உதவக் கூடிய தொழில்அனுபவங்களைக் கொடுக்கக் கூடிய பாடங்களுக்கு கல்வி முறையில் தொழில் நுட்பக் கல்வி என்ற வகையில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகின்றது. மறுபக்கமாக இலங்கையின் கல்வி வரலாற்றில் மாணவர்களது இடைவிலகல் அதிகரித்து வருவதும், சிரேஷ்ட இடை நிலைக்குப்பின்னர் பாடசாலைகளிலிருந்து வெளியேறுவோரை தொழில் உலகம் ஈர்த்துக் கொள்ளாமையும்மற்றொரு பிரச்சினையாகும். இதற்காக சுய தொழில் வாய்ப்பை அளிப்பதற்கு தொழில் நுட்பப் பாடங்களைக் கல்வி முறையில் புகுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தொடரில் விவசாயம், வர்த்தகம், மனைப்பொருளியல், தொழில் திறன்கள் போன்ற பாடங்கள் இலங்கையின் கல்வி முறையில் தொழில் நுட்பப்பாடங்களாகப் புகுத்தப்பட்டுள்ளன.

மேலே கூறப்பட்ட தொழில் நுட்பப் பாடங்களினூடாக மாணவர்களிடையே சுய தொழில் வாய்ப்பையும் வாழ்க்கைத்திறன்களையும் ஏற்படுத்துவது நோக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது. இப் பாடங்கள் கற்பிக்கப்படுவதற்கு இலங்கையின் கல்வி முறையில் பின்வரும் நோக்கங்கள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளன.

1. பயனுள்ள செயன் முறைத்திறன்களால் உருவாகும் முடிவுப் பொருட்களுடன் அல்லது சேவையுடன் நிறைவு பெறுதல்.

2. கூட்டுறவு முயற்சிகளுக்குப் பொருத்தமான தொழில் நுட்ப, சமூக, நடத்தைத்திறன்களை விருத்தி செய்தல்.

3. தலைமைத்த்வம், விடாமுயற்சி, தொடக்கத்திறன், ஆக்கத்திறன் என்பவற்றை ஏற்படுத்துதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தாளாண்மை, முகாமைத்துவம், தீர்மானம் எடுத்தல், செயற்பாடுகளைப் பழக்குதல்.

5. தொழில் நுட்பப் பிரச்சினைகளை எதிர்கொள்ளல்.

வர்த்தக பாடங்கள் :

வர்த்தக பாடங்கள் என்ற நோக்கில் நடைமுறையில்காணப்படுகின்ற கனிஷ்ட தொழில் நுட்ப தராதரப்பத்திர பாடநெறியில் தரப்பட்ட பிரிவுகளை நோக்குவது இங்கு முக்கியமானதாகும்.

1. தட்டச்சு.
2. சுருக்கெழுத்தும், தட்டச்சும்.
3. விளம்பர நுட்பங்கள்.
4. கூட்டுறவு நடைமுறையும் பயிற்சியும்.
5. பொதியிடல்.
6. விற்பனைத்துவம்.
7. செயலாளர் நடைமுறைப் பயிற்சி
8. கணக்கியல்.
9. முகவர் சேவைகள்.

இவை தவிர பொருளியலும் வர்த்தக பாடங்களுள் ஒன்றாகக் கொள்ளப்படுகின்றது. ஆயினும் பொருளியலைத்தவிர்த்து மேற்கூறப்பட்ட பிரிவுகள் தொழில் நுட்ப பாடங்களின் நோக்கினை எந்த அளவிற்கு நிறைவேற்றுகின்றன என்பதை அவதானித்தல்அவசியமாகும்.

தன்சானியா, மக்கள் சீனா, யப்பான் போன்ற நாடுகளின் கல்வி நோக்கங்களில் உற்பத்தியுடன் கூடிய கல்வி என்ற நோக்கம் முதன்மை பெற்றிருக்கின்றது. இதே அம்சம் இலங்கையின் தொழில் நுட்பப் பாடங்களில் மேலோங்கி நிற்பதை உணர முடிகின்றது. ஆயினும் இலங்கைப் பாடசாலைகளில் இப் பாடங்களைப் போதிப்பதில் மீண்டும் பரீட்சை நோக்கமும் வர்த்தக ஆசிரியர்களது அறிவும் வசதியுமே, பாடத் தெரிவுகளில் முன்னுரிமை பெறுகின்றன. இதனால் உற்பத்தியுடன் கூடிய கல்வி அல்லது பயனுள்ள செயன்முறைத்திறன்களால் உருவாகும் முடிவுப் பொருட்களுடன் அல்லது சேவைகளுடன் நிறைவு பெறுதல் என்ற நோக்கம் நிறைவேறாது போகின்றது.

இலங்கைப் பாடசாலைகளில் தொழில் நுட்பப் பாடங்கள் என்ற வகையில் கணக்கியலுக்கே முக்கியத்வம் கொடுக்கப்படுகின்றது. கணக்கியலை விட தட்டச்சு, சுருக்கெழுத்து, விளம்பர நுட்பங்கள், பொதியிடல், முகவர் சேவைகள் போன்ற வர்த்தகப் பாடப் பிரிவுகள் கற்பிக்கப்படுவதனூடாக உற்பத்தியுடன் கூடிய கல்வி அல்லது பயனுள்ள செயன் முறைத்திறன்களின் உருவாக்கம், போன்ற தொழில் நுட்பப் பாடங்களின் நோக்கங்களைச் சிறப்புற நிறைவு செய்ய முடியும்.

மேற்கூறப்பட்ட கணக்கியல் தவிர்ந்த ஏனைய வர்த்தகப்பாடப் பிரிவுகளை வர்த்தக ஆசிரியர்கள் பாடசாலையில் தெரிவு செய்து கற்பிப்பதனூடாக பாடசாலையிலிருந்து இடைவிலகி செல்வோரும், சிரேஷ்ட இடைநிலைக்குப் பின்பு வெளியேறுவோரும் தொழிலுலகில் சுயவேலை வாய்ப்புக்களையோ, நிறுவன வேலை வாய்ப்புக்களையோ, அதிகளவில் பெற்றுக் கொள்ள முடியும் என்பது தவறாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் இவர்கள் இத்தகைய பாடங்களைக் கற்பதனூடாக விளம்பரம், பொதியிடல், முகவர் சேவை போன்றதுறைகளில் சுய தொழில் வாய்ப்புக்களை அதிகளவில் பெற்றுக்கொள்ள முடியும். இன்னும் தட்டச்சு, சுருக்கெழுத்து போன்றன குறிப்பாகத் தமிழில் கூடியளவு வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

வர்த்தகப் பாடங்களைக் கற்பிப்பதற்கு வர்த்தக ஆசிரிய வளங்கள் போதுமானவையாக இல்லாதிருப்பது இதற்குப் பிரதான தடையாக இருப்பது பலராலும் எடுத்துக் கூறப்படுகின்றது. எனினும் இருக்கின்ற வர்த்தக ஆசிரியர்களின் தியாக மனப்பான்மையாலும் கடின உழைப்பாலும் இப்பாடங்களைச் சிறப்புறக் கற்பிக்க முடியுமென்பது நம்பிக்கையாகும். உதாரணமாக விளம்பர நுட்பங்களை ஆசிரியர்அறிந்து அல்லது கற்று மாணவர்களுக்குக் கற்பிக்க முடியும்.

தட்டச்சு, சுருக்கெழுத்துப் போன்ற துறைகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள்இல்லாதிருப்பதும், தட்டச்சு இயந்திரங்கள் இல்லாதிருப்பதும் மற்றொரு தடையாகக் கூறப்படுகின்றன. தட்டச்சுஇயந்திரங்களைப் பெற்றுக் கொடுப்பது கல்வி அமைச்சின் நிதிச் செயற்பாட்க்கு இயலாத காரியம் எனக் கூற முடியாது. அதே போல் வர்த்தக ஆசிரியர்களுக்கு அல்லது வேறு ஆசிரியர்களுக்கு தட்டச்சு அல்லது சுருக்கெழுத்துப் பயிற்சி வழங்குவதும் முடியாத காரியமெனவும் கூற முடியாது. இத்தடைகளை நீக்குவதனூடாக வர்த்தக பாடங்களை உற்பத்தியுடன் கூடிய அல்லது தொழில் உலகுடன் இணைக்கப்பட்ட பாடங்களாகக் கற்பிக்க முடியும். இம்முயற்சி எதிர் காலத்தில் சிறந்த விளைவுகளைக் கல்வியில், பொருளாதாரத்தில், சமூகத்தில் கலாச்சாரத்தில், அரசியலில் ஏற்படுத்த முடியும் என்று துணிந்து கூறலாம்.

தொழில் நுட்பப்பாடங்கள் வெறும் பரீட்சைப் பாடங்களாக இல்லாமல் திறன்களை வளர்க்கும் பாடங்களாக, உற்பத்தியை அதிகரிக்கும் பாடங்களாக, தொழில் வாய்ப்புகளை வழங்கும் பாடங்களாகக் கற்பிக்கப்பட வேண்டும். இவ் வகையில் இன்று வர்த்தகப் பாடங்களில் ஆர்வம் காட்டும் மாணவ உலகத்திற்கு, ஆசிரியர் சமுதாயம் தியாக மனப்பான்மையுடன் செயற்பட்டு வழியேற்படுத்திக் கொடுத்தால் மாணவர்களுக்கு மட்டுமன்றி, முழு நாட்டிற்குமே பயனளிக்கக் கூடியது. இதன் விளைவாக சர்வதேச ரீதியாக இலங்கைக்கு ஒரு தனியிடத்தை நீண்ட காலத்தில் ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என்பது தவறற்ற எதிர்பார்க்கையாக அமையும்.


விரிவுரையாளர்
தேசியக் கல்வி நிறுவனம்
கொழும்பு மத்திய நிலையம்.

க.பேர்ணாட் B.Sc. (PFT) Hons. Dip. in. Edu.
விரிவுரையாளர்,
இணைப்பாளர்,
கல்வியியல் கல்லூரி, வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From :

# City Cycle Stores

**M.N.M.Miflal**

**(partner)**

Office;

117, Dam Street,
Colombo 12,
Sri Lanka.
Tel: 434631, 432059,
545101

Residence;

60, Wattalpola Road
Henamulla
Tel : 034 -32234

Telex : CYCLES 22382 ,
Attn: Citycycles

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரும் இன்றைய மாணவ உலகமும் பற்றிய ஒரு பார்வை

புராண இதிகாச, தத்துவார்த்த, வரலாற்று, சமூக பொருளாதார அரசியல் கலாச்சாரப் பண்பாட்டு அடிப்படைகளில் ஆசிரியரும் இன்றைய மாணவ உலகமும் பற்றிய ஒரு பார்வையாக அணுகுவது இக் கட்டுரையாளரின் நோக்கமாகும்.

புராண காலத்தில் வேதாகம கருப்பொருட்களை சிவபெருமான் அகத்தியர் போன்ற முனிவர்களுக்கு உபதேசித்த காலந்தொட்டு குரு-சீடர் முறையில் கல்வி போதிக்கப்பட்டது. சிவபெருமானே, மகன் முருகனிடம் குருபதேசம் பெற்றமை கல்வியை யாரும் எவரிடமும் போதும் கற்றுக்கொள்ள முயலலாம் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

மகா பாரதக் கதையின்படி அரச வம்சத்தைச் சேர்ந்த அருச்சுனனுக்கு வில்வித்தை கற்பித்த துரோணரிடம் வில்வித்தை கற்க விரும்பிய ஏகலைவன், அவ்விருப்பம் நிறைவேறாதபோதிலும் அவரது சிலையை குருவாகவைத்து வில்வித்தை கற்று சிறந்த வில்வீரனானான். ஒருநாள் அவரது சிலையில் சிறு நீர் கழித்து அசிங்கப்படுத்திய அருச்சுனனின் நாயை, அவரிடம் கற்ற நுட்பமான வில்வித்தையால் குற்றுயிராக்கினான். இதையறிந்த துரோணர் ஆச்சரியமடைந்தபோதிலும், அவ்வித்தை தமக்கு மட்டுமே உரித்தாக வேண்டுமென்ற அருச்சுனனின் நிர்ப்பந்தத்தினால் துரோணர் ஏகலைவனிடம் குருதட்சனையாக வலதுகைப் பெருவிரலை கேட்க, ஏகலைவனும் குருபக்தியால், தனது வலது கைப் பெருவிரலை காணிக்கையாக வைத்து குருவின் வேண்டுகோளை நிறைவேற்றினான். குருவின் சதியால் வேதனையடைந்தாலும் ஏகலைவனின் குரு பக்தி மெச்சத்தக்கதே. ஏகலைவன்போன்ற மாணவர்களை இன்று காண்பது நரிக்கொம்பாகிவிட்டது. இது ஆத்ம உணர்வில் குருவாக மதிக்கும் மாணவர் பரம்பரையை உருவாக்க வேண்டியதன் அவசியத்தைப் புலப்படுத்துகிறது.

தத்துவார்த்த ரீதியில் புத்தர், இயேசு, நபிகள் நாயகம், இராமகிருஷ்ணர், விவேகானந்தர் போன்ற இறைதூதர்களாலும் காந்தி, கால்மாக்ஸ், அரிஸ்ரோட்டில் சோக்கிரடீஸ் போன்ற மெய் ஞானிகளாலும் கற்பிக்கப்பட்ட போதனை முறைக்கல்விச் சித்தாந்தங்களை உருவாக்கி வழிகாட்டிகளாக இருந்து இன்றைய ஆசிரியர், மாணவர் பரம்பரைகளை உருவாக்கினர். இவர்களின் தூர நோக்குடைய பார்வைகள் மேலும் பல நூற்றாண்டுகளுக்கு ஊடுருவ தற்கால ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வழிகாட்டல் அவசியமாகிறது.

வரலாற்றுரீதியில் பார்ப்பதாயின் ஆரம்பத்தில் குருபதேசமாகவும் போதனையாகவும் தொடங்கிய கல்வி பின்னர் ஆசிரிய மையக்கல்வியாக மாறியது. ஆசிரியரைத் தேடி மாணவர் சென்று குற்றேவல் செய்து அறிவை பெற்றுக் கொள்ள வழி வகுத்தது. பின்னர் விரிவுரை, கலந்துரையாடல் முறைகளும் கற்பித்தல், கற்றலுக்கு பயன்படுத்தப்பட்டன. கி.பி.1455ல் அச்சுயந்திரம் கடதாசி என்பன கைத்தொழிற்புரட்சியின் விளைவால் கண்டுபிடிக்கப்பட்டபின்பு "பிரம்பில்லாத ஆசானாக" நூல்கள் ஆசிரியருக்குரிய பணியை இலகுபடுத்தியது. தொழிற்பிரிவும் சிறக்குமியல்பும் கல்வித் தொழிற்சாலையில் புகுந்தமை, பல்வேறு கல்வித் தேவைகள், துறைரீதியாகவும், பாடரீதியாகவும் பிரிவுபட்டதால் தற்கால ஆசிரியர்களின் பகிரப்பட்ட பணிமூலம் நிறைவேற்றப்படுகின்றன. இதன்விளைவு இன்றைய ஆசிரியர் தனது உற்பத்திப் பங்களிப்பின் விளைவை மதிப்பீடு செய்ய முடியாதவராகிறார். இன்றைய மாணவனின் உயர்ந்த பெறுபேற்றில் உரிமை பாராட்ட முடியாதவராக இருக்கும் அதே வேளையில் குறைந்த பெறுபேற்றுக்குப் பங்காளியாகிறார்.

சமூகப் பார்வையில் ஆராயின் சமூக பாரம்பரியங்களை புதிய பரம்பைக்கு கடத்தும் சமூக கண்ணாடியான பாடசாலையினூடாக மெய்யுணர்வான அறிவையும், உடல் உள ஆளுமை வளர்ச்சியான திறன்களையும் மனவொழுக்க எழிற்சியான மனப்பாங்கையும் கொண்ட நற்பிரஜையாக மாணவனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கும் கல்வி இலக்குகளை எய்த ஆசிரியர் கருவியாகிறார். மாணவரால் என்றும் விரும்பப்படும் ஆசிரியராவதற்கு ஆசிரியர் தன்கடமைகளை செவ்வனே நிறைவேற்றுபவராகவும், மாணவரது முன்னேற்றத்தை விரும்புபவராகவும் இருக்க வேண்டியது அவசியமாகவுள்ளது. காரணம் மாணவரே ஆசிரியரின் நீதிபதியாகவும், விமர்சகராகவும் பரீட்சகராகவும் மேற்பார்வையாளராகவும் அறிவுக் கண்ணைத்திறப்பவராகவும் இருப்பதேயாகும்.

இதற்காகவே தற்கால ஆசிரியர் நடுமுகாமையாளராகவும், குழுப்பொறுப்பாளராகவும் வழிகாட்டியாகவும் ஆலோசகராகவும் குழு அங்கத்தவராகவும் சமூகத்தின் தலைவராகவும் திட்டமிடுபவராகவும் சிறப்பறிஞராகவும் பொதுசன ஊழியராகவும் உத்தியோகத்தராகவும் வயதுவந்தவராகவும் இணைப்பாளராகவும் மதிப்பீடு செய்பவராகவும் புதுமைபடைக்கும் சமூக மாற்றத்தின் முகவராகவும் பல்வேறு பாத்திரங்களை ஏற்க வேண்டியுள்ளார். மாணவர் மனதில் இடம் பெறுவோர் ஒரு சில ஆசிரியரே. அச்சிலருள் ஒருவராகத் திகழ ஆசிரியர் ஒவ்வொருவரும் முயற்சித்தல் வேண்டியது அவசியமாகிவிட்டது.

இன்று ஆசிரியரே மாணவரின் வகுப்பறைக்குத் தேடிச் சென்று கற்பிக்கும் மாணவமையக் கல்வியாக மாறியுள்ளதால் ஆசிரியர் வருகைக்கு எழுந்துநின்று மதிப்பளிக்கும் மனப்பாங்கு அருகிவரும் போதும், சிறப்பான கற்பித்தலால் அறிவு தெளிந்து ஈற்றில் எழுந்து நின்று நன்றிகூறும் மாணவ சமுதாயமும் உருவாகத்தான் செய்கிறது. காட்சி வானொலியில் பெற்றோரையும் கற்றோரையும் வணங்கும் காட்சியைக் காணும் பாலகரும் நிஜ வாழ்க்கையில் கைகூப்பி காலில் வீழ்ந்து வணங்கும் மனப்பாங்கு கட்டியெழுப்பப்படுவது இன்றும் என்றும் நன்மாணாக்கர் பரம்பரையைத் தோற்றுவிக்க வித்திட்டிருப்பது மகிழ்ச்சிக்கும், வரவேற்புக்கும் உரியதாகும்.

பொருளாதாரரீதியில் ஆசிரிய உலகின் பொருளாதார நிலைய உயர்த்திய நாடுகள் உயர்ந்த கல்வித்தரத்தையும் பொருளாதார உறுதி நிலையையும் கண்டுணர்ந்துள்ளன. இதை உணராத நாடுகள் எல்லா வளர்ச்சி, அபிவிருத்தியிலும் பின்னிற்பதை நாம் காணலாம். ஆசிரிய பதவி, சம்பள உயர்வுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து முட்டுக்கட்டை போடும் நன்றிகெட்ட வைத்திய மாணவ உலகம் தனது குருவம்சத்திற்கு இழைத்த தீங்கிற்குத் தண்டனையாக, இன்று நோயை இனங்காணமுடியாத இயலாத்தனத்திற்கு தாம் கண்துஞ்சாது பசி நோக்காது திரட்டிய செல்வத்தை காணிக்கையாக இழப்பீட்டைச் செலுத்திவரும் வேளையில் மறு கையால் தான் வழங்கிய மருந்துத்துண்டை, மறு தடவையும் வரும் தன் வாடிக்கை நோயாளியிடமிருந்து பறித்தெடுக்கிறது. இன்றைய ஆசிரிய உலகமும் தன் பொருளாதார நிலையை உயர்த்த மனச்சாட்சியுடன் செயல்படுவதே பொருத்தமானது.

அரசியல் ரீதியில் ஆராயின், மூதறிஞர் ராஜாஜியின் கூற்றின்படி "மாணவர்கள் விதை நெல்லுக்கு ஒப்பானவர்கள்" ஆகவே மாணவரை அரசியலில் ஈடுபடுத்துவது "விதை நெல்லை உணவாக்குவதற்கு ஒப்பானதாகும்" என்றார். இன்றைய ஆசிரியர் மாணவர் உலகு, ஆட்சியாளர் அதிகாரிகள் என்போரினால் பகடைக்காய்களாக்கப்படுகிறது. "வரையறுக்கப்பட்ட கல்வி வளங்களை, வரையறுக்கப்படாத கல்வித் தேவைக்குத் திட்டமிட்ட அடிப்படையில் ஒதுக்கீடு செய்து உத்தமபயனை எய்துவதற்கு வழி கோலுவதே அரசியல் ஆட்சியாளர் அதிகாரிகளின் பகுதியான சமூகப்பணியாகும்" என்று கூறிக்கொண்டு சொல்லுக்கும் செயலுக்கும் உறவுமில்லாது, வருடாந்தக் கலண்டராக மதிக்கும், சமூக தேவைகளை நிறைவு செய்யமுடியாத, காலம் கடந்த, நடைமுறைக்கு சாத்தியமற்ற கல்வித்திட்டங்களை ஆசிரியர், மாணவ உலகு மீது திணிப்பதும் பாடசாலைகளை வெறும் சான்றிதழ்களை மட்டும் வழங்கும் வெறும் கட்டிடங்களாக கருதத்தூண்டுகின்றது.

பத்திரிகைகளில் கோரப்படும் வேலை வாய்ப்புக்களுக்குரிய வெற்றிடங்களுக்கு பொருத்தமில்லாத கல்வித்தகைமைகளை உருவாக்கும் வீண் விரையங்கள் தொடர்வதால் கல்விக்கும் தொழிலுக்குமுரிய இடைவெளி மேலும் விரிசலடைகிறது. வாழ்க்கைக்கு உதவும் கல்வித்திட்டங்களை உருவாக்கி, ஆசிரியரது பணியை அர்த்தமுள்ளதாகவும், மாணவரது விருப்பு வெறுப்பு, திறன் என்பவற்றுக்கு முன்னுரிமையளித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன வளர்ச்சிப்போக்குக்கு உதவுமாறு செயல்முறைப்படுத்துவது கற்றறிந்த அரசியலாளர், அதிகாரிகள் ஆகியோரின் அறிவுக்குரிய செயலாகும். பட்டப்பின்படிப்பை பயிலாத பட்டதாரி ஆசிரியர்களும், பயிற்றப்படாத ஆசிரியரும் "அங்கீகாரம் பெறாத வாகனச் செலுத்துனர்களுக்கு ஒப்பானவர்கள்" என்பார் கல்வியியலாளர். இத்தகையோருக்கு ஆரம்பத்திலேயே உளவியல், முகாமைத்துவ கல்விகளை ஊட்டி, ஆசிரியப்பணியை கருத்துடையதாக்கி, கல்விப் பாதையில் ஏற்படும் விபத்திலிருந்து மாணவர்களைப் பாதுகாக்கவேண்டும்.

கலாச்சார பண்பாட்டு பார்வையில் அணுகின் வாழ்வுடன் இணைந்த யாவற்றிற்கும், உண்ணவும், உடுக்கவும் உறங்கவும் பேசவும் சிரிக்கவும் மேற்கத்தையவர்களை பின்பற்றும் நாம் ஏனோ செயல்முறையில் மட்டும் அவர்களைப் பின்பற்றுவதில்லை. இதனைத்தவிர்த்து ஆசிரியர்களை ஆத்ம உணர்வுடன் நேசிக்கும் மாணவ பரம்பரையைப் பட்டைதீட்டிய வைரங்களாக உருவாக்க ஆசிரியர் தமது அழியாக் கல்விச் செல்வத்தை மாணவருக்கு பகிர்ந்தளித்து ஏழேழு பிறவிக்கும் புண்ணியம் தேடிடல் வேண்டும். "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்க்கத் தன்பிள்ளை தானே வளரும்", "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்ற முது மொழிகளை வேதமந்திரமாக கொள்ளுதல் வேண்டும்.

இன்றைய மாணவ உலகம் பரீட்சைக்களம் புகுமுன்னர் ஆசிரியருக்கு வெற்றிலை வைத்து கைகூப்பி காலடியில் வீழ்ந்து வணங்கி ஆசிபெற காத்திருக்கும் ஆசிரியப் பணியின் பெருமையை நினைக்கும் போது மெய்சிலிர்த்து, சிரம் குளிர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருக்கெடுக்கிறது. இந்த ஆத்ம திருப்தியுடன் புனித பணிக்காக உரிய நேரத்திற்கு வகுப்பறையில் காலடி வைப்போமாக.

"அறிவு சாகரத்தில் ஆசிரியர் கலங்கரை விளக்கு"

**A. Shanmugalingam,**
Tutorial Staff of RoyalCollege,
Colombo 07.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Best Compliments**

Own your flat at Colombo
Flats under construction

Progressive Builder's Commitment

To give you the best for
your hand earned money

"We Build Your Future"

**Harbour View Apartments,**
99, 16th Lane, College Street, Colombo 13.
3 and 2 Beddroom Flats measuring 700 to 1275 Sq.ft.
Completion December, 1994.

**Skylark Apartments,**
19, Fredrica Road, Colombo 06.
3 and 2 Beddroom Flats measuring 700 to 1225 Sq.ft.
Completion December, 1994.

**VTV Court, Jasmine Apartments,**
426/8, K Cyril C Perera Mawatha, Colombo 13.
2 Bedroom Flats measuring 492 to 910 Sq.ft.
Completion December, 1995.

**PROGRESSIVE BILDERS AND RESORTS (PRIVATE) LIMITED**
104/11, Grandpass Road, P.O. Box 1103, Colombo 14.
Call Raja / Gowry on 423268 / 325674/ 334748
Tlx : 21275 ESWARAN CE Fax: 0094-1-433879

**PROMOTERS ESWARAN BROTHERS**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியப் பணி

இன்று கல்வி அபிவிருத்தியும், சமூக அபிவிருத்தியும் ஒன்றோடு ஒன்று நெருங்கிய தொடர்புடையவையாக ஒன்றிலிருந்து ஒன்றை வேறுபடுத்த முடியாதனவாக இருந்து வருவது அனைவரும் அறிந்ததே. கல்வி அபிவிருத்தி தொடர்பாக ஏற்பட்டுவரும் பாட ஏற்பாட்டு மாற்றங்கள் யாவும் சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்வதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. இந்நிலைமை அண்மைக் காலத்தில் மிகவும் வலுப்பெற்று வந்துள்ளதைக் காணமுடிகின்றது. இத்தகைய புதிய மாற்றங்களைப் பொருத்தமான முறையிலும் சமுதாயத்திற்குப் பயன் தரக்கூடிய முறையிலும் நிறைவு செய்ய வேண்டிய பாரிய பணி ஆசிரியரைச் சார்ந்ததே.

கல்வியின்மூலம் அனைத்தையும் நிறைவு செய்ய முடியும் என்ற சமூக எதிர்பார்ப்பானது, கல்வியின்முக்கியத்துவத்தையும், அதனோடு ஒன்றிணைந்த பணிகளது வினையாற்றலையும் உள்ளடக்கிய ஒன்றாக உள்ளதால் சமூக எதிர்பார்ப்பில் ஆசிரிய பணி மிகவும் முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக உள்ளது. இப் பணியானது சமுதாயத்தில் தொன்று தொட்டு, மிகவும் போற்றப்படும் பணியாகவே நோக்கப்படுகின்றது. கல்வியை, கற்றல் அனுபவங்களை வழங்குவதில் குடும்பத்திற்கு அடுத்தபடியாக ஆசிரியர்களே சமூக முக்கியத்துவம் பெறுகின்றனர். பாடசாலையை உயிரோட்டமுள்ளதாக மாற்றும் அணியினர் தான் இந்த ஆசிரியர்கள். ஆயினும் அனைத்துலக மட்டத்தில் ஆசிரியரின் பணியை ஆசிரியரின் நிலையுடன் ஒப்பிட்டு அலசும் பொழுது எழுப்பப்படும் குற்றச்சாட்டுகளுக்கும், முன்வைக்கப்படுகின்ற விமர்சனங்களுக்கும் அப்பால் சமூகக் கண்ணோட்டமானது, ஆசிரியப் பணி புணரமைக்கப்பட வேண்டியதொன்றெனக் கூறுகின்றதே தவிர, பணியின் தேவை முற்றாக மறுக்கப்படவோ மறைக்கப்படவோ இல்லை.

"அனைவருக்கும் கல்வி" என்ற உலக ரீதியான வளர்ச்சியைக் கல்வியினூடாக மேம்படுத்த இரண்டு தீர்மானங்கள் முக்கியமானதாக வலியுறுத்தப்பட்டுள்ளன.

1. ஆசிரியர்கள் தான் பிள்ளைகளின்முக்கியமான கல்வி ஆலோசகர்கள்.
2. எந்தவொரு கல்வித்திட்டமும் வெற்றியடைய ஆசிரியப் பணி இன்றியமையாததாகும்.

இத்தீர்மானங்கள் இரண்டும் கல்வியும், ஆசிரியப்பணியும் பிரிக்க முடியாதவை என்பதை வலியுறுத்துகின்றது. எனவே சமூகம் ஆசிரியப்பணியின் தேவை பற்றி என்றுமே உணர்வுப் பூர்வமாகச் சிந்திக்கின்றது என்பதில் ஐயமில்லை.

மறுபுறத்தில் அரசியல் அல்லது பொருளாதார ரீதியாகத் தீர்க்க முடியாத பிரச்சினைகளுக்குக் கூட கல்வியின் மூலம் தீர்வினை எதிர்பார்க்கின்ற சமூகம், பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காத போது ஆசிரியர்களைக் குறைகூறத் தொடங்கிவிடுகின்றது என்பதும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றே. ஆகவே சமூகம், தனது பிரச்சினைகளுக்குத் தீர்வினைப் பெற்றுத்தரவேண்டிய பாரிய பொறுப்பினை ஆசிரியர்களிடமே ஒப்படைத்திருக்கின்றது. இவ்வாறான சமூக எதிர்பார்ப்பின்அடிப்படையில் ஆசிரியப்பணி மிகவும் கடினமானதொன்றாகவே உள்ளது.

இங்கு சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வாகப் பிள்ளைகளைக் கற்றவர்களாக மாற்ற வேண்டிய பாரிய பணி ஆசிரியப் பணியாக உள்ளது. கற்பித்தல் நடவடிக்கைகளில், கல்விகற்பதன் அவசியத்தைப் பிள்ளைகள் உணரச் செய்தல் என்பது மிகவும் அடிப்படையான ஒன்றாக உள்ளது. இதனூடாகவே சகல பிரச்சினைகளுக்குமான தீர்வினை அடைதல் அல்லது தீர்வை அடைவதற்கான வழியைக் காட்டுதல் அல்லது தீர்வை அடைய முயலுதல் என்பது கைகூடும் நடைமுறையாகவே இருக்கும். பிள்ளைகள் கற்பதற்கான காரணத்தைக் கண்டறிய உதவும் ஆசிரியர்கள், அறிவில் மேம்பட்டவர்களாகவும், கல்வி தொழில்நுட்பத்தைச்சிறந்த முறையில் பயன்படுத்துபவர்களாகவும்இருக்க வேண்டுமென சமூகம் எதிர்பார்க்கின்றது. அத்துடன் ஆசிரியர்கள் அறிவுக் களஞ்சியமாகவும், மாணவருக்கு முன்மாதிரியான நடத்தைக் கோலங்களை உடையவர்களாகவும் இருக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பையும் சமூகம் இயல்பாகவே கொண்டுள்ளது.

சமூக எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற ஆசிரியப்பணி முக்கிய இரு தகைமைகளை வேண்டி நிற்கின்றது.

1. கற்பிக்கும் துறையில் ஆசிரியரின் சிறப்புத் தேர்ச்சி.
2. கற்றல் – கற்பித்தல் செயற்பாட்டில் பங்கு கொள்ளும் ஆசிரியர் தங்கள் பணியில் முழு விருப்பினைக் கொண்டிருத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று ஆசிரிய நியமனங்கள் மேற்கூறிய இரு தகைமைகளையும் கவனத்தில் கொள்ளாமலேயே மேற்கொள்ளப்பட்டு வருவது வருந்தத்தக்க ஒன்றே. மாணவர் முன்னேற்றமின்மை, ஆசிரியர் பற்றாக்குறை என்பன தொடர்ச்சியாகக் காணப்படுவதற்கு இதுவே காரணமாகவும் அமைந்து விடுகின்றது. அத்துடன் ஆசிரியத் தொழிலானது ஒரு முக்கியமான பணியென்ற நிலைமாறி சாதாரண அரச ஊழியம் போல் அமைந்து விடுகின்றது. இது சமுக எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற முயலாத ஆசிரிய ஆளணியினரைத் தோற்றுவிக்கின்றது.

சமுக எதிர்பார்ப்பில் ஆசிரியப்பணி தொடர்ந்து சிறப்புடத்தைப் பெறுவதற்கு, ஆசிரியர்கள் தங்களது அனுபவங்களை அடிக்கடி புனரமைத்தல் அவசியம். கற்றல் என்பது மாணவர்களுக்கு அர்த்தப்புஷ்டியுள்ளதாக இருக்க வேண்டுமானால் முதலில் ஆசிரியர்களுக்கு அதன் அர்த்தம் புரிந்திருக்க வேண்டும். ஆசிரியர்கள் தங்களை நவீனமயப்படுத்தல் அவசியமாகும். ஆசிரியப் பணியை மேற்கொள்ளும் ஒவ்வொருவரும் மாணவரை நற்பிரசைகளாக்குவதில் அக்கறையும், அர்ப்பணிப்பும் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். அத்துடன் முன்மாதிரியான நடத்தைக் கோலங்களை உருவாக்கிக் கொள்ளலும் இப்பணிபற்றிய சமுக எதிர்பார்ப்பை நிதர்சனமாக்கும்.

"ஓர் ஆசிரியரின் உயர் தகைமையானது கிரமமான பணிகளை ஒழிங்காகச் செய்வதில்மட்டும் தங்கியிருக்கவில்லை. மாறாகத்தமது உள, ஒழுக்க, ஆளுமையினாலும், முன்மாதிரிகையான நடத்தைகளினாலும் தமது மாணவர்களை வழிகாட்டி ஊக்குவித்தலிலும் தங்கியுள்ளது" என்ற பேராசிரியர் எலியட் அவர்களது கூற்றினை சிரமேற்கொண்டு ஆசிரியப் பணியை ஏற்றுக்கொள்ளல் என்பதன் ஊடாகவே உலக மேம்பாட்டிற்கான கல்வியை மாணவர்களுக்கு அளிக்க முடியும்.

சமுக எதிர்பார்ப்பில் ஆசிரியப் பணியானது தொடர்ந்தும் ஒரு சிறப்பிடத்தைப் பெறுவதற்கு ஆசிரியப்பணி தொடர்பான சமுகத்தின் நிலைப்பாடானது உறுதியடைய, அறிவுப் பாரம்பரியத்திற்கு உயிரூட்டமும், பொருளூட்டமும் அளித்து, மாணவர்கள் அறிவினை சேகரிப்பதற்கு மட்டுமன்றி அந்த அறிவினைப் படைப்பாற்றலுடன் தன்மயமாக்கிக் கொள்வதற்கும் ஆசிரியர்கள் உறுதுணை புரிய வேண்டும்.

**Miss. A. M. M. Rosabell**
918686.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from :*

# MOD STUDY CENTRE

S.R.S. BUILDING,
348, Galle Road,
Wellawatte,
Colombo 06.
Tel: 591000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு புதிர் விடுவிக்கப்படுகின்றது

அலாரம் தொடர்ந்து அடித்துக் கொண்டே இருந்தது. கமலாவின் மனதில் இனந்தெரியாத குழப்பம். "எனது 5 வருட ஆசிரிய சேவையில் சுமதி எனக்கு ஒரு சவாலாகவே உள்ளாள்" என எண்ணியபடியே கட்டிலைவிட்டெழுந்தாள். காலைப் பொழுதின் இனிமையான தென்றலும் அன்றைய வேலையின் சுமையும் சேர்ந்து கமலாவைப் பம்பரமாக சுழல வைத்தன.

அவசர அவசரமாக சமைத்தபடியே தனது கணவனையும் பிள்ளைகளையும் எழுப்பினாள். அந்த அவசரத்திலேயே சமையலை முடித்துக்கொண்டு குளியலறைக்குள் ஓடினாள். குளித்துக்கொண்டே அன்று கற்பித்து முடிக்க வேண்டிய பாடங்கள், கொடுக்க வேண்டிய வினாக்கள், திருத்த வேண்டிய பயிற்சிகள் என்பவற்றை மனக்கண்முன் நிறுத்திக் கொண்டாள். சாவகசமாகவே குளித்து முடித்து உடையணிந்து பிள்ளைகளையும் தயார் படுத்தி பாடசாலைக்கு கிளம்பினாள்.

தனது வகுப்பாகிய 5ம் ஆண்டிற்குள் ஆர்வமாக நுழைகின்றாள்.
"குட் மோர்னிங் ரீச்சர்"
"குட் மோர்னிங் சில்ரன்"

எங்கே மிகுதிப்பிள்ளைகள் என்ற நோக்கில் பார்த்தபோது ஆதவன் எழுந்து, "ரீச்சர் எல்லோரும் விளையாடப் போயுள்ளார்கள். கூட்டி வரட்டுமா" என்று கேட்டான். "ஆம் அசம்பிளிக்கு மணியடிக்கப்போகுதல்லவா, ஆயத்தமாக வேண்டும். கூட்டி வாரும்" என்றாள் கனிவுடன்.

விர்ரென ஓடினான் ஆதவன். வகுப்பறைச் சுத்தத்தை கண்காணித்தபடியே அடுத்த வகுப்பறையிலிருக்கும் மகேஸ்வரி ரீச்சருடன் அளவளாவச் சென்றாள் கமலா. வராந்தாவைப் பார்த்த கமலா திகைத்தாள். வானத்தையே வெறித்துப் பார்த்தபடி சோகமே உருவாக சுமதி நின்றிருந்தாள். கமலா ரீச்சர் வந்ததையோ தன்னைப் பார்ப்பதையோ அறியாமல் வானத்தையே பார்த்தபடி நின்றாள் சுமதி. கமலா அருகிற் சென்று "என்ன சுமதி அப்படி என்ன பார்க்கிறீர்" எனக் கேட்டபோது "ஒன்றுமில்லை ரீச்சர்" என்று கூறியபடி அப்பால் சென்றுவிட்டாள்.

நேரசூசிப்படி வகுப்பு வகுப்பாக பாடங்களை கவனமாக நடத்திக் கொண்டிருந்தாள் கமலா. 4ம் பாடவேளை தனது வகுப்பாகிய 5ம் ஆண்டிற்கு தமிழ் பாடம் கற்பிப்பதற்காக நுழைகிறாள் கமலா. பாலர் வகுப்பிலிருந்து இந்த வகுப்பை தொடர்ந்து கற்பித்து வருவதினால் இக் குழந்தைகளிலே தனது குழந்தைகள் போன்றதொரு பாச உணர்வுடனேயே இவ்வகுப்பிற்கு பாடம் கற்பிப்பது கமலாவின்வழக்கம். பிள்ளைகளும் கள்ளங்கபடில்லாமல் தமது வீட்டுப் புதினங்கள் எல்லாம் ரீச்சரிடம் கூறுவார்கள்.

"ரீச்சர் நான் புதிய சப்பாத்து போட்டுக் கொண்டு வந்திருக்கிறேன்".

"ரீச்சர் எனது அப்பா எனக்கு ஒரு பென்சில் பொக்ஸ் பேர்த்டேக்கு வாங்கித் தந்தவர்".

"ரீச்சர் மாலாவுக்கு ஒரு தம்பி பிறந்திருக்கு".

இவ்வாறு பல மாணவர்கள் தமது செய்திகளையெல்லாம்தமது தாய்க்கு அடுத்ததாக கமலா ரீச்சரிடம் கூறுவார்கள். கமலாவும் சிரித்துக் கொண்டே கேட்டுக் கொண்டிருப்பாள். பாடத்தையும் கவனமாகக் கற்பிப்பாள். அன்று பாடங்களைக் கற்பித்து முடித்துவிட்டு பயிற்சிகளை கரும்பலகையில் எழுதிவிட்டு மாணவர்களின் செயற்பாட்டை கவனித்த வண்ணம் இருந்தாள்.

அவளது வகுப்பில் பாலர் வகுப்பிலிருந்து எப்பொழுதும் சுமதியே முதலாம் பிள்ளையாக வருவாள். படிப்பில் படுசுட்டி. கொடுக்கின்ற வேலைகளை முடித்துவிட்டு ஏதாவது வரைந்து கொண்டே இருப்பாள். 4ம் ஆண்டு இறுதித்தவணைப் பரீட்சையின் போது 2ம் பிள்ளையாக வந்தாள். 5ம் ஆண்டு 1ம் தவணைப் பரீட்சையில் 4ம் பிள்ளையாக வந்துவிட்டாள். எல்லாம் கவலையீனப் பிழைகள் தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டிருந்தாள். ஏனைய பாட ஆசிரியர்களும் சுமதி சரியான கவலையீனப் பிழைகள் விட்டுள்ளா எனக் கூறினர். சில ஆசிரியர்கள் தன்னம்பிக்கை கூடியதனால் தான் இவ்வாறு கவலையீனப்பிழைகள் ஏற்படுகினறன எனக் கூறினர். வகுப்பாசிரியர் என்ற முறையில் சுமதியிடம் "ஏன் படிப்பில் இப்படிக் குறைந்து விட்டீர்" எனக் கேட்டால் உடன் அவளது முகம் வாடிப்போய்விடும். அழகான குழந்தையின்மனத்தை புண்படுத்த கமலாவிற்கு விருப்பமில்லை. ஆனால் அநியாயமாக இப்பிள்ளை படிப்பில் பின்தங்கி இருக்கின்றதே என்று கவலையாகவும் இருந்தது.

அன்று விளையாட்டுப் பாடவேளையின்போது மாணவர்கள் உற்சாகமாக விளையாடிக் கொண்டிருந்தனர். சுமதி மட்டும் வகுப்பறையில் இருந்தாள். கமலா பயிற்சிப்புத்தகம்திருத்துவது போல் பாவனைசெய்தவாறே வகுப்பினுள் நுழைந்து திருத்தினாள். சிறிது நேரத்தின் பின் "ஏன் சுமதி விளையாடப் போகவில்லையா ?" என்று கேட்டாள். "இல்லை மிஸ்" என்று கூறிவிட்டு தன் வேலையைக் கவனித்தாள். சிறிது நேரத்தின் பின் "என்ன நல்ல அழகான பென்சில் வைத்திருக்கிறீர். யார் தந்தது?" எனக் கேட்டாள். சுமதி வெட்கப்பட்டுக் கொண்டே வந்தாள். "மிஸ், இது எங்கட மாமா சவுதியால கொண்டு வந்து தந்தார்" எனக் கூறினாள்.

"உங்களுடைய வீட்டில் எத்தனை பேர் சுமதி?"

"நான், அம்மா, அப்பா, தங்கச்சி நாலு பேர் மிஸ்"

"உங்களுக்கு யாரில் கூட விருப்பம்?"

"அம்மாவில தான் மிஸ் எனக்கு விருப்பம். அம்மா பாவம் மிஸ். அம்மாவை அப்பா ஒவ்வொரு நாளும் அடிப்பார் மிஸ். அம்மாவை அப்பா அடிக்கக்கூடாது என்று நானும் தங்கச்சியும் சாமியிடம் கேட்டுக்கொண்டேயிருப்பம் மிஸ். எங்களுக்கு அப்பாவில விருப்பமேயில்லை. அப்பா கூடாது. அப்பா சாகவேணும்" எனக் கூறினாள் சுமதி. இவ்வளவையும் கேட்ட கமலாவுக்கு ஒரே திகில்.

"அப்படியில்லை சுமதி, நீங்கள் அப்பாவை அப்படிச் சொல்லக் கூடாது" என சமாதானம் கூறி அனுப்பினாள் கமலா.

இவ்விடயத்தை இப்படியே விடாது கமலா மிகவும் நம்பிக்கைக்குரிய 2 ஆசிரியர்களிடம் கூறினாள். பின்னர் அயல் வீட்டுப்பிள்ளைகளிடம் விசாரித்த போதும் சுமதி கூறிய யாவும் உண்மை என தெரியவந்தது. இதன் பின்னர் சுமதியின் பெற்றோரை வயது முதிர்ந்த அனுபவமுள்ள ஆசிரியர், அதிபர் அழைத்து சுமதியின் மனநிலையை விளக்கிக் கூறினர். "நீங்கள் இவ்வாறு நடப்பதால் பிள்ளையின் கல்வி, ஆளுமை, சீர்குலைந்து உளத்தாக்கமடைந்த குழந்தையாகக் காணப்படுகின்றது" எனக் கூறினர்.

தமது உட்பூசல்கள் பிள்ளையின் வாழ்வில் பெரும் தாக்கத்தை உண்டுபண்ணும் என்பதை உணர்ந்த பெற்றோர் திருந்தி பிள்ளைகளுக்காக வாழ முற்பட்டனர். இப்போது சுமதி புதிய உற்சாகத்துடனும் உத்வேகத்துடனும் பாடசாலைக்கு வருகிறாள். அவளது முகம் தற்போது அன்றலர்ந்த தாமரை போல் பொலிவுடன் காட்சியளிக்கின்றது.

**Miss. Y.Alalasuntharam**
C/ Nugegoda Tamil M.V.
Nugegoda.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FUW

# FATIMA UNIQUE WELDERS

Grills Gates, Square Cases, Iron Doors, Amano Sheet Gates,
Collapsible Gates, Raling Gates and Trucks.
All kinds of Welding Works Undertaken.

Contact :

**J. Balaleanard**
**No. 6, Bothirukkarama Mawatha,**
**Wellawatha, Colombo 06.**

*நல்வாழ்த்துக்கள்*

தலைநகரில் தரமான சைவ உணவகம் தனித்துவமான உபசரிப்பு.
உங்கள் இல்லங்களில் ஏற்படும் வைபவங்களுக்கு
எமது உணவு வண்டியை அழைத்து மகிழுங்கள்

# "சுல்வரா லொட்ஜ்"
# பிராமணாள் ஹோட்டல்

169, செட்டியார் வீதி,
கொழும்பு - 11.
தொலைபேசி : 330356

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய சமுதாயத்தில் முஸ்லிம் பெண்ணின் கல்வியின் அவசியம்

இஸ்லாம் மதம், இஸ்லாமியப் பெண்ணை முன்னொருபோதும் உலகம் கண்டிராத புதிய சமூக அமைப்பின் உயிரோட்டமாகவே, இற்றைக்கு ஆயிரத்தி நானூறு வருடங்களின் முன்பே உருவாக்கியது. உயர்வு, மேன்மை, கண்ணியம் என்ற உயிரோட்டத்தில் பெண்ணையும் இணைத்த இஸ்லாம், சமுதாயத்தின் கண்ணாக விளங்கும் பெண்ணிற்கு கல்வி தேவை என்பதையும் திட்டவட்டமாக, திருத்தமாக எடுத்தியம்பியது. நல்லவற்றைச் செய்வதற்கும், தீயவற்றைத்தடுப்பதற்கும் பெண்ணுக்கு உரிமையளித்த இஸ்லாம், அவள் கருத்துணர்வுடன் சமூகத்தில் பணியாற்ற வேண்டியதன்அவசியத்தையும் எடுத்துக்காட்டியது. சமூகத்தில் முஸ்லிம் பெண்ணுக்குரிய சில உரிமைகளையும் கடமைகளையும் நிறைவேற்ற கல்வி இன்றியமையாதது. இதனால் பெண்களும் கற்பது அவசியம் என்பதை இஸ்லாம் அதன் ஆரம்பத்திலேயே உணர்த்திவிட்டது.

"இஸ்லாமியப் பெண்ணின் கல்வி" எனும் போது ஒரு முஸ்லிம் பெண்ணின் கல்வியானது இஸ்லாமியச்சட்டவரையறைக்கு உட்பட்டவையாகவும், அல் குர்ஆனுக்கும் அல் ஹதீஸுக்கும் சிறிதும் மாற்றமில்லாததாகவும் இருத்தல் வேண்டும் என்பது மிகமிக முக்கியமானதாகும். எவ்வளவு தான்இஸ்லாம் பெண்ணுக்கு அந்தஸ்தினையும், அறிவு தேடும் உரிமையையும்தந்துவிட்டாலும், இஸ்லாமிய சரிஅத் சட்டங்களுக்கு அமையவே தம் கல்வியையும், தம் வாழ்வையும் அமைக்க வேண்டும் என்பதை ஒவ்வொரு பெண்ணும் உணர்ந்தே செயற்பட வேண்டும். அத்துடன் முஸ்லிம் பெண்ணின் கல்வி எனும் போது, இது இன்றைய நவ உலகத்தில் தான் தோன்றியது என்றும் நாம் எண்ணி விடக்கூடாது. ஏனெனில் அண்ணல் நபி (ஸல்) அவர்களின்அருமை மனைவியான ஆயிசா நாயகி, ஹப்சா நாயகி போன்றோரும் கல்வி ஞானங்களில் சிறந்து விளங்கினார்கள். அதே போன்று அண்ணல் (ஸல்) அவர்களின் அருமைப்புதல்வி பாத்திமா நாயகி போன்றோரும் சிறந்த விவேகம் உடையோராக இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதுமட்டுமல்ல? அன்றைய முஸ்லிம் பெண்கள் கற்கும் வாய்பை நபி (ஸல்) அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்தார்கள் என்பதற்கு பிரபல ஹதீஸ் கிரந்தமான புஸாரியில் காணப்படும் பின்வரும் ஹதீஸ் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது. "ஒரு பெண் நபியவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே உங்களின்அறிவுரைகளை ஆண்கள் கற்றுச் செல்கின்றார்கள். நாங்களும் அவற்றைக் கற்றுச் செல்ல எமக்காக ஒரு தினத்தை ஒதுக்கக் கூடாதா என்று வினவ, நாயகமும் அவ்வாறே பெண்களுக்கென்று ஒரு தினத்தை ஒதுக்கினார்கள்."

சமுதாயத்தில் பெண்கல்வியின்அவசியம் எனும்போது அதனை நாம் பல்வேறு கோணங்களில் இருந்து நோக்கலாம். குடும்பம் எனும் சமூகக் கோட்டையினுள் பெண் "தாய்" என்றும் "மனைவி" என்றும் கௌரவப்படுத்தப்படுகின்றாள். இந்தப் பாத்திரங்களில் அங்கம் வகிக்கும் அவளுக்கு கல்வி எந்த அளவுக்கு அவசியமானது ? தன் கணவனுக்கு அவள் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை செவ்வனே நிறைவேற்றும் அதே வேளை தன் மழலைச் செல்வங்களை அன்பும், அறிவும், ஒழுக்கமும் நிறைந்த சமூகப்பிரஜையாக மாற்றவும் தாய் அறிவுமிக்கவளாக இருத்தல் அவசியம். ஒரு குடும்பத்தின் பெறுமதிமிக்கச் செல்வமான குழந்தைகளின் கல்வியில் ஒரு தாய் அக்கறை செலுத்துவதற்கு அவள் கற்றவளாக இருத்தல் மிகமிக அவசியம். இன்றைய சமூக அமைப்பை நாம் பார்க்கும் போது இன்றைய ஆண்கள் அதிகமான நேரங்களை பொருளீட்டுவதில் செலவு செய்வதை நோக்குகின்றோம். அவரால் தன் குழந்தையின் வளர்ச்சியிலோ, கல்வியிலோ, அதிக அக்கறை செலுத்துவதற்குரிய சந்தர்ப்பத்தை பெறமுடியாதிருப்பது இன்றைய சமூக அமைப்பில் முக்கியமான ஒன்றாகும். இங்கு ஏனைய சமூகப் பெண்களைப் போல் முஸ்லிம் பெண்ணும் கற்றவளாய் இருந்தால் தன் குடும்பத்தினையும், தன் குழந்தைகளையும் சிறந்த முறையில் பராமரிப்பதற்கு ஏற்றவளாய் தன்னையும் ஆயத்தப்படுத்தலாம் அல்லவா ? எல்லாவற்றிற்கும் மேலாக இஸ்லாம் கூறும் வரையறையில் தன் குடும்பத்தவர்களை நிலைபெறச் செய்வதற்கு பெண் நிச்சயம் கற்றவளாக இருத்தல் வேண்டும்.

அடுத்து இன்றைய சமுதாயத்தில் பொருளியல் பிரச்சினை ஒரு முக்கியமான பிரச்சினையாக உள்ளது. இன்று ஆணும் பெண்ணும் பொருள் தேடினால் மட்டுமே செலவுகளைச் சமாளிக்கலாம் எனும் நிலை சில குடும்பங்களில் காணக்கூடியதாக உள்ளது. இது எம் முஸ்லிம் பெண்களையும் விட்டுவைக்க வில்லை. "முஸ்லிம் பெண் தொழில் செய்யக் கூடாது" என்ற வாதம் சிலரிடம் இருந்த போதிலும், தொழில் செய்ய வேண்டிய கட்டாயத்தில் நம்மவர் சிலர் இருப்பதை நாம் நோக்கலாம். இங்கு அண்ணல் (ஸல்) அவர்களின் அருமை மனைவிமார்களும் பொருளியல் ரீதியில் தம் உழைப்பைச் செலுத்தியுள்ளதை நாம் நோக்கலாம். எனவே இஸ்லாமிய சரிஅத்துக்கு ஆகுமான தொழி பெண்கள் செய்வதில் தவறில்லை. தனக்குப் பொருத்தமான தொழிலைச் செய்து தன் குடும்பச் செலவில் தானும் பங்குவகித்து, குடும்பச் சுமையை குறைக்க அல்லது வறுமையைப் போக்க இங்கு முஸ்லிம் பெண்ணின் கல்வி அவசியம் என்று தெரிகின்றதல்லவா ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மட்டுமல்ல ? இன்றைய இஸ்லாமிய சமூகம், ஒரு பெண்ணின் பெண்மையையும், தனித்துவத்தினையும் காக்கக்கூடிய ஆசிரியத்தொழில், வைத்தியத் தொழில் போன்றவற்றில் தேவையுடையதாக காணப்படுகின்றது. இத்தகைய சேவைகளில் முஸ்லிம் பெண்களின் பங்களிப்பு காணப்படுகின்ற போதிலும் இவை மிகவும் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றது. இத்தகைய சேவைகளின் அருமையும், பெருமையும் முஸ்லிம் பெற்றோரால் உணர்த்தப்பட்டு, இதற்கான பாதையில் தம் பெண்மக்களை வழி நடத்திச் செல்ல அவர்கள் முன்வர வேண்டும். இஸ்லாமியச் சமுகத் தேவையில் இன்று இலங்கையில் மட்டுமல்ல, பல உலக நாடுகளிலும் கூட அகதிகள், அநாதைகள் என்ற பலர் உருவாகி இருப்பதை நாம் காணலாம். இவர்களுக்கு ஒரு வாழ்வை அமைத்துக் கொடுப்பதில், குறிப்பாக இந்நிலைமைக்கு ஆளாகியுள்ள பெண்களுக்கு மறுவாழ்வை அமைத்து ஒரு ஒளிமயமான வாழ்வை ஏற்படுத்திக் கொடுக்க முஸ்லிம் பெண்கள் முன் வர வேண்டும். இதற்கும் நிச்சயமாக அவள் கற்றவளாக இருத்தல் சிறப்புடையதாகும்.

இன்று நம்மிற் சிலர் தமக்குரிய வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கின்றனர். குடும்பத்தின் வறுமை, சீதனம், பெற்றோரின்மை போன்ற காரணங்களால் கட்டாயம் பொருள் தேட வேண்டிய நிலையில் உள்ளனர். சிலர் கல்வியறிவு போதாமையினால் வெளி நாடுகளுக்கு சென்று தொழில் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கும் ஆளாகின்றனர். இங்கும் கல்வியின் அவசியம் நோக்கப்படுகின்றது.

இன்று நாம் இலங்கையைப் பொறுத்தமட்டில் ஒரு கலப்புச் சமுதாய அமைப்பில் வாழ்கின்றோம். இஸ்லாம் கூறியது போல் ஏனைய சமுகத்தவர்களுடனும் மிகவும் ஒற்றுமையுடன் வாழ வேண்டியது எமது கடமை. என்றாலும் பிறமதக் கலாச்சாரங்களால் தாக்கங்கள் ஏற்படாமல் இருக்கவும், அல்குர்ஆன், ஸுன்னா என்பவற்றைத்திறம்பட அறிந்து அதன்படி செயற்படவும் மார்க்கக் கல்வி மிகவும் முக்கியமானதாகும். எனவே ஒரு முஸ்லிம் பெண்ணின் கல்வி எனும் போது அது இம்மை மறுமை இரண்டிற்கும் பயன்படக்கூடிய கல்வியாக அமைய வேண்டும் என்பதில் ஐயமில்லை.

"கல்வி கற்பது முஸ்லிமான ஆண் பெண் இரு பாலார் மீதும் கட்டாயக் கடமை" என்பது நபி (ஸல்) அவர்களின் அமுதவாக்காகும். எனவே பெண் கல்வியின் தேவையை முஸ்லிம் பெற்றோரும் அறிந்து, மார்க்க வரம்புக்கு உட்பட்ட ரீதியில் தம் பெண்களை கல்வியில் மேம்பெறச் செய்ய வேண்டும். "தாயின் மலரடியில் மைந்தனின் சுவர்க்கம்" எனக் கூறிய அண்ணல் (ஸல்) அவர்களின் பரம்பரையில் வந்த நாம், தன்மானத்தையும் சுயகௌரவத்தையும், எல்லாவற்றிற்கும் மேலாக இஸ்லாமியக் கட்டுப்பாடுகளையும் மீறாத வகையில் கல்வியைக் கற்று முன்னேறவேண்டும். இன்றைய சமுகத்திற்குத் தேவைப்படும், சமுகம் எதிர்பார்க்கும் அறிவு நிறைந்த பெண்கள் பலர் நம்மில் உருவாக வேண்டும். அதற்கு அல்லாஹ் அருள் புரிவானாக !

**Mrs. Yasmin Munas,**
Royal College,
Colombo 07.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலை முயற்சியில் பாடசாலைகள்

பாடசாலைகள் சமூகத்தின் ஓர் உபதொகுதியாகும். இது நாம் அமைந்துள்ள சமுதாயத்தில் சிறப்பான முன்மாதிரியான நடத்தைப்பாங்கை விருத்தி செய்யவென நிருமாணிக்கப்பட்ட ஒழுங்கமைப்புடைய சிறு சமூகத்தொகுதியாகும். எனவே நாம் அமைந்துள்ள சமுதாயத்தின் தேவைகளையும், எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றுவதற்காக இத் தாபனம் தனது நடவடிக்கையை திறம்பட ஆக்கிக்கொள்ள அது அங்கம் வகிக்கும் அயற் சமூகத்துடன் இடையறாத தொடர்புகளை வைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. தற்காலத்தில் இதன்மீது ஒப்படைக்கப்பட்ட பாரிய பொறுப்புக்களை தனித்து நின்று பூர்த்தி செய்ய முடியாத வகையில் வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டே காணப்படுகின்றது. எனவே, பல்வேறுபட்ட வளத்தேவைகளுக்கும் சமுதாயத்துடன் நெருங்கிய தொடர்பு அவசியமாகும். ஆனால் இவற்றிற்கு எதிர்மாறாக தற்காலத்தில் பாடசாலைகள் தம் அயற்சமூகத்திடமிருந்து தமது தொடர்புகளை படிப்படியாக பல்வேறுவகைகளிலும் குறைத்துக் கொண்டு செல்வதை கண்கூடாகக் காணமுடிகின்றது. இந்நிலை தொடரும்போது ஒரு பாடசாலை யாருக்காக உருவாக்கப்பட்டதோ அவர்களின் நோக்கங்களும் தேவைகளும் பலகாரணங்களால் நிறைவேற்றப்பட முடியாமல் போகின்றது.

ஒரு சமூகம் பாடசாலைக்கு மாணவர்களை வழங்குகின்ற அதேவேளை பாடசாலையில் இருந்து சமூகத்திற்கு வரும் மாணவர்களையும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும். எனவே அச்சமூகத்தின் பாரம்பரியங்கள், விழுமியங்கள், கலாச்சாரப் பண்பாடுகள் என்பவற்றைப் பேணி மெருகூட்டி சிறந்த அறிவு, திறன் மனப்பான்மையோடு தம்மால் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதமாக மாணவரை பாடசாலை வழங்கவேண்டும் என சமூகம் எதிர்பார்க்கின்றது. ஆனால் பொதுவாக பாடசாலையின் நோக்கங்கள் பாடவிதானத்தை அடிப்படையாகக் கொண்டே அமைகின்றது. எனவே பாடசாலையின் நோக்கங்கள் சமூக நோக்கங்களோடு ஒப்பிடும்போது மட்டுப்படுத்தப்பட்டதாகவோ அல்லது வேறு படுவதாகவோ அமையலாம். இன்று பாடசாலைகளில் அமுல் நடத்தப்படும் கலைத்திட்டங்கள், நிருவாக மட்டத்தில் மேல் நிலை அதிகாரிகளினால் தயாரிக்கப்பட்டு கீழ் மட்டம் நோக்கி திணிக்கப்படுகின்றது. இது ஒரு மரபு வழிவந்த கல்வியாகவும் அமைகின்றது. இதில் கலை, நிருவாகத்துறை போன்றவற்றை அடையக்கூடிய விதமாகவே பெரும்பாலான பாடங்கள் காணப்படுகின்றன. ஆனால் மக்களின் தேவைகளும், எதிர்பார்ப்புகளும் பிரதேசத்துக்கு பிரதேசம் வேறுபடுகின்றது. அதேவேளை பாடவிதானத்தில் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் ஏற்றதுபோல் நெகிழ்ந்து கொடுக்கமுடியாத நிலையே உள்ளது. இதனால் மாணவரது ஆக்கச்சிந்தனைக் காலமாகிய பாடசாலையின் ஆரம்ப இடைநிலைக் காலங்களில்தனது எதிர்காலத்திற்கு தேவையான திறனைப் பெறமுடியாமல் திணிக்கப்பட்ட பொதுக்கலைத் திட்டப்பாடத்தினுள் அவனது சிந்தனைத்திறன் முடக்கப்பட்டுவிடுகிறது. தற்கால சமுதாயத்தின் கைத்தொழில் விஞ்ஞான விருத்திக்கு ஏற்றவகையில் மாணவரது திறனும் சிந்தனாசக்தியும்தூண்டப்படக்கூடிய விதமாக பாடசாலைக் கலைத்திட்டங்கள் அமையாமையால் சமுதாயம் எதிர்பார்க்கும் கைத்தொழில் விஞ்ஞானயுகத்தினுள் பிரவேசிக்க முடியாமல் இருப்பதும் சர்வதேசத் தொழில் வாய்ப்புக்களைப் பெறக்கூடிய நிலையில் கல்வி வாய்ப்புக்கள் அமையாமையும் சமூகத்திலிருந்து பாடசாலைகள் விலகுவதற்கு காரணமாகின்றது.

ஓர் சமூகத்தில் பலதரப்பட்ட பொருளாதார நிலையுள்ளவர்கள் வாழ்கின்றார்கள். இவர்களுள் தாழ்ந்த பொருளாதார நிலையுடைய மாணவர்கள் பாடசாலையில் பல பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றனர். இவர்களது குடும்பக்கஷ்டம் காரணமாக பெற்றோரின் வற்புறுத்தல்களினால் அன்றேல் சுயவிருப்பின் பேரில் இவர்கள் பாடசாலை நாட்களில் சிறு வருமானம் பெறும் நோக்குடன் தொழில் புரியச் செல்கின்றனர். இதனால் பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்லமுடியாத நிலை உருவாகின்றது. மாணவன் பாடசாலைக்கு செல்லாத நாட்களில் கற்பிக்கப்படும் பாடங்களை மீண்டும் கற்கக்கூடிய விதமாக பாடசாலையில் விசேட கலைத்திட்டங்கள் எதுவும் இல்லாத காரணத்தால் அம் மாணவன் இடைவிட்ட காலங்களுக்குரிய கல்வியைத்தொடரமுடியாத நிலை உருவாகி ஈற்றில் பாடசாலையைவிட்டு முற்றாக விலக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியுள்ளது. இவ்வாறான நிலை அண்மைக் காலங்களில் அதிகரித்து வருவதை ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. இந் நிலைக்கு உரிய தீர்வு காணப்படாவிட்டால் சமூகத்தில் இருந்து பாடசாலை விலகவேண்டிய நிலை உருவாகும்.

பாடசாலைகளில் முதன்நிலை முகாமையாளராக, பொருத்தமான பாத்திரமாகிய அதிபரிடமே அதன் கடமையும் நிறைவேற்றுப் பொறுப்பும் ஒப்படைக்கப்படுகின்றது. எனவே ஓர் அதிபர் பாடசாலைக்கும் அதைச் சூழவுள்ள சமூகத்திற்கும் உதவுபவராகவும் வேலைகளை இலகுபடுத்துபவராகவும் செயற்பட்டு பாடசாலை அமைக்கப்பட்ட நோக்கத்தின்மீது மிகுந்த கவனமுடையவராக இருப்பார். ஆனால் தற்காலத்தில் பெரும்பாலான பாடசாலை அதிபர்களை நோக்கும்போது அவர்களிடம் தலைமைத்துவத்திற்குரிய பரினாமங்களை காண்பது அரிதாகவேயுள்ளது. பல அரசாங்கப்பாடசாலைகளில்கூட அதிபர்கள் மாணவரை அனுமதிப்பதற்கே 'அன்பளிப்பு' என்ற பெயரில் பணவசூலில் ஈடுபடுகின்றனர். இதனால் அப்பாடசாலை அமைந்துள்ள சமூகத்திலுள்ள ஏழை மாணவர்கள் பாடசாலை வாயிலினுள் நுழையும் அனுமதியை இழப்பதனை அநேக இடங்களில் காணக்கூடியதாக உள்ளது. இதனால் அம் மாணவனின் எதிர்காலம் கேள்விக்குறியாகின்றது. இதனால் சமூகத்திற்கான பாடசாலை என்ற நிலையில் இருந்து விலகுகின்றது.

பாடசாலைகளில் பிரதான செயற்பங்கினைச் செய்பவர் ஆசிரியர்களே. இவர்கள் மாணவர்க்கு பயனுறுதி வாய்ந்த நிலையில் கற்பிப்பதற்கு, கற்றல் வாய்ப்புகளைச் சிறப்பாக விருத்தி செய்து மாணவரிடம் இடையறாத தொடர்பு கொண்டு அன்பைக் காட்டுபவராக இருக்க வேண்டும். எனவே ஆசிரியரிடம் தொழில்த்திறன் ரீதியாக நல்ல பண்புகள் காணப்பட வேண்டும். இன்று பெரும்பாலான ஆசிரியர்களிடம் சகிப்புத்தன்மை, சுயகட்டுப்பாடு, ஏற்றுக்கொண்டகருமங்களை நிறைவேற்றல், உகந்தமுறையில் சமூகத்தொடர்பைப் பேணல் போன்ற நற்குணங்கள் குறைந்துள்ளமை பெரும் குறைபாடாகும். அத்துடன் நவீன விஞ்ஞான காலத்திற்கு ஏற்றது போல் ஆசிரியர் தங்கள் அறிவை விரிவுபடுத்திக் கொள்வது குறைந்து பரீட்சை ரீதியில் மாணவரை சித்தியடையச் செய்யும் ஓரிரு பாடங்களில் மட்டும் கவனம் செலுத்துகின்றனர். இந்நிலை மாணவர்க்கு குறுகிய அறிவை மட்டும் வளர்த்து அவர்களது திறனையும், மனப்பாங்கையும் ஒதுக்கும் நிலையை உருவாக்குகின்றது. ஆசிரியர் சிலரது சர்வாதிகாரப் போக்கும்அடக்குமுறையும் மாணவரிடையே அச்சத்தை ஏற்படுத்தி அவர்தொடர்பான பாடங்களை வெறுக்கும் நிலையை உருவாக்குகின்றது. இவ்வாறான ஆசிரியர் செயற்பாடுகள் மாணவரை தனியார் ரியூட்டறிகளை நோக்கிச் செல்லவைத்து, ரியூட்டறிகளின் செயற்பாடுகளை ஊக்குவிப்பதாக அமைகின்றது.

இதேவேளை பல பாடசாலைகளில்அதிபர், ஆசிரியரிடையே தனிப்பட்ட பிரச்சனை காரணமாகவோஅன்றேல் பொதுப்பிரச்சனை காரணமாகவோ விரிசல் ஏற்படுகின்றது. இந்நிலை அவர்களிடையே ஒத்துழையாமை போன்ற இன்னோரன்ன பிரச்சனைகளை ஏற்படுத்தி பாடசாலையையும், மாணவரையும் புறக்கணிக்கும் நிலை உருவாகின்றது. இச் செயற்பாடு அங்கு கற்க வந்த மாணவரை கற்றலின்றி பிழையான சமூகமயமாக்கலுக்கு இட்டுச் செல்கின்றது. இவ்வாறான நடத்தைக்கோலங்களால் பாடசாலை தன்னையறியாமலேயே சமூகத்திலிருந்து விலகிச் செல்கின்றது.

பாடசாலைகளில் நடைபெறும் பெரும்பாலான வேலைத்திட்டங்கள் அது அங்கம் வகிக்கும சமூகத்திலுள்ள வளர்ந்தோர், இளைஞர், பாடசாலை மாணவர் போன்ற அனைவரதும் பங்களிப்புடம் மேற்கொள்ளப்படும்போதே பூரணமடைகின்றது. ஆனால் தற்பொழுது இங்கு நடைபெறும் பெரும்பாலான வேலைத்திட்டங்கள் மாணவரை மட்டும் ஈடுபடுத்துவதாகவே காணப்படுகின்றது. பாடசாலை சமூகத்திலிருந்து கட்டாய உதவிபெற வேண்டிய நிலைமை ஏற்படும் போது மட்டுமே தமது நன்மைக்காக சமுதாயத்தை நாடிச் சென்று வெறும் உதவிகளை மட்டும் ஏற்றுக்கொண்டு அறிவுறுத்தல் களையும் ஆலோசனைகளையும் விமர்சனங்களையும் ஏற்றுக்கொள்ளாது புறக்கணிக்கின்றனர். ஓர் பாடசாலை சமூகத்தின் வளங்களைப் பெற்றுப் பயன்படுத்துகின்ற அதே வேளை தங்கள் வளங்களை சமூகத்திற்கு திறந்துவிட பின்நிற்கின்றது. இதனால் அதிபர் ஆசிரியருடனான பெற்றோர் சமூகத் தொடர்புகள் குன்றிவிடுகின்றது. பாடசாலை நிருவாகம் தம் நிருவாக நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக அமுல்நடத்தும் சட்டதிட்டங்களும் பாடசாலை சமூகத்திலிருந்து விலக ஏதுவாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை அபிவிருத்திச் சபைகள் பாடசாலையின் பௌதீக ரீதியான விருத்திக்கு உதவவேண்டும் என எதிர்பார்த்தே உருவாக்கப்பட்டன. இச் சபைகள் சில பாடசாலைகளில்மிக நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தி அங்குள்ள பலவீனங்களை அறிந்து அதிபர், ஆசிரியரினது தொழில் ரீதியான கௌரவத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி தமது கருத்துக்களை மட்டுமே முன்னெடுத்துச் செல்ல முற்படும் நிலை அண்மைக் காலங்களில் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதுபோன்ற காரணங்களால் பாடசாலை நிருவாகமும் சமூகத் தொடர்புகளையும் ஏனைய சங்கங்களின் தொழிற்பாட்டையும் ஒதுக்கிவிடவேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. இதனால் சமூகத்திலிருந்து பாடசாலை ஒதுங்குவது பாடசாலைகளுக்கு பாதகமாக அமையலாம்.

மேலும் பாடசாலைகளில் தற்காலத்தில் இடைவிலகல்கள்அதிகரித்துச் செல்வதனால் வெளியேறும் மாணவர்கள் தொழில் ஏதுமின்றி பிறழ்வான சமூகமயமாக்கலுக்கு உட்படுகின்றனர். பாடசாலையின் இடைநிலை வகுப்புகளில் செயற்திறனுடன் கூடிய தொழில் நுட்பப்பாடங்கள் இன்மையே இதற்குக் காரணமாகும். எனவே, அச் சமூகத்திற்கேற்ற தொழில்முன்நிலைப்பாடங்கள் புகட்டப்படும் பொழுதே,பல்வேறு காரணங்களால் இடைவிலகும் மாணவர்கள் தம் திறனுக்கேற்ப சுய தொழில் வாய்ப்புகளைப் பெறக்கூடியதாக அமையும். இந் நிலையை ஏற்படுத்தக்கூடிய விதமான பாடங்கள் குறைவாகக் காணப்படுகின்றன.

அத்துடன் தற்காலத்தில் பாலியல் குற்றச் செயல்களும் பாலியல்தொடர்பான நோய்களும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இவற்றிற்கு காரணம் பாலியல் தொடர்பான போதிய அறிவின்மையே. இவ் அறிவினை வழங்க வேண்டிய பொறுப்பை மேலை நாடுகளில் பாடசாலைகளே ஏற்று திறம்பட செயல்படுகின்றன. இலங்கையிலும் இவ்வாறான பிரச்சனைகள் அதிகரித்து வருவதனால் அவற்றிற்கான அறிவை வழங்க வேண்டிய பாடசாலைகள் தமது கடமையை செய்யாமை போன்ற காரணங்களும் சமூகத்திலிருந்து பாடசாலை விலக ஏதுவாகின்றது.

எனவே, இன்று பாடசாலைகளின் பங்கும் பணியும் அதிகரித்துள்ள வேளையில் அது சமூகத்துடன் கொண்டுள்ள தொடர்புகள் பல காரணங்களினால் குறைந்து கொண்டு செல்வதனை அவதானிக்க முடிகின்றது. இதனால் சமூகம் எதிர்பார்க்கும் நோக்கங்களையும் தேவைகளையும் நிறைவு செய்யமுடியாமல் பாடசாலைகள் உள்ளன. இந்நிலை மாற இரு பகுதியினரும் புரிந்துணர்வுடன் செயற்படவேண்டும். எனினும் பாடசாலைகள் தாம் எதற்காக தோற்றுவிக்கப்பட்டோம் என்பதை நன்குணர்ந்து சமூகத் தேவைகளுக்கேற்ப நெகிழ்ந்து கொடுத்து தம் கடமைகளை செவ்வனே செய்ய வேண்டியவையாக உள்ளன. இதற்கு எதிர்மாறாக சமூகத்திலிருந்து பாடசாலை விலகிச் செல்லுதல் பாடசாலைகளின் தற்கொலை முயற்சி என்று கூறுதல்மிகையாகாது.

ஆக்கம்: துறை நீ.வெ.அருணாகரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Post Graduate Diploma in Education Student Particulars

| Full Name | Official Address | Private Address |
|---|---|---|
| Shyamala Senathirajah | C/Muslim Ladie's College, Colombo 04. | 33, 2nd Lane, Dehiwella. |
| Mrs. Ambika Nadesan | C/GoodShepherd Govt.T.G's.Vid. Colombo 13. | 49, Madampitiya Road Mutwal, Colombo 15. |
| Mohamed Ibrahim Hisbullah | C/Hameed-Al-Husseinie College Colombo 12. | 188, Layards Broadway, Colombo 14. |
| Miss.Kala Nadarajah | C/Good Shepherd Govt.T.G'sVid. Colombo 13. | 55, Mayfield Road, Colombo 13. |
| Sunthary Kathirgamathamby | CS/RoyalCollege, Colombo 07. | 29, Glen Aber Place, Colombo 04. |
| Sangarapillai Baleswaran | Hameed-Al-Husseini College Colombo 12. | 45,Nelson Place, Colombo 06. |
| Mohameed Rawuther Basheer | A/Ikkirigollawa M.M.V. Wahamalgollawa. | Main Street, Wahamalgollawa. |
| Vasugi Chelliah | C/St. Annes Balika Vid. Hill Street,Colombo 13. | 118/ 57,St. Anthony Mawatha Mutwal, Colombo 15. |
| Mohamed Hussain Mohamed Lafir | GM/Al-Mubarak C.C. Malwana. | old Negombo Road, Wattala 420/1, Ulahituwala, Malwana. |
| Meeralebbe Ismail | Kuli/Madeena M.M.V. Pohamune. | Nettipolageda Road, Kekunagolla. |
| Miss.Terrencia Maureen Ponniah | GM/St.Anthony's College, Wattala. | 34/3F Mowbray Lane, Mutwal, Colombo 15. |
| Mrs. Maria Shanthakumari Niranjankumar | Wesley College, Colombo 09. | 93/13, Modera Street, Colombo 15. |
| Ambalavanar Shanmugalingam | C/Royal College, Colombo 07. | 17/1, Muhandiram Lane, Dehiwala. |
| Thambipillai Tharmakulam | P/Al-Aqsa M.V. Kolpitiya. | Power House Road, Manal Thotam, Kolpitiya. |
| Mohamed Ali Mohamed Faris | KL/Kalutara Muslim M.V. Kalutara. | 32/01, Kaleel Place, Kalutara. |
| Mrs. Rahini Rajakumar | Royal College, Colombo 07. | 107-1/1, W.A.Silva Mw. Colombo 06. |
| Magurooha Shareef Mafrufa | G/Al-Mubarack Central College Malwana. | 402/A, Walgama, Malwana. |
| Ramalingadappan Balakrishnan | P/Udappu Tamil M.V. Udappu. | Ward No.6, P/Udappu |
| MohamedShareef Mohamed Anas. | KL/Al-Humaisara C.C. China Fort, Beruwala. | 309/4, Mangedara, Thulhiriya. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| Thillainathan Ganesharaja | C/Thondar Vidyalayam Captain's Garden, Colombo 10. | 24/15, 59th Lane, Manning Place, Colombo 06. |
| Thambyah Rajaratnam | Hindu College, Colombo 04. | 24/5,59th Lane, Manning Place, Colombo 06. |
| Abdul Hameed Mohamed Sameem | Kuly/Ihalakiniyama M.M.V. Weerapokina. | Ihalakiniyama, Weerapokina. |
| Mrs. Fathima Haneeza Mohamed Hangal | Co/Al-Hijra Vid. Maligakande, Colombo 10. | 144, Dematagoda Road, Maradana. |
| Anthonipillai Jesuratnam | GM/St.Anthony's College, Wattala. | 118/19, Negombo Road, Wattala. |
| Naina Mohamed Abdul Careem | CH/Nazriya M.V. Chilaw. | C/O., S.H.M. Riyaldeen, Sawarana, Chilaw. |
| Cumarasamy Srikandarajah | CH/Vadivambika G.T.V. Munneswaram. | No.5, St. Lourdes Road, Chilaw. |
| Periyathamby Ransiah. | Minu/Galloluwa Muslim M.V. Minuwangoda. | Minu/Galloluwa Muslim.M.V. Minuwangoda. |
| Ganeshananthan Thillainathan | R/Jailani Central College, Balangoda. | R/Jailani Central College, Balangoda. |
| Vellakuddy Arunakaran | Karaitivu G.M.M.V., Ponparappi, Puttalam. | Nerios Dispensary, Bandara nayake pura, Vannatha villu, Puttalam. |
| Gnanamuthu Paul Antony | Principal C/St.Anthony's M.V. Colombo 13. | 6/80, Albion Lane, Colombo 09. |
| Kanapathipillai krishnaveny | Kotahena Govt.Tamil Vid. Colombo 13. | B4, F8,Bloemendhal Flats, Colombo 13. |
| Shanmugathasan Kirupaharan | C/Royal College, Colombo 07. | 12, Pennyquick Road, Colombo 06. |
| Arulnandhy Rajah Ranjit | P/Al-Aqsa M.V. Kalpitiya. | 248/91, Wolfendhal Street, Colombo 13. |
| Suseela Ramiyah | P/Fathima Balika M.V. Puttalam. | No.17, U.C. Quarters, Poles Road, Puttalam. |
| Sivakalai Anandarajah | KL/Jeelan Central College, Panadurai. | 69, Ebert Lane, Ratmalana. |
| Junitha Mohamed Firdousi | C/Al-Ameen Vid. Colombo 03. | 42, Krecda Mawatha, Kalubowila, Dehiwala. |
| Husain Mohamed Kasnafar | GM/BY/Al-Mubarak Cent. Coll. Malwana. | 403, Walgama, Malwana. |
| Mohamed Jainudeen Abdul | P/Kandalkuli G.M.V. Kandalkuli. | 17, Lane No.13, Chetty St. puttalam. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| Miss. Gnaneswary Namasivayam | GM/WAT/Al-Ashraff M.V. Mabola, Wattala. | 47, Thelangapatha Road, Wattala. |
| Agnes Sambasivam | C/Bambalapitiya R.C.T. M.V. Colombo 04. | 18, Janaki Lane, Colombo 04. |
| Chithra Raveendra | Holy Family Convent, Colombo 04. | 21/1, Liyanage Road, Dehiwala. |
| Agnes Anthony | Holy Family Convent, Colombo 04. | 20, 1st Lane, Maradana Rd., Hendala, Wattala. |
| Kousaladevy Langeswaran | C/Vivekananda M.V. New Chetty Street, Colombo 13. | 6/2, Fernando Road, Wellawatte, Colombo 06. |
| Indhumathi Vijendran | Bishop's College, Boyd Place, Colombo 03. | 28, Rohini Road, Colombo 06. |
| Abdul Hameed Muhamed Iyard | R/Jeilani Central College, A.D.N. E.D. Off., Balangoda. | "Ever Shine", 171/1, Main St. Balangoda. |
| Krishnakumari Nadarajah | C/Ramanathan H.L.C. Colombo 04. | 33/1, Mheswari Road, Colombo 06. |
| Rajadurai Varatharajan | St.Anthony's M.Vid. Colombo 13. | 132/ 1, Vivekananda Hill, Colombo 13. |
| Rajanayagam Rajaratnam | St.Antony's M.Vid. Colombo 13. | 55/1, Vivekananda Hill, Colombo 13. |
| Jezima Athamm Lebbe | Asst. Project Officer N.I.E. Maharagama. | 32A,Ebert Lane, Kaldemulla, Moratuwa. |
| Somanathan Vasanthakumar | Al-Humaisara C.C. China Fort, Beruwala. | 'Srivimana', Ganeramb, Beruwala. |
| MohamedAbdul Gafoor Ashraf | KL/Al-Gazzali M.V., Atulugama, Bandaragama. | 'Nsafiya Manzil, School Rd. Ethungaha Kotuwa. |
| Vasantha Vaithilingam | Bishop's College, Boyd Place, Colombo 03. | 82, Mayfield Road, Colombo 13. |
| Sebamany Mahalingam | C/Vivekananda College, Colombo 13. | 93/8, Modera Street, Colombo 15. |
| Thayamany Manikkam | C/Wolfendhal B.M.V. Colombo 13. | C-3/4, Anderson Flats, Colombo 05. |
| Sivagengathevy Mahendram | C/Ramanathan H.L.College, Colombo 04. | 46, Layards Road, Colombo 05. |
| Mrs.ShreenRojle Santhusir | P/Zahira Central College, Puttalam. | 24/9, Nedumkulam, Approch Road, Puttalam. |
| Mr. Miskin Sahib Jahubar | GM/WAT/Al-Ashraf M.V. Mabola, Wattala. | 872, Negombo Road, Mabola, Wattala. |
| Balasingham Ganesh | St. Thomas College, Mt. Lavinia. | 2A, Attapathu Road, Off Quary Road, Dehiwala. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| Mrs.Sahayammah Jeyarajah | C/Ramanathan H.L.C. Colombo 04. | 115/1, St. James Street, Muttuwal, Colombo 15. |
| Mrs. Lourdes Mary | MN/Vidatal Tivu R.C.T.M.School Vidatal Tivu, Mannar. | Kovil Kulam, Vidatal Tivu, Mannar. |
| Mr.Ibralebbe Mohamed Mansoor | C/Darus Salam M.M.V. Maligawatta, Colombo 10. | 'Hairoon Mancil', 77H, Thoro Lane,Sainthamaruthu-17 E.P. |
| Elayathamby Kailaivasan | Kalutara Muslim M.V. Kalutara. | Kalutara Muslim M.V. Kalutara. |
| Mrs. P.K.Sarma | St.Bernadate T.M.V. Chilaw. | 58/84, Wasalawalavu Lane, Kurunegala Rd., Chilaw. |
| Mr. Ibrahim Abdul Cader | A/Thurukkaragama M.V. Kahatagasdigiliya. | Kiribbawewa, Kahatagasdigiliya. |
| Mr.Sinna Lebbe Mohamed | GM/WAT/Al-Ashraff M.V. Mabola, Wattala. | 26, Raxapana, Malwana. |
| Mrs. Iyathurai Kouperumthevy | Al-Hidhaya Maha Vidyalaya, Colombo 10. | 5B Kassapa Road, Anderson Road, Kalibowila, Dehiwala. |
| SR.Ignesia Soosaipillai | C/Bambalapitiya R.C.T.M.V. Colombo 04. | Little Flower Convent, 58, Louries Rd., Colombo 04. |
| A.A.Noorul Naseeha | KL/ZahiraCollege, Dharga Town. | 65, Main Street, Dharga Town. |
| M.S.F.Nusaha | KL/Zahira College, Dharga Town. | 27, New Road, Dharga Town. |
| M.Thassim Mohamed Mujeebudeen | KL/ZahiraCollege, Dharga Town. | 119, Main Street, Dharga Town. |
| Suppiah Arumugam | CH/Holy Rosary T.Vid. Colombo 02. | 121, Muhandiram Road, Colombo 03. |
| Mrs.G.B.Wazeer Deen | Muslim Ladies College, Colombo 04. | 1/1, Windsor Avenue, Vandervert Place, Dehiwala. |
| Mrs. Mohamed Zubair Sithy Rizana | KL/Zahira M.Vid. Dharga Town. | 106, S.M.Road, Dharga Town. |
| Mrs.Daisy Fatima Manoharan | Wesley College, Colombo 09. | 51/56,Base Line Avenue, Colombo 09. |
| Miss.Vanaja Kailasapillai | P/Fathima B.M.M.V. Puttalam. | 41/3, Poles Road, Puttalam. |
| Shakeela Selvanayagam | P/Fathima B.M.M.V. Puttalam. | 34, Kadummaiyankulam Rd. Puttalam. |
| Miss.Aruppillai Malligadevy | P/Fathima B.M.V. Puttalam. | Lane No. 3, New Settlement Road, Puttalam. |
| Mohomed Sally Mohomed Rizuvi | KG/Napawala G.M.MV. Napawala, Avissawella. | 561, Meegaha Godalla, Talduwa, Avissawella. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| Mr.Noor Mohamed Naheem | P/.Fathima B.M.V. Puttalam. | FrojaVilla, Poles Road, Puttalam. |
| Miss.Selathurai Parwathythevy | P/Fathima B.M.V., Puttalam. | 41/3, Poles Road, Puttalam. |
| Mrs. K.Gunalingam | P/Fathima B.M.V., Puttalam. | 53, U.C. Tenement, Poles Road, Puttalam. |
| Mrs. Ameer Jahan Mohamed Meerasahib | GM/Biy/Al-Mubarack C.C. Malwana. | 213 A, Dompe Road, Khandiya Walawatta, Malwana. |
| Mr.Vijayaratnam Rajenthiram | Muslim M.V. Kalutara South, Kalutara. | 423/, Main Street, Kalurata. |
| Sinniah Rajasulojana | C/Vivekananda M.V. Colombo 13. | 49, New Chetty Street, Colombo 13. |
| Kandiah Vallipuram | BD/Haldummulla T.M.Vid., Haldummulla. | BD/Haldummulla T.M.V. Haldummulla. |
| Kandappan Uthayakumaran | KL/Al-Hassaniya M.V. Maggona. | 'Malaraham' Palugamam-I, Periyapora tivu. |
| Miss.Asothara Rajagopal | C/Vivekananda M.V. Colombo 13. | A1,F9, Bloemendhal Flats, Colombo 13. |
| Miss.Vasanthadevy kathiresu | C/Khairiya M.B.M.V. Colombo 09. | 55, Sangamitha Mawatha, Colombo 13. |
| Miss.Geetha Nadarajah | Wesley College, Base Line, Colombo 09. | 55, Mayfield Road, Colombo 13. |
| Mr.Aboothahir Mohamed Nijam | P/Zahira Central College, Puttalam. | 98, Nedukulam Road, Puttalam. |
| Mr.Selvaratnam Giritharan | P/Zahira Central College, Puttalam. | C/O, M.P.Moses Esqr., Lane Lane No.11, Marrikar Street, Puttalam. |
| Mr.Vaidialingam Mohan Subramaniam | C/Al-Nasser M.V. Colombo 14. | 61/01, Abdul Gaffoor Mw., Colombo 03. |
| Mr.Abdul Azeez Mohamed Riyal | Kuli/Madeena M.V. Pahamune (N.W.P.) | KU/Kureekotowa, Pahamune (N.W.P.) |
| Mr. Sittampalam Eswaran | KL/Al-Humaisara C.College, Beruwala. | AzeezManzil, Rock Land Rd., Maggona. |
| Mr.Ramanathan Sivanathan | C/Mutwal H.College, Colombo 15. | 127, Old Moor Street, Colombo 12. |
| Mr.Ahamed Lebbe Mohamed Ismail | NAT/Alhira M.V. Kottaramulla. | 94, Al-Hira Road, Kottaramulla. |
| Mrs.Sithy Sareena Mohamed Ameen | C/Muslim Ladies College, Colombo 04. | 15, Rupasingha Road, Nedimala, Dehiwala. |
| Mr.Mohamed Sanoon Mohamed Faisal | C/Hameed Al-Hussainie College Colombo 12. | 216/1, Obeysekara Town, Rajagiriya. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| Shanmugavadivelu Srikantha | St. Thomas College, Mt. Lavinia. | 11/12,Captains Garden, Maradana. |
| Mrs. Senthilmani Satkurunathan | C/Ramanathan H.L.College, Colombo 04. | 186/2,Sri Kathiresan Street, Colombo 13. |
| Sithy Fareena Mohamed Sarif | P/Karativu G.M.M.V. Ponparappi, Karativu, Puttalam. | P/Karativu Ponparappi, Puttalam. |
| Mohamed Mooseen Noorul Nihar. | KL/Al-Gassali M.V., Athulugama, Bandaragama. | 213,Galpotha,Atulugama, Bandaragama. |
| Miss.RajasivamSuganthy | C/Kollupitiya Methodist Govt. Tamil Mixed School, Colombo 03. | 41/20, Pickerings Road, Colombo 13. |
| Irulandy Pandurenganathan | R/St.John's T.M.V. Rakwana. | 80/18,Vivekannanda Hill, Colombo 13. |
| Abdul Hameed Mohamed Kalam | P/Al-Aqsa M.V. Kalpitiya. | Kandal Huliya, Puttalam. |
| Mrs. Thenmoli Ramachanthran | C/Ramanathan H.L. College, Colombo 04. | 24/8, Fredrica Road, Colombo 06. |
| Raislin Mohamed Hasmin | C/Obeyasekarapura G.T.M.S. Rajagiriya. | 94/3/10,Saunders Place, Gunasingapura, Colombo 12 |
| Mohammed Sareebu Salahudeen | NK/KOBAI /Walpothuwewa M.M.V. Weerapokuna. | Walpothuwewa, Weerapokuna. |
| Mrs. Vijayaluxmy Raveinthira-nathan | C/Vipulanantha Tamil Maha Vidyalayam, Colombo 09. | 225, Vijayakumarathunga Mawatha, Colombo 05. |
| Mrs.Sarojini Mariathas | NG/Wijayaratnam M.V. Negombo. | 53, Rani Mawatha, Ethuhala. |
| Miss.Sanoona Mohamed Shetiff | KL/Zahira College, Dharga Town. | 48, Masjid Road, Seenawa-the, Aluthgama. |
| Mrs. N.Balendran | C/Khairiya Muslim G's.M.V. Colombo 09. | 241-1/5, W.A.Silva Mw. Colombo 06. |
| Miss. Arulanantham Mascringhe Manuvella Rosabelle | C/Madampitiya St.Anthohy's Tamil Vid., Colombo 14. | 'Hostel Bernada', 61, Gregory's Rd., Col. 07. |
| Mr.Abdul Wahab Mohamed Niyas | Kuli/Ethungaha Kotuwa M.M.V. Ethungahakotuwa. | Main Road, Ethungahakotuwa. |
| Mr.Sivasubramaniam Jothylingam | C/Good Shepherd Convent, Colombo 13. | 35, Mayfield Road, Colombo 13. |
| Mrs.Sithy Yasmin Mohamed Munas | C/Royal College, Colombo 07. | 10/7, Sintha Place, old Waidya Rd. Dehiwala. |
| Miss.Gnaneswary Rasiah | C/Good Shepherd G.T.G.V., Colombo 13. | 55, Mayfield Road, Colombo 13. |
| Mrs.Vimaleswary Arulsothy | C/Bambalapitiya R.C.T.M.V., Colombo 04. | 58-3/2, 37th Lane, Colombo 06. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| Miss. Kalarathy Thambirasa | C/Good Shepherd G.T.G.V., Colombo 13. | 198, Modera Street, Colombo 15. |
| Mrs. Fareena Malik | KL/Al-Fahriya M.M.V. Thotawatta, Panadura. | 300, Egodauyana, Moratuwa. |
| Mrs.Dayagowry Kanesanathaguru | C/Dehiwala Tamil Vid., Dehiwala. | D1,Govt. Flats, Colombo 04. |
| Mrs. Grace Sadagopan | C/St.Anne's Balika Vid. Colombo 13. | 387/A, Havelock Road, Colombo 06. |
| Miss. Manjula Perumal | C/Good Shepherd Convent, Colombo 13. | 141,Sri Wickrama Mawatha, Colombo 15. |
| Miss.Bhavanithevi Sabarantnam | KL/China Fort M.B.M.Vid., Beruwela. | 39/1A, Dharga Road, China Fort, Beruwala. |
| Miss.Kalanithy Balasundaram | AL/Mumaisara C.College, China Fort, Beruwala. | C/O, V.Kandasamy, Police College, Kalutara. |
| Mrs. Sithy Fareeda Ziyard | R/C.C. Tamil Vid. Balangoda. | 'Ever Shine', 171/1, Main St. Balangoda. |
| Duraisamy Jeevanadan | C/St.Anthony's M.V. Hill Street, Colombo 13. | 35/3, Mayura Place, Colombo 06. |
| Mr.M.T. Iqbal | C/Mihindu Mawatta M.M.V. Colombo 12. | 9, Nelson Place, Colombo 06. |
| Mr.Rabel Morris Anton | R/Assalam M.V. Rakwana. | 203, Orange Field, Rakwana. |
| Mr.Soosaipillai Iruthayanathan | R/St.John's T.M.V. Rakwana. | R/St.John's T.M.V. Rakwana. |
| Mr.Sivagnansundaram Gnanasegaram | R/St.John's T.M.V. Rakwana. | R/St.John's T.M.V. Rakwana. |
| Mrs. Vinotha Chandrakumaran | C/Ramanathan H.L.C. Colombo 04. | 73/34A,Srisaranankara Rd., Dehiwala. |
| Mrs. Eswary Ravindran | C/Ramanatnan H.L.C. Colombo 04. | 31. Balapokuna Road, Kiriuapone, Colombo 06. |
| Miss.G.S.Arasaratnam | C/Ramanathan, H.L.C. Colombo 04. | G-2/6,Anderson Flats, Colombo 05. |
| V.Jeyanthe | C/Mihindu Mawatha M.M.V. Colombo 12. | 27, Nelson Place, Colombo 06. |
| Mrs. Violet Chandrasekeran | R/St. John's T.M.V. Rakwana. | Bandaranayaka Mw., Kottala, Rakwana. |
| Aliyar Mohamed Jamaldeen | C/Darussalam M.Vid. Colombo 10. | C.B.Cassim Road, Kattankudy 6(E.P.) |
| Mrs. Noorul Mureetha Abdul Gaffoor | C/Mihindu Mawatha M.M.V. Colombo 12. | 38, Getawalamulla, Colombo 09. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| Mrs. Mahurunisa Sarook | C/Mihindu Mawatha M.M.V. Colombo 12. | 33/3, Zavia Mosque Road, Colombo 09. |
| Mr.Canagasabai Sathananda | KL/Jeelan Central College, Henamulla, Panadura. | C 1/5, Anderson Flats, Park Road, Colombo 05. |
| Mrs. Bridget Mabel Phillippupillai | C/Dehiwala Tamil Vid. Dehiwala. | 208/1, Galle Road, Mt. Lavinia. |
| Miss.Rasool Bee Mohideen | C/Mihindu Mawatte Muslim M.V. 65, St.Sebastian St., Col. 12. | 36/2, Marties Lane, Colombo 12. |
| Mrs.Ahamad Dawood Fathumathy Zuhara | C/Hameed Al-Hussaini College, Hussainiya St. Colombo 12. | 127/A, Mayfield Lane, Colombo 13. |
| Mrs.Sivasothy Nadarajah | C/Ramanathan H.L.College, Colombo 04. | 21,Sri Tharmapala Road, Mt.Lavinia. |
| Mrs. N.Rasalingam | C/Ramanathan H.L.College, Colombo 04. | 40, Nelson Place, Colombo 06. |
| Mrs. S.Yogarajah | C/Ramanathan H.L.College, Colombo 04. | 37/1, 2/1, Perera Lane, Colombo 06. |
| Mrs.Senthoorvel Hemalatha | KL/Al-Humaisara Central College, | 25, C Block, 8th Lane, Colombo 03. |
| Mrs.Sivakumary Puvanarajah | C/Mahawatte Govt.T.M.School, Colombo 05. | 17C 2/6, Maural Place, Colombo 06. |
| Mr.Kanapathipillai Kanagaiah | C/Kotahena Tamil Vid. Colombo 13. | B2 F20, Bloemendhal Flat, Colombo 13. |
| Mr. Kandasamy Nithiyananthan | R/Kahawatta Tami. M.Vid. Kahawatta. | 2, Church Road, Kahawatta. |
| Mr.Aboosaly Mohammadu Nijam | KULI/Meddeketiy M.V. Alahitiyawa. | Dampitiya, Kekunagolla. |
| Mrs.Vasanthimala Navaratnarajah | C/Isipathana M.V., Colombo 05. | 15, Mart Terrace Road, Colombo 09. |
| Mrs.Mohamed Hussain Sithy Asiya | KG/WAR/Bbbul Hassan C.C. Warakapola. | 118/1, Horagolla, Warakapola. |
| Mrs. Thusnavis Peter | C/Vivekananda College, Colombo 13. | 52,Bridgets Lane, Mutal, Colombo 15. |
| Mrs. K.Paskaranathan | C/Isipathana M.Vid. Colombo 05. | 15, Park Road, Colombo 05. |
| Mrs. Sanoofa Jaufer | C/Muslim Ladies College, Colombo 04. | 107/6A, Quarry Road, Dehiwela. |
| Mr.Veluppillai Thavanathan | C/Vivekananda College, Colombo 13. | 82/112, Ramanathan Road, Colombo 13. |
| Mr. Alvan Mahalingam | K/Galaha Tamil M.Vid. Galaha. | 93/8, Modera Street, Colombo 15. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| Nadarajah Jeyasivathasan | CA/Hameed Al-Hussinie College, | 98/5, Walls Lane, Colombo 15. |
| Mr.Abdulsalam Mohamed Junaid | P/Thigali Govt.M.V. Thigali, Etalai. | C/O.S.D.Haseena, Hijra Mw. Kekunagolla. |
| Mr. Abdul Sukoor Lahir | KP/Yagamwela M.V. Dummalasuriya. | Ahadiya Academy, Dummalasuriya. |
| Oppilamany Vijayaratnam | G/Thunduwa Muslim M.V. Haburugala. | G/Thunduwa Muslim M.V. Haburugala. |
| Meeran Mohdeen Mohmad Yoosuf | P/Al-Aqsa M.Vid. Kalpitiya. | U.M.U. Road, Kalpitiya. |
| MohamedSultan Akbar | P/Zahira College Puttalam. | 1, 2nd Cross Street, Puttalam. |
| Miss.Uthayakumary Canagaratnam | GM/St.Anne's B.M.V. Wattala. | 22, 32nd Lane, Colombo 06. |
| Mrs.Ambikathevi Rajaratnam | KL/Al-Humaizara Central College Chinafort, Beruwela. | 18, Saman Mawatha, Ratmalana. |
| Mohamed Shareef Mahroof | GM/PS/Al-Badriya M.V. Kahatowita. | 35/F, Kahatowita. |
| Mrs. Kamaladevi Nadanasigamony | C/Hindu College, Colombo 04. | 37, Perera Lane,Colombo 06. |
| Mrs. Ithayamalar Sivanathan | C/Bloemendhal Govt.T.Vid. Colombo 13. | 43,Alwis Place, Colombo 13. |
| Rev.Sr.Amirtharani Xavier | BD/Haputala T.M.V. Haputale. | Holy Family Convent, Haputale. |
| Mrs. Devaki Arumaichandran | C/Wolfendhal Balika M.V. Colombo 13. | 560,Galle Road, Colombo 03. |
| Mrs.Thaha Ummah Larief | C/Mihindu Mawatha M.M.V. Colombo 12. | 338/2, Avissawalla Road, Kotikawatha, Angoda. |
| Miss.Yasothai Alalasuntharam | GM/PAS/Aligar M.V. Kal-Eliya. | 40, Lauries Road, Colombo 04. |
| Miss.Nalini Alalasunderam | KG/Babul Hason Muslim M.V. Warakapola. | 61,W.A. Silva Mawatha, Colombo 06. |
| Mrs.Asalambigai Kalyanasundaram | NG/Wijayaratnam M.M.V. Negombo. | 157/1, Sea Street, Negombo. |
| Mrs.A.K.H.Aseema | KG/WA/Nangalla M.V. Thulhiriya. | 153, 'Azeemas' Mangedara, Thulhiriya. |
| Ponnuthurai Arumaichandran | M/Katchilai Madu G.T.M.S. Odduchuddan. | 36, Middle Class Land L.B. Oddusuddan. |
| Ananthi Aiyadurai | C/Bambalapitiya R.C.T.M. Vid. Colombo 04. | 92/2, 5th Lane, Colombo 03. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| Miss.Kuhasanthini Rajasundram | MN/St.Xavier Boys M.M.V. Mannar. | C/O. L.S.Thurairatnam,Field Street, Mannar. |
| Manickalingam Thirulingam | KG/DE/Sri Kathireson T.M.Vid. Deraniyagala. | 125,Pickering's Road, Colombo 13. |
| Miss.Yoonus Badrul Inava | KG/WARA/Babul Hassen M.M.V. Warakapola. | Haniffa Hajiyar Mawatha, Mangedera, Thullhiriya. |
| Pushpawathy Joseph | C/R.C.T.M. Vidyalaya, Rajagiriya. | 33, Sri Wickrama Mawatha, Wattala. |
| C.Rajakoone | MN/Vidataltivu R.C.T.M. Vidataltivu, Mannar. | 129, Beach Road,Vidataltivu, Mannar. |
| Sivamuthu Vigneswaran | CH/St.Bernadette's T.M.V. Chilaw. | 69/B, Aluthwatte Road, Chilaw. |
| Mrs. Anne Mary Arokianathan | MN/St.Xavier's Boys' M.M.V. Mannar. | 82, Main Street, Mannar. |
| Mrs. N.Pirabuthevan | C/Wanathamullai R.C.T.M.S. Colombo 08. | 13 A, Vidiya Road, Mount-Lavinia. |
| Mrs. Pushparanee Neelalojanan | C/Royal College, Colombo 07. | 19, I.B.C. Road, Colombo 06. |
| Mrs. Lourdes Malini Wenition | MN/St. Xavier's Girls M.M.V. Mannar. | 'Ansala Illam' St.Sebastian Street, Mannar. |
| S.P.Vasantharajan | Dept. of Planning N.I.E. Maharagama. | 8,Somananda Road, Dehiwala. |
| Mrs. Mohammed Junaideen Fouzal Fareeda | GAM/PAL/Al-Azhar Central College Thihariya, Kalagadihena. | 124/1, Kandy Road, Thihariya Kalagadihena. |
| Miss.Sharmini Sivakumari Parasivam | C/Hindu College Colombo 04. | 8,Alfred HouseRoad, Colombo 03. |
| Mr.K.Senthoorvel | C/HinduCollege Colombo 04. | 3/3, Daya Road, Colombo 06. |
| Mr.M.Mohamed Siyaan | KAL/Nuraichcholai M.V. Nurachcholai. | C/O., Mahroof Hajiyar, Nuraichcholai. |
| Miss. Rewathy Vairamuthu | KAL/Nuraichcholai M.V. Nurachcholai. | C/O. Al-Haj. Mahroof, Nuraichcholai. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V. Arunakaran B.A

91 - 8567

## நன்றிக்குரியவர்கள்

1, எமது அழைப்பை ஏற்று விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த பிரதம விருந்தினர் திரு. A. D. குணசேகரா அவர்களுக்கும் செயற் திட்ட அதிகாரி திருமதி. சிதம்பரநாதன் அவர்களுக்கும் மற்றும் வருகை தந்த பெரியோர்களுக்கும்.

2. ஆசியுரை, வாழ்த்துரை வழங்கிய பெருந்தகைகளுக்கும்.

3. ஆக்கங்களைத் தந்துதவிய விரிவுரையாளர்கள், மற்றும் ஆசிரிய மாணவர்களுக்கும்.

4. விழா இனிதே நடைபெற ஒத்துழைப்பு வழங்கிய அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவர்க்கும்.

5. விழா சிறப்புடன் நடைபெற மண்டபம், இட ஒழுங்கமைப்புச் செய்து உதவிய கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரி அதிபர் ஆசிரியர்களுக்கும்

6. உணவு உபசரணை வழங்கிய விழா அமைப்புக்குழுவினருக்கும்.

7. மிகக்குறுகிய காலத்தில் இவ்விதழை சிறப்பாக அச்சுப்பதிப்பு செய்துதவிய வத்தளை அச்சகத்தாருக்கும்.

8. கலை நிகழ்ச்சிகளில பங்குபற்றிய மாணவர்களுக்கும் பொறுப் பாசிரியர்களுக்கும் பக்க வாத்திய இசைக் கலைஞர்களுக்கும். விளம்பரங்கள் தந்துதவிய அன்பர்களுக்கும்

9. எமது இருவருட பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறியை நடாத்துவதற்கு இடவசதிகளை வழங்கிய கொழும்பு முஸ்லீம் மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி றோ. க. த. க. வித்தியாலய அதிபர்களுக்கும்.அங்கு கடமையாற்றிய சிற்றூழியர்களுக்கும்

எமது உளமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

விழா அமைப்புக் குழுவினர்
பட்டப்பின் கல்வி டிப்ளோமா 1992-94
கொழும்பு நிலையம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ' A GOLDEN BUD BLOOMS ON THE SAVINGS SCENE '

# Ran Kekulu

A CHILDREN'S SAVINGS SCHEME FROM

## BANK OF CEYLON

**Bank of Ceylon**

Bankers to the Nation


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org